

# தமிழரசு












1-7-1986 ரூ. 1



## தமிழ்நாடு அரசின் 9 ஆண்டுப் பணிகள் தொகுப்பு மலர்



# இனிவருங் காலங்களிலும்
# ஏழைக் குழந்தைகள்
# கல்விக்கண் திறந்திட
# இலவசப்பாட நூல், சத்துணவு
# சீருடை வழங்கிட
# எழுச்சிமிக்க பணிகளாற்றிவரும்
# சரித்திர நாயகரே!
# இதய உணர்வுகளால்
# வணங்குகிறோம்!

**கோடம்பாக்கம் எம்.குமார்**
மேலாண்மை இயக்குநர்



## தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
"ஈ. வெ. கி. சம்பத் மாளிகை"
சென்னை-600 006



# அனைவருக்கும் சமவாய்ப்பு

"நீதி நிலைக்க வேண்டும் - அனைவருக்கும் சமவாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் - ஒரு வகுப்பை அழுத்தி இன்னொரு வகுப்பு முன்னேறும் என்ற காட்டுமுறை அழிக்கப்பட வேண்டும்" என்று இந்தச் சர்க்கார் நினைக்கிறது.

"என்றையத் தினம் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவன் சமநிலைக்குக் கொண்டு வரப்படுகிறானோ, அன்றுதான் சமூக நீதி ஏற்படும். அந்தச் சமூக நீதி இந்த அரசாங்கத்தில் நாட்டப்படுவதைத்தான் நான் விரும்புகிறேன்".

"எல்லோருக்கும் நண்பன் - எவருக்கும் விரோதியல்ல - இப்படித்தான் நாங்கள் இருக்க விரும்புகிறோம்".

—பேரறிஞர் அண்ணா



## தமிழ்நாடு அரசின் 9 ஆண்டுப் பணிகள் தொகுப்பு மலர்


திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - ஆனி 17
மலர் : 17 இதழ் : 1
1-7-1986

தமிழரசு

# அண்ணா வழியில் தமிழக அரசு

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர்

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் தமிழக அரசைத் தலைமை தாங்கி நடத்தி வருகிற பொறுப்பை, மக்களின் மகத்தான தீர்ப்பின் வாயிலாக நான் ஏற்று, ஒன்பது ஆண்டுகள் நிறைவுற்று, பத்தாவது ஆண்டு தொடங்குகிறது. தமிழகத்தின் வரலாற்றில் கடந்த ஒன்பது ஆண்டுகளில் பல முற்போக்கான சாதனைகளை எனது அரசு நிறைவேற்றியுள்ளது. அதன் காரணமாகவே தமிழக மக்கள் 1977 தேர்தலில் அளித்த ஆதரவைக் காட்டிலும் அதிகமான ஆதரவை 1980, 1984 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் தங்கள் வாக்குகள் வாயிலாகத் தெரியப்படுத்தியுள்ளனர்.

மாநில அரசுக்குள்ள நிதி ஆதாரம், அதிகார வரம்பு இவற்றுக்கு உட்பட்டு எனது தலைமையிலான தமிழக அரசு, முற்போக்குத் திட்டங்களையும் வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றி வருகிறது. அவையனைத்தையும் நான் விரிவாகக் கூற விரும்பவில்லை. மக்களுக்கு நன்கு தெரிந்தவைதான் அவை.

தன்னிறைவுத் திட்டம், குழந்தைகளுக்கு இலவச மதிய சத்துணவுத் திட்டம், குடிசைகளுக்கு மலிவு விலையில் மின்வசதி, ஏழை விவசாயிகளுக்கு மின் சலுகை போன்ற பல நல்ல திட்டங்கள் இன்று அனைத்து இந்தியாவிலும் தமிழகத்தின் புகழைப் பரப்பி வருகின்றன.

மாறி மாறி, வறட்சியும் வெள்ளமும் ஏற்பட்ட போதிலும், உணவு உற்பத்தியைப் பெருக்கி, விலை உயராது காத்து-மக்களுக்கு மலிவு விலையில் தட்டின்றி உணவுப் பொருள்களைக் கிடைக்கச் செய்து வருகிறோம்.

கல்வி, போக்குவரத்து, தொழில் வளர்ச்சி, மருத்துவ வசதி போன்ற எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் தமிழக அரசின் சாதனை மகத்தானதாகும்.


எல்லாவற்றையும்விட, பிரச்னைகள் இல்லாத மாநிலமாக - அமைதி தவழும் மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருவதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மைய அரசுடன் இணக்கமான நல்லுறவு கொண்டு, கோரிக்கைகளுக்காக வாதாடி, மாநில நலன்களைப் பேணிப் பாதுகாத்து வருகிற அரசு என்ற சிறப்புப் பெருமையும் தமிழக அரசுக்கு உண்டு.

இந்த அரசுக்கு, கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட சோதனைகள் பல. அரசியல் உள்நோக்கம் கொண்டு, உருவாக்கப்பட்ட எத்தனையோ கிளர்ச்சிகள்! போராட்டங்கள் ! அவையெல்லாம் இந்த அரசுக்கு மக்கள் அளித்த ஆதரவுக்கு முன்னால் தோல்வி கண்டன.

எனினும் எல்லாப் பணிகளையும் முடித்துவிட்டோம் என்று நாம் நிம்மதி அடைவதற்கில்லை. எடுத்துக்காட்டாக மக்களுக்கு - அதிலும் குறிப்பாக

வறட்சிப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு குடிநீர் கிடைக்கச் செய்யும் முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. விவசாயிகளுக்குப் பாசன நீர் கிடைக்க வும், மின் உற்பத்தியை அதிகரிக்கவும்



நாம் தொடர்ந்து கவனமுடன் பணி யாற்ற வேண்டியுள்ளது. வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள நலிந்த பிரி வினருக்கு அரசின் திட்டப் பலன்கள் போய்ச் சேருமாறு கண்காணிக்க வேண்டியுள்ளது. இவை நம்முன் உள்ள ஒரு சில அவசரக் கடமைகளாகும்.

இந்த மாபெரும் முயற்சிகள் அரசு நிர்வாக இயந்திரத்தினால் மட்டுமே முடியக் கூடியதல்ல.

இவற்றுக்கிடையே அமைதியைக் குலைக்கவும், வளர்ச்சிப் பணியின் வேகத்தைத் தடுக்கவும், அரசுக்கும் மக்களுக்கும் இடையே பேதங்களை உருவாக்கவும் ஒரு சில சக்திகள் முயற்சி செய்யக் கூடும்.

அரசும் அதன் நிர்வாக இயந்திர மும் தடையின்றி வேகமாக இயங்கத் தக்க ஒரு சூழ்நிலையே வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையாகும். 'அமைதி தவழும் இனிய சூழ்நிலை என்றும் நிலவும் ஒரு மாநிலம் இந்தத் தமிழகம்' எனும் நிலை இன்று போல் என்றும் நின்று நிலவிட அனைவரின் ஆதரவை நான் வேண்டுகிறேன்.

அரசின் தீவிரமான கொள்கைத் திட் டங்களை, பழுதின்றி நிறைவேற்றிடவும், மக்களின் நலனையே முன்வைத்து, தாமதமின்றி விரைந்து செயல்படவும், அரசின் அனைத்துப் பிரிவினரும் சபதம் ஏற்க வேண்டும்.

இந்த இரண்டு துறைகளிலும் நாம் பெறும் வெற்றியே, நமது எதிர்காலச் சிறப்புக்கு வழி வகுப்பதாக அமையும் என்பது என் கருத்து.

'தமிழரசு' இதழின் சிறப்பு மலருக்கு இதையே எனது செய்தியாக அளிக் கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க.



# கடமையில் சிறந்த காவல் துறை

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் மிகுந்த திறமையும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் கண்ணும் கருத்தும் பாரபட்சமுமின்றிச் செயல்படும் காவல் துறைக்கு ஊக்கமும் உரிய சாதனங்களும் அளிப்பது அரசின் கடமை என்பதை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த பத்தாண்டுகளில் வியத்தகு முறையில் கூடுதல் பணியாளர்களையும் சாதனை வகைகளையும் உரிய அளவில் வழங்கி உள்ளார்.

தமிழகத்தில் பெருநகரங்களை ஒட்டியுள்ள இடங்களில் குடியிருப்புகள் மிக அதிகமான முறையில் ஏற்பட்டு அந்தப் புதிய நகர்களில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கப் புதிய காவல் நிலையங்கள் திறக்கப்படவேண்டிய நியாயத்தை உணர்ந்த தமிழக அரசு, இந்த வகையில் நடவடிக்கைகள் எடுத்தது. 1976ல் 873 காவல் நிலையங்களும், 181 புறக்காவல் நிலையங்களும் இருந்த நிலை மாறி, தற்போது 984 காவல் நிலையங்களும், 167 புறக்காவல் நிலையங்களும் இருக்கும் நிலை ஏற்பட்டது. மொத்தம் கூடுதலாக 14,207 காவலர்களையும் நியமனம் செய்தது.

காவல்துறை நிர்வாக நலன் கருதி பெரியார், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், அண்ணா மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன.

காவல்துறையில் பெண் குற்றவாளிகளைக் கையாள்வதற்கும், திருவிழாக் காலங்களில் பெண்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், அரசு மருத்துவமனைகளில் வேலை செய்யவும் பெண்களே தகுதி உடையவர்களாக இருப்பார்கள் எனக் கருதிய அரசு 1980ல் 62 பெண் சார்பு ஆய்வாளர்களையும், 66 பெண் தலைமைக் காவலர்களையும், 624 பெண் காவலர்களையும் நியமித்துள்ளது.

1976க்கு முன்பு ஐந்து அணிகள் தான் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் இருந்தன. கடந்த பத்து ஆண்டுகளில் இவர்களின் செயல்திறனையும், நேர்மையையும், பணியில் காட்டிய செம்மையையும் கருத்தில் கொண்டு ஒரு அணி டெல்லியிலேயே மறுபணியில் முக்கியத் தலைவர்களின் பாதுகாப்புக்காகப் போடப்பட்டு உள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலுகாவில் தமிழக எல்லையில் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், தர்மபுரி, வட ஆர்க்காடு மாவட்டத்தில் தீவிரவாதிகளின் நடவடிக்கையை ஒடுக்கவும் நான்கு கூடுதல் அணிகள் 2,880 காவலர்கள் -- அதிகாரிகள் ஒப்பளிக்கப்பட்டு சேவை செய்து வருகின்றனர்.

சிறப்புக் காவல் படையில் 17 ஆண்டுகள் பணிபுரிந்தால்தான் மாவட்டத் தாலுகா காவல் நிலையங்களுக்கு மாற்றுவதற்குத் தகுதி பெற்றவராய்க் கருதப்பட்டனர். 1985ல் இந்த விதி தளர்த்தப்பட்டு 10 ஆண்டுகள் பணிபுரிந்தாலே அவர்கள் மாறுதலுக்குத் தகுதி ஆக்கப்பட்டார்கள்.

மக்களின் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்த காவல் குதிரைப் படைப் பிரிவு சென்னையில் மட்டுமே இருந்தது. இதனைப் புதிதாக மதுரை, கோயம்புத்தூர் நகரங்களுக்கும் ஏற்படுத்தப்பட்டது.

சென்னையில் மட்டும் இருந்த காவல் துப்பறியும் நாய்ப் பிரிவு திருச்சி, மதுரை, கோயம்புத்தூருக்குப் புதிதாக ஏற்படுத்தப்பட்டது.

குற்றவாளிகளைப் பிடிப்பதற்கும், இரவு ரோந்து போவதற்கும் சட்டம் ஒழுங்கைக் கட்டுப்படுத்தவும் மிகவும் இன்றியமையாதது ஊர்திகள் ஆகும்.


1976ல் மொத்த ஊர்திகளின் எண்ணிக்கை1,790 ஆக இருந்தது. 1986-ல் 2,618 ஆக உயர்ந்தது. இந்த உயர்வு 46விழுக்காடு ஆகும். மொத்தம் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 13,61,99,400-26.

சென்னையில் இருந்து ஓடிக்கொண்டிருக்கும் வாகனத்தில் இருந்து கொண்டு நாகர்கோவிலுக்கும் அப்பால் உள்ள ஊரில் போய்க்கொண்டிருக்கும் வாகனத்தில் உள்ள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நொடிப்பொழுதில் தகவல்களைத் தெரிவிக்க இயலும். இந்தச் சாதனங்கள் காற்றிலும் கடிதாகச் செல்ல நினைக்கும் சமூக விரோதிகளை மின்னலென வளைத்துப் பிடிக்க உதவுகின்றன.

தமிழகத்தில் உள்ள குற்றங்களும், குற்றவாளிகளின் விவர ஏடுகள் குற்றம் செய்த விவரம் முதலியன கனனி இயந்திரத்தில் (கம்ப்யூட்டர்) சேமிக்கப்பட்டு தமிழகத்தின் எந்த மூலையில் உள்ள காவல் நிலையத்தில் இருந்து நுண்அலை கொண்ட தனித்தனி மாவட்ட முடுக்கு முனையிலிருந்து கேள்வி கேட்பின், சென்னை கனனி இயந்திரம் முழு விவரத்தையும் அச்சுப் பதித்து குற்றவாளிகளின் பட்டியல், குற்றத்தன்மை ஆகிய

வற்றை நொடிப்பொழுதில் தந்து விடுகிறது.

அதேபோல் குற்றம் நடந்த இடத்தில் இருந்து கிடைக்கும் கைரேகை தமிழகத்தின் எந்த மூலையில் கிடைத்தாலும் உடன் சென்னையில் உள்ள இந்த இயந்திரத்தில் ஒப்பு நோக்கப்பட்டு குற்றத்தில் சம்பந்தப்படாத சந்தேக நபர்கள் உடனுக்குடன் வெளியே அனுப்பப்பட ஏதுவாகிறது. இந்தியாவிலேயே முதன் முதலாகத தமிழகத்தில்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப் பட்டது. இந்த இயந்திரங்களுக்கும் மற்றும் அதற்குரிய தளவாடங்களுக்கும் தமிழக அரசு செலவிட்ட தொகை ரூபாய் ஒரு கோடியாகும்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று காவல் துறையில் வீர தீரச் சாகசச் செயல்கள் புரிந்த காவலர்கள்-அதிகாரிகளுக்குத் தகுதியின் அடிப்படையில், ஆண்டுதோறும் 'அண்ணா பதக்கம்' வழங்கப் பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு 40 முதல் 60 வரை பதக்கங்கள் பெற்ற அளவில் இதுவரை 524 பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. பதக்கங்கள் பெற்றவர்களுக்குப் பணவூதியமும் தரப்படுகிறது. இந்தியாவிலேயே பண ஊதியம் அடங்கிய பதக்கம் இது ஒன்றுதான்.

1982ல் ஒவ்வொரு பொங்கல் நாளன்றும் தமிழகக் காவல்துறையில் தண்டனை ஏதும் பெறாமல் பத்து ஆண்டுக்காலம் சிறப்பாகச் சேவை செய்துள்ள தலைமைக் காவலர்கள்—காவலர்கள் மற்றும் இதே தகுதியுள்ளவர்களுக்கு ஆண்டுக்கு 1500 எண்ணிக்கைக்கு மேற்படாமல் பதக்கமும், மாதம் ரூ.20 தலைமைக் காவலர்களுக்கும், ரூ. 25 நாயக் முதல் அவில்தார் வரை வழங்கப்படுகிறது. 1985ல் 1262 பேருக்கும், 1986ல் 1359 பேருக்கும் இப்பதக்கமும், படியும் வழங்கப்பட்டன.

1982 முதல் சீருடை, ஆய்வாளர்கள் முதல் காவலர்கள் வரை இலவசமாகக் கொடுக்கப் படுகிறது. இதற்கு ஆண்டுக்கு ஆகும் செலவு ரூ. 25 இலட்சம் ஆகும்.

1984-85ல் காவலர்கள்—அதிகாரிகளின் தோற்றம் எழிலோடும் மிடுக்கோடும் இருப்பதற்காக டெரிக்காட்டன் சீருடைகள் வழங்கப்பட்டன. இதற்கு ஆண்டுக்கு ஆகும் கூடுதல் செலவு ரூ. 75 லட்சமாகும்.

1984ல் புயலிலும் மழையிலும் பணிபுரியும் காவலர்களுக்கு5,000 மழைக்கோட்டும், 3,500 இணை மழை புதைமிதியடிகளும் வழங்க ரூ. 7½ லட்சம் வழங்கப் பட்டது.

1985-86ல் காவலர்கள் மற்றும் ஊர்க் காவலர்களின் சீருடைகளைக் கொள்முதல் செய்து வழங்குவதற்காக ரூ.3.18 கோடி செலவிடப்பட்டது.

காவல்துறையில் 1976க்கு முன்பு சூரியனையே பார்க்காத அமைச்சுப் பணியாளர்கள் இருந்தனர். காரணம், அவர்கள் வேலைப்பளுவின் காரணமாக சூரிய உதயத்திற்கு முன்பே அலுவலகம் வந்து இரவே வீட்டிற்குத் திரும்புவர். அவர்களின் துயர் துடைக்கத் தாயுள்ளம் படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் 690 கூடுதல் அமைச்சுப் பணியாளர்களை வழங்கி, அமைச்சுப் பணியாளர்களின் இல்லங்களில் மகிழ்ச்சி பொங்கச் செய்துள்ளார்.

10 ஆண்டுகளில் காவலர் குடியிருப்பு என்று எடுத்துக்கொண்டால் ரூ. 13.40 கோடிக்குக் குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டுள்ளன என்பது தெளிவாகும்.

தமிழக அரசின் காவலதுறையில் நீதியுடனும் நேர்மையுடனும் பணியாற்றிய காவலர்கள்—அதிகாரிகள் பணி ஓய்வு பெறும்போது தங்க வீடு இன்றி அவதியுறும் நிலையைப் போக்க 1980ல் ரூ.1 கோடி மூலதனத்துடன் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் அமைக்கப்பட்டது.

திருச்சி மாவட்டம் நாவற்பட்டு கிராமத்தில் 670 வீடுகள் ரூ. 1.61 கோடியில் கட்டப்பட்டு 15.9.1985ல் மாண்புமிகுமுதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். அனைத்து வீடுகளும் ஒதுக்கப் பட்டுவிட்டன. கோவை மாவட்டம் கணபதி என்னுமிடத்தில் 432 வீடுகள் ரூ. 1.94 கோடி செலவில் கட்டப்பட்டு வீடுகள் கட்டிமுடிக்கும் தறுவாயில் இருக்கின்றனவேலூர் தொரப்பாடியில் ரூ. 35 லட்சம் செலவில் வீடுகள் கட்டப்பட்டு முடிவுறும் தறுவாயில் இருக்கின்றன.

அரசு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1 கோடி காவல்துறைக்கு வழங்கி, தகுதியுள்ள காவலர்களுக்கு இந்த வீடுகளை வாங்க முன்பணமாக வழங்கப்படுகிறது. எல்லா மாவட்டங்களிலும் வீடுகள் கட்டுவதற்காக நிலங்களைத் தேர்ந்தெடுத்து அந்த நிலங்களை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காவல்துறையில் ஆய்வாளர்கள் முதல் காவலர்கள் வரை இன்றியமையாப் பண்டங்களான அரிசி, எண்ணெய், சர்க்கரை, பருப்பு, மைதா, கோதுமை போன்றவைகளைக் குடும்பத்தில் ஒரு வயது வந்த நபருக்கு ரூ. 21.11 வரை ஊக்கதரவுத் தொகையாக அரசு அளித்து இப்பண்டங்களை வாங்கி விநியோகம் செய்து வருகிறது.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப் படும்பொழுது 1,88,308 பேர் பயனடைந்து ஆண்டுக்கு ரூ.2 கோடி செலவானது. தற்பொழுது காவலர்களின் எண்ணிக்கை உயர்வால் 2,27,020 பேர் பயனடைந்து செலவு ஆண்டுக்கு ரூ. 3 கோடியை எட்டியுள்ளது. பணியின் நிமித்தம் காவலர்கள் வெளியூர் சென்றாலும் அவர்கள் குடும்பத்தினர் இந்த இன்றியமையாப் பண்டங்களை உரிய நேரத்தில் பெறுவதால் அவர்களுக்கு மிகவும் பயன் தரத்தக்கதாக உள்ளது.

பணியில் கண்ணும் கருத்துமாக இருந்து உயிரையும் துச்சமென மதித்து சமூக விரோதிகளை/குற்றவாளிகளைக் கைது செய்யும்போது உயிர் மற்றும் உடல் உறுப்புகளை இழக்கும் காவலர்களின் பணியைப் பாராட்டியும், அவர்களுக்கு நிதி உதவி அளிக்கவும் ஒரு திட்டத்தைத் தமிழக அரசு 1979ல் அமல்படுத்தியது. அதன்படி 1979 முதல் 1986 (31.3.86) வரை 156 பேருக்கு ரூ. 10.37 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

பணியில் உள்ள காவலர்கள் அவர்கள் குடும்பங்களின் நலனுக்காகக் குழந்தைகளின் பட்டப் படிப்புக்கு நிதி உதவி, நீண்ட நாள் நோயில் இருப்பவருக்கு, இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய இன்னும் மற்ற சேமநலத் தேவைகளுக்காக, தமிழ்நாடு காவல் சேமநலநிதி ஏற்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் அரசு இந்த நிதிக்கு அளித்து வந்த மானியத்தை அதிகப்படுத்தியது விவரம் வருமாறு: 1983-ல் 1.5 இலட்சத்திலிருந்து 2.5 லட்சம் வரை, 1984-ல் 2.5 இலட்சத்திலிருந்து 3.5 லட்சம் வரை, 1985-ல் 3.5 இலட்சத்திலிருந்து 5.0 லட்சம் வரை.

தமிழ்நாட்டில் ஊர்க்காவல் படையில் 10,010 ஆண் ஊர்க்காவல் படையினரும் சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் 550 பெண் ஊர்க்காவல் படையினரும் இருக்கின்றனர். இந்த ஊர்க்காவல் படையினர் முதலில் 45 நாட்கள் கவாத்து ஆயுதங்களைக் கையாளுதல் ஆகிய பயிற்சிகளுக்குப் பிறகு மாதம் 4 முறை அல்லது சிறப்பு அழைப்பின்பேரில் அந்தந்த நிலைமைக்குத் தக்க பணிகளுக்கு அழைக்கப்படுகின்றனர்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஊர்க்காவல் படை அமைப்பு, காவல்துறை அமைப்புக்கு ஒரு துணை அமைப்பாக இயங்குகிறது. 1978ல் அரசு ஊரகக் காவல்படையைக் கடற்கரை ஓரப் பகுதிகளில் ஏற்படுத்தியது. அவர்களின் முக்கியப் பங்கு புயல், மற்றும் வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்திற்குக் கடற்கரை ஓரத்தில் வசிக்கும் மக்கள் உள்ளாகும்போது அரசு நிர்வாகத்திற்கு உறுதுணையாக நின்று வேகமாகச் செயல்பட்டு மக்களின் இன்னல்களை நீக்குவது அந்த வகையில் இந்த அமைப்பு தமிழ்நாட்டுக்குப்பெரிய அளவில் நல்ல பெயரைத் தேடித் தந்திருக்கிறது.

இது தவிர அரசு, 1978ஆம் ஆண்டு கடல் ஓரப் பகுதிகளில் வாழும் மக்கள் துயர்துடைப்புப் பணிக்காக 10 இயந்திரப் படகுகளை வழங்கியது. அவைகள் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்கள் அலுவலகங்களிலும், சென்னையைப் பொறுத்தவரையில் ஆணையர் அலுவலகத்திலும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் வடமேற்குப் பருவ காலங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இது தவிர துயர்துடைப்புப் பணிக்காக 1983ல் அரசு 12 தனி வாகனங்களையும், ஜீப்புகளையும் வழங்கியுள்ளது. ஊர்க்காவல் படையினை நல்லமுறையில் ஊக்குவிக்கும் வகையில் அரசு சமீபத்தில் அவர்களின் பணி அழைப்புப் படியை ரூ. 6 லிருந்து ரூ. 10 ஆக உயர்த்தியிருக்கிறது.

இந்தியாவிலேயே முதன்முறையாக, தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர், ''மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்புப் பதக்கம்'' வழங்கும் முறையைக் காவல் துறையினருக்கு வழங்குவது போன்று ஊர்க்காவல் படையினருக்கும் 1982லிருந்து வழங்க ஆணை பிறப்பித்தார்.

இந்தத் திட்டத்தின்கீழ் இந்தப் பதக்கத்தைப் பெறுகிறவர்களுக்குப் பண முடிப்பு வழங்கப்படுவதால், அவர்கள் அவ்வகையில் பயனடைந்து இக்களச் சேவையில் குறிப்பாக வெள்ளம், புயல் போன்ற இயற்கையின் சீற்றத்திற்கு மக்கள் உள்ளாகும்போது மிகுந்த ஆர்வத்துடன் துயர் துடைப்புப் பணியில் பாராட்டத்தக்க வகையில் வீரச்செயல்கள் புரிந்துள்ளனர்.

குடிமைப் பாதுகாப்பு என்ற தத்துவம், போர்க் காலங்களில் மக்களே நிர்வாகத்திற்கு உதவும் வகையில் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் உணர்வு மற்றும் பொறுப்பு உணர்ச்சி பெற வேண்டுமென்ற அடிப்படையில் தோன்றியது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த அமைப்பு 1976ல் தான் முதன் முதலில் தோன்றினாலும், 1978 வரையில் அதற்கு உரிய சிந்தனைகளோ, செயல்களோ ஏற்படவில்லை.



1978க்குப் பிறகுதான் மாநில அரசின் பரிந்துரைகளுக்கொப்ப மத்திய அரசு சென்னை நகரை இந்தத் திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட நகரமாக ஆக்கியது. அந்த வகையில் அதற்குரிய செயல் திட்டங்களுக்கு வடிவு கொடுத்து சென்னை மற்றும் புறநகர்ப்பகுதிகளிலுள்ள முக்கியமான ஆலைகள், உதாரணமாக மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கல்பாக்கம் அணு மின் உற்பத்தி ஆலை மற்றும் மீனம்பாக்கம் விமானநிலையம் போன்ற அமைப்புகளுக்குப் பாதுகாப்பு தரும்வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு அந்தந்த அமைப்புகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைகளில் வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களைக் குறைக்கவும், விபத்துக்களால் அவதியுறும் பொதுமக்களுக்கு உடனுக்குடன் உதவி செய்யவும் தமிழக அரசு 1983-ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைப்போக்குவரத்து ரோந்து அமைப்பினையும், விபத்துக்குள்ளான மக்களுக்கு உதவும் வகையிலும் நெடுஞ்சாலைகளில் குறிப்பாக சென்னை திண்டுக்கல் நெடுஞ்சாலைகளில் 10 அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

1981-ல் 23 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தில் அகில இந்தியக் காவல் விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடத்தப்பட்டன. அகில இந்திய அளவில் தமிழகக் காவல் துறையினர் மாநிலங்களுக்கிடையில் நடந்த போட்டிகளில் தங்கள் முத்திரையைப் பதித்து பல வெற்றிகளை ஈட்டியுள்ளனர்.

1976-ல் ரூ. 30 கோடியாக இருந்த காவல்துறைச் செலவு, 1986ல் ரூ.100 கோடியை எட்டிவிட்டது. இருப்பினும் காவலர்கள் எண்ணிக்கை தமிழ்நாட்டு மக்கள் தொகையுடன் ஒப்பு நோக்குமிடத்து 1:1000 என்ற விகிதத்தில் இருப்பதால், காவல் துறையினர் அல்லும் பகலும் அயராது உழைக்கின்றனர்.

குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் தமிழகக் காவல் துறை இந்தியாவிலேயே மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதால், தமிழக மக்கள் பயமின்றி அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது!



# நலிந்தோர்க்கு நிதியுதவி

பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களில் இரு அம்சங்கள் இணைந்துள் ளன. ஒன்று அரசுத்துறைகள் அளிக்கும் மானி யம், பிறிதொன்று வங்கிகள் அளிக்கும் கடனு தவி. அரசுக்கும் வங்கிகளுக்குமிடையே சிறந்த ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்குத் தலை மைச் செயலகத்தில் 1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ''நிறுவன நிதித்துறை'' ஏற்படுத்தப்பட்டது. முதன்மை வங்கிகள் மாவட்டங்களுக்கும் மாநிலம் முழுவதற்கும் நீண்டகாலக் கடன், ஆண்டுக் கடன் வழங் கும் திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுத் தும் பணியை இத்துறை கண்காணிக்கிறது. சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு உதவு வதற்காக வங்கிக் கடன்களைத் திரட்டுவதில் இத்துறை உறுதுணையாக உள்ளது.

**முன்னுரிமைத் துறைகளுக்கு வழங்கப்படும் நிறுவன நிதி உதவி**

கீழ்க்கண்ட வகைளுக்குக்கடன்கள் அளிப் பதற்கான ஆண்டுச் செயல் திட்டங்கள் மாவட்டத்திலும் தயாரிக்கப்படுகின்றன.

* பயிர்க்கடன்கள், பண்ணைக் கருவிகள், நில மேம்பாடு, கிணறு, பம்புசெட் போன்ற சிறு பாசனங்கள்.
* பால்பண்ணை, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பட்டுப் புழு வளர்ப்பு, செம்மறி ஆடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு.
* சிறு தொழில் துறை, கிராமக் கைவினைஞர் கள், கைத்தறி ஏனையவை.
* தொழில் செய்வோர், சுயவேலை செய் வோர், சிறு வியாபாரம், சைக்கிள் ரிக்ஷா ஆட்டோ, டாக்சி போன்ற சிறிய அள விலான பேருந்து வண்டிகள், வீட்டு வசதி, கல்வி.

மேற்கண்ட முன்னுரிமைப் பிரிவு களுக்காக ஒதுக்கப்படும் கடன் தொகை ஆண்டிற்காண்டு கீழ்க்கண்டவாறு அதிகரித் துள்ளது.


| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1982 | 547.00 |
| 1983 | 572.00 |
| 1984 | 753.00 |
| 1985 | 1024.65 |

1985ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதி யில் மாநிலத்திலுள்ள முன்னுரிமைத் துறை களுக்கு வணிக வங்கிகள் கொடுத்த கடன் நிறுவனத் தொகை ரூ. 1,902 கோடியாக இருந்தது. இது 1984 ஆம் ஆண்டு ஜூன் திங் கள் இறுதியில் இருந்ததைக் காட்டிலும் 32 சதவீதம் அதிகரித்ததாகத் தெரிகிறது. இதில் வேளாண்மைக்கு நேரடியாக வழங்கியது ரூ. 738 கோடியாகும். நலிந்த பிரிவினருக்கு வழங் கியது சுமார் ரூ. 471 கோடியாகும்.

**மாவட்டக் கடன் வழங்கு திட்டங்களும், ஆண்டுச் செயல் திட்டங்களும்**

வளர்ச்சிப் பணிகளில் ஒவ்வொரு மாவட் டத்திலுமுள்ள வணிகக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தின் திட்டங்களைப் பிரதிபலிக்கக் கூடிய மாவட்டக் கடன் வழங்கு திட்டங் களைத் தயாரிக்கும் திட்டப் பணி, 1978 ஆம் ஆண்டிலிருந்தே செயற்படுத்தப்பட்டு வரு கிறது. சென்னை மாவட்டம் பெருநகர்ப்பகுதி யாக இருப்பதால் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. கடன் வழங்கு திட்டம் நீண்ட காலத்திற்குத் தயாரிக்கப்படு கிறது. ஆண்டுச் செயல் திட்டம் ஒவ்வொ ராண்டும் தயாரிக்கப்படுகிறது. ஆண்டுச் செயல் திட்டத்தின் கீழ் வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் செயல் திறன் பாராட்டத்தக்க வகையிலுள்ளது. நிதி ஒதுக்கீடுகள் ஆண்டிற்காண்டு அதிகரித்துள் ளன. அவற்றின் விவரம் வருமாறு:

| துறை | 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|
| | ஆண்டுச் செயல் திட்ட ஒதுக்கீடுகள் (ரூபாய் கோடியில்) | | |
| வேளாண்மைத் துறை | 401 | 484 | 611 |
| தொழில்துறை | 93 | 150 | 188 |
| பணி வசதிகள் துறை | 72 | 116 | 165 |
| மொத்தம் | 566 | 750 | 964 |



1985 ஆம் ஆண்டு திட்ட இலக்கு விஞ்சப்பட்டது. மேலும் முன்னுரிமைத் துறைகளுக்கு 1,025 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது 1983-ல் வங்கிகள் வழங்கிய முன்னுரிமைப் பிரிவுக்கான கடன் தொகையில் இரண்டு பங்காகும். 1986 ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டம் 1985-ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டத்தை விட கணிசமாக உயர்ந்துள்ளது. 1986 ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டத்தின் திட்ட வாரியான மாவட்ட வாரியான புள்ளி விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

**சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்குக் கடன்கள்:**

சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்குக் குறைந்த வட்டிக்கு நீண்ட காலத் தவணைகளில் கடன் வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவும் பொறுப்பு, வங்கிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வங்கி வழங்கும் மொத்தக் கடன் தொகையில் குறைந்தது 10 சதவீதமாவது சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி விதிமுறை நியதியினை வகுத்துள்ளது. வங்கிகள் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் குறைந்தது ஒரு சதவீதக் கடன் தொகையானது குறைந்த வட்டி வீதத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடப் பழங்குடியினருக்கும் கிராமப் பகுதிகளில் ஆண்டு வருமானம் 2,000 ரூபாய்க்கும் நகர்ப்பகுதிகளில் 3,000 ரூபாய்க்கும் குறைவான வருமானம் பெறும் ஏனைய நலிந்த பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டுமென்பது மற்றொரு விதிமுறை நியதியாகும். அவ்விதம் ஒதுக்கப்பட்ட கடன் தொகை பொருத்தமானவர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யக் கடன் தேவைப்படும் நபர்கள் யார் என்று கண்டறிந்து, வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்கு உதவ வேண்டியது அவசியமாகும். இது நிறுவன நிதித்துறையின் முக்கியப் பணியாகும்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்கள் சுய வேலையில் ஈடுபடுவதற்கு உதவும் வண்ணம் குறைந்த வட்டிக்கு நீண்ட காலத் தவணைகளில் கடன்கள் அளிக்கப்படுகின்றன. சில குறிப்பிட்ட இனங்களுக்கு மானியமும் அளிக்கப்படுகின்றது. வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள நலிந்த பிரிவினர் மேம்பாட்டுக்காக ஒவ்வொரு ஆண்டும் அளிக்கப்படும் கடனுதவி மேன்மேலும் அதிகரித்து வருகிறது. குறைந்த பட்சம் ரூ. 500ல் இருந்து உயர்ந்த பட்சம் ரூ.5000 வரை சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் வாழ்வு நலம் பெறக் கடன் வழங்கப்படுகிறது. விவரம் கீழ் வருமாறு:

| | பயனடைந்தோர் எண்ணிக்கை (இலட்சத்தில்) | கடன்தொகை (ரூபாய், கோடியில்) |
|---|---|---|
| 1983-84 | 3.76 | 93.76 |
| 1984-85 | 8.31 | 240.00 |
| 1985-86 | 9.93 | 300.00 |

**வெள்ள நிவாரணம்:**

1985 ஆம் ஆண்டில் சென்னை மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட நலிவுற்ற பிரிவினருக்கு உதவுவதற்காகவும், அவர்கள் மீண்டும் அவர்களது பணியைத் தொடங்கி மறுவாழ்வு பெறவும் நகரிலுள்ள அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களும் கடன் உதவி அளித்துள்ளன.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 24,003 பேருக்கு ரூ. 2.44 கோடி கடன் உதவி அளிக்கப்பட்டது.

கடன் வழங்கு திட்டங்களில் பலவற்றில் இத்துறை ஆற்றி வரும் பணிகளில் முன்னேற்றம் காணப்படுகின்றது. உதாரணமாக முன்னுரிமைப் பிரிவுகளுக்காக 1982 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 547 கோடி படிப்படியாக முன்னேறி 1985 ஆம் ஆண்டு ரூ.1,024 கோடி கடன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இது போன்றே மாவட்டக் கடன் வழங்கும் திட்டங்களில் பல துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியீடு 1984 ஆம் ஆண்டு ரூ.566 கோடியாகும். 1986 ஆம் ஆண்டு இத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு ரூ.964 கோடியாக உயர்ந்துள்ளது. சமுதாயத்தின் நலிவுற்றோருக்குக் கடன் வழங்குவதில் 1983-84 ஆம் ஆண்டில் 3.76 லட்சம் நபர்கள் பயன் அடைந்துள்ளார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 93.76 கோடியாகும். 1985-86-ல் ரூ. 300 கோடி கடன் வழங்கப்பட்டு 9.93 இலட்சம் நபர்கள் பயன் அடைந்துள்ளார்கள். இந்த முன்னேற்றம் 1983ஆம் ஆண்டிலிருந்து கணக்கிடும்போது 200 சதம் உயர்ந்துள்ளது.



# மின் உற்பத்தியில் தன்னிறைவு

வளர்ந்து வரும் தமிழகத்தில் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், மின்சாரம் இன்றியமையாததாகும். வளரும் தேவைகளை முழுவதுமாகப் பூர்த்தி செய்யுமளவிற்கு மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பதும், மின்சக்தியின் பயன்களை ஏழை, எளியவர்களும், முக்கியமாக வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களும் பெற வேண்டும் என்பதும் இவ்வரசின் குறிக்கோளாகும்.

மின் துறையில் கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் விவரங்கள் அட்டவணை 1ல் தரப்பட்டுள்ளன.

மின் உற்பத்தியில் தமிழ்நாடு பற்றாக்குறை மாநிலமாக இருந்து வந்ததைக் கருத்தில் கொண்டு மின் உற்பத்தித் திட்டங்களுக்கு இவ்வரசு முன்னுரிமை வழங்கி வருகிறது. நாலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மின் திட்டப் பணிகளுக்காகச் சராசரி ஆண்டொன்றிற்கு ரூ. 43 கோடி அளவே செலவு செய்யப்பட்டது. ஆனால் இவ்வரசு பொறுப்பேற்றபின் மின்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு கடந்த ஒன்பது ஆண்டுகளில் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 1985-86ல் ரூ. 333 கோடி செலவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒன்பது ஆண்டுக் காலத்தில், இந்த மாநிலத்தில் 1475 மெ.வா. அளவிற்குப் புதிய மின் திட்டங்கள் பயனுக்கு வந்துள்ளன. அவற்றின் விவரங்கள் அட்டவணை 2-ல் தரப்பட்டுள்ளன.

இந்தப் புதிய மின் நிலையங்கள் பயனுக்கு வந்ததன் பயன் தமிழ்நாட்டின் மின் உற்பத்தித் திறன் 2,364 மெ.வாட்டிலிருந்து 3,809 மெ.வாட்டிற்கு அதிகரித்துள்ளது. 1976-77-ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்குக் கிடைத்த மொத்தமின் சக்தியின் அளவு 8,350 மி.யூ. 1985-86-ஆம் ஆண்டு இது 13,273 மி.யூ. ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தித் திறன் சுமார் 36 விழுக்காடு என்ற அளவே இருந்து வந்தது. இம்மாநிலத்தில் மின் பற்றாக்குறையைப் போக்க மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தித் திறனைப் பெருமளவில் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அனல் மின் நிலையங்களின் மேம்பாட்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன. இதன் மூலம் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் 36 விழுக்காடு என்ற அளவிலிருந்து 1985-86-இல் 52 விழுக்காடு என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. இதேபோல் தூத்துக்குடி அனல் மின் நிலையமும் 1980-81-ல் 40 விழுக்காடு என்ற அளவிலிருந்து1985-86-ல் 65.5 விழுக்காடு என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.

எண்ணூர் அனல் மின் நிலையத்தின் உற்பத்தி அதிகரித்துள்ளதற்காக ரூ. 4 இலட்சமும் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் உற்பத்தி அதிகரித்துள்ளதற்காக ரூ. 5.6 இலட்சமும் பரிசுத் தொகையாக மத்திய அரசு அளித்துள்ளது என்பது மிகவும் பெருமைப்படக் கூடியதாகும்.

ஏழாவது திட்டக் காலத்தில் மின்சார வளர்ச்சிக்காக ரூ. 2,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஆறாவது திட்டக் காலத்தில் செலவிடப்பட்ட தொகையைப்போல் இரண்டு மடங்கிற்கும் அதிகமாகும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மாநிலம் செலவு செய்யும் ரூ. 5,750 கோடியில் இது 35 விழுக்காடு அளவாகும். இத்திட்டக் காலத்தில் சுமார் 1,416 மெ.வா. நிறுவுத்திறன் கூடுதலாக இயக்கத்திற்கு வரும்.


நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில், தமிழகம் அண்டை மாநிலங்களிலிருந்து கணிசமான அளவு மின்சாரத்தை வாங்கிக் கொண்டிருந்தது. இந்த நிலை மாறி தற்பொழுது ,தமிழ்நாட்டிற்குத் தேவையான மின்சாரம் முழுவதும் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. மின்உற்பத்தியில் தன்னி

றைவை நோக்கித் தமிழகம் சென்று கொண்டுள்ளது.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, குறிப்பாக குறைந்த வருவாயுடைய விவசாயிகளுக்கு எல்லா வகைகளிலும் உதவி செய்ய வேண்டும் என்ற இவ்வரசின் கொள்கைக்கிணங்க பம்பு செட்டுகளுக்கு மின் கட்டணம் ஜூலை 1976-ஆம் ஆண்டுக்கு முன் 16 காசாக இருந்தது 14 காசாகக் குறைக்கப்பட்டது.

பின்பு 1979ஆம் ஆண்டில், இக்கட்டணம் சிறு விவசாயிகளுக்கு 12 காசாகக் குறைக்கப்பட்டது. மற்ற விவசாயிகளுக்கு 15 காசாக மாற்றப்பட்டது. **அதன் பிறகு 15.9.84 லிருந்து விவசாய நிலத்தில் பெறும் வருமானத்தை மட்டுமே சார்ந்துள்ள குடும்பங்களைக் கொண்ட சிறு விவசாயிகளுக்கு மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.**

கிராமப்புறங்களில் வாழும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு மின்சக்தியின் நன்மைகள் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு விளக்குத் திட்டத்தை இவ்வரசு 1979இல் துவக்கி வைத்தது. இதன்மூலம் இதுவரை 7.1 இலட்சம் குடிசைகள் பயன் பெற்றுள்ளன. 15.9.84 முதல் இத்தகைய மின் இணைப்புகளுக்கு மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது.



சேர்வலாறு அணையும், மின் நிலையமும்.

இந்தியாவிலேயே முதல் முறையாகத் தூத்துக்குடியில் 550 கி.வா. திறனுடைய ஒரு காற்றாடிப்பண்ணை நிறுவப்பட்டு 1986ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. மலைவாழ் மக்கள் பயனடையும் வகையில் மலைப்பாங்கான இடங்களில் உள்ள 33 கிராமங்களுக்கு சூரிய ஒளிகொண்டு இயங்கும் தெரு விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன.


மின் பற்றாக்குறையை அறவே நீக்கி, மின் உற்பத்தியில் தமிழ்நாடு தன்னிறைவு அடைய வேண்டும் என்பதே இவ்வரசின் நோக்கமாகும். இந்த முயற்சியில் அரசு வெற்றி பெறும் வகையில் விரைந்து செயலாற்றி வருகிறது.

## அட்டவணை—1

| விவரம் | 1976—77 | 1985—86 |
|---|---|---|
| நிறுவுத்திறன் (மெ.வா) | 2364 | 3809 |
| மின் உற்பத்தியும் கொள்முதலும் (மியூ) | 8350 | 13273 |
| தனிநபர் பயன்படுத்தும் அளவு (யூ) | 146 | 203 |
| நுகர்வோர் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 3223 | 62.00 |
| துணைமின் நிலையங்கள் (எண்களில்) | 304 | 461 |
| மின்பங்கீட்டு நிலையங்கள் (எண்களில்) | 42,499 | 64969 |
| மொத்த கம்பித்தொடர் (கி.மீ) | 2,85,508 | 3,73,825 |
| மின்வசதி பெற்ற கிராமங்கள் (எண்களில்) | 15,516 | 15,715 |
| மின்வசதி பெற்ற ஆதிதிராவிடர் குடியிருப்புகள் (எண்களில்) | 24,608 | 26,211 |
| மின்வசதி பெற்ற பம்பு செட்டுகள் (எண்களில்) | 7,84,643 | 10,74,184 |
| மின்வசதி பெற்ற குடிசைகள் (எண்களில்) | — | 7,10,115 |

## அட்டவணை—2

| திட்டத்தின் பெயர் | நிறுவுத் திறன் (மெ. வா) | இயக்கிவைக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| குந்தா புனல்மின் திட்டம் 3-ஆம் நிலை 3-ஆம் பிரிவு | 30 | 1978-பிப்ரவரி |
| சுருளியாறு புனல் மின்திட்டம் | 35 | 1978-ஆகஸ்ட் |
| குந்தா புனல் மின்திட்டம் 4ஆம்நிலை விரிவாக்கம் | 50 | 1978-அக்டோபர் |
| தூத்துக்குடி அனல்மின் நிலையம் முதல் பிரிவு | 210 | 1979-ஜூலை |
| தூத்துக்குடி அனல் மின்நிலையம் 2ம் பிரிவு | 210 | 1980-டிசம்பர் |
| தூத்துக்குடி அனல்மின் நிலைம் 3-ஆம்பிரிவு | 210 | 1982-ஏப்ரல் |
| சேர்வலாறு புனல் மின்திட்டம் | 20 | 1986-மார்ச் |
| மொத்தம் | 795 | |
| கல்பாக்கம் அணுமின்நிலையம் முதல்பிரிவு (மத்திய அரசுத்துறை) | 235 | 1983-ஜூலை |
| கல்பாக்கம் அணுமின்நிலையம் இரண்டாம் பிரிவு (மத்திய அரசுத்துறை) | 235 | 1985-செப்டம்பர். |
| நெய்வேலி இரண்டாவது அனல் மின்திட்டம் முதல் பிரிவு (மத்திய அரசுத்துறை) | 210 | 1986-ஏப்ரல் |
| ஆக மொத்தம் | 1475 | |



# சாலவும் சிறந்த ஆலயப் பணிகள்

நம் தமிழ்நாட்டில் பழங்காலத்தில் கோயில்களே கல்வி நிலையங்களாக விளங்கின. கலைவளர்க்கும் கழகங்களாகத் திகழ்ந்தன. ஏழை எளியவர்க்கு உணவளித்துப் பாது காக்கும் அறச்சாலைகளாக அமைந்திருந்தன. மருத்துவ மனைகளாகப் பணிபுரிந்தன. தொழில் தரும் நிறுவனங்களாகத் தொண் டாற்றின. பொது மக்களுக்குப் பொருள் கொடுத்தும் வாங்கியும் உதவி புரிந்தும் நிதி நிலையங்களாக இயங்கின. இவ்வாறு நம் தமிழகத்தில் சமய இயல், சமுதாய இயல், கலையியல், கல்வியியல், பண்பாட்டியல், பொருளியல், நாகரிக இயல் முதலிய பல் வேறு துறைகளிலும் தொடர்பு கொண்டு மக் கட் சமுதாயத்திற்கு நலன்கள் பல செய்து வந்த திருக்கோயில்கள் ''சமுதாய நல நிலை யங்கள்'' ஆகத் திகழ்ந்த வரலாற்றை நமக்கு இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டியுள்ளன.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை யின் ஆளுகையின் கீழ் 34,340 சமய நிறு வனங்கள் தற்போது உள்ளன. இதில் திரு மடங்கள் 56ம் சேரும். இவற்றில் ஆண்டு வரு மானம் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டன 186 நிறுவனங்கள், ஆண்டுவருமானம் ரூ.10,000க்கு மேற்பட்டவை 1,612 நிறுவனங்கள். ஆண்டு வருமானம் ரூ. 10,000-/க்குக் கீழ்ப் பட்டன 32,542 நிறுவனங்கள். இந்நிறுவனங் கள் அனைத்திலிருந்தும் பெறப்படும் ஆண்டு வருமானம் சுமார் 22.88 கோடி ரூபாய்.

ரூபாய் பத்தாயிரத்திற்குக் குறைவான ஆண்டு வருமானம் உடையவ்வாய் விளங்கும் ஆலயங்களில் சில ஒரு வேளை பூசை செய்வ தற்குக்கூட வழியில்லாமல் இருக்கும் சிறுமை நிலையைப் போக்கி, அறநிலையத்துறை கொண்டு வந்து நிறைவேற்றி நடத்திக்கொண் டிருக்கும் ஒப்பற்ற திட்டமே ஆலய மேம் பாட்டுத் திட்டம் எனப்படும் எழுச்சிமிகு ஏழு கோடி ரூபாய்த் திட்டமாகும்.

வருவாய் அற்ற ஆலயங்களின் வழிபாட் டிற்கென வைக்கப்பட்ட ஐந்து கோடி ரூபாய் வைப்பு நிதி கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணிக்கென வைக்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி, ஆலயப் பணியாளர் மருத்துவம் மற்றும் அவர்தம் பிள்ளைகள் கல்வி நிதிக்காக அமைக்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி ஆகிய இம்மூன்று திட்டங் களுமே ஒரு சேர ஆலய மேம்பாட்டுத் திட் டம் அல்லது ஏழுகோடி ரூபாய் வைப்புநிதித் திட்டமென அழைக்கப்படுகிறது. ஆன்மீகத் தலைவர்களாலும் ஆன்றோர்களாலும் பெரி தும் வரவேற்றுப் பாராட்டப்பட்ட இத்திட் டம் 15.8.1984ஆம் நாளன்று மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் அவர்களால் திருச்சி சமயபுரத்தில் தொடங்கி வைக்கப்பெற்றது. ஆலயங்களில் உபரித் தொகை 4½ கோடியிலிருந்து கடந்த ஏழெட்டு ஆண்டுகளில் 28 கோடிகளாக உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வாறு உயர்த்தப் பட்ட 28 கோடி ரூபாய்களில் ஏழு கோடி ரூபாய்கள் முப்பெரும் திட்டங்களுக்காக வங்கி களில் வைப்புத் தொகையாக வைக்கப் பெற் றுள்ளன. அருள்மிகு பழநி தண்டாயுத பாணி சுவாமி ஆலயம் மட்டும் இம்மூன்று திட்டங்களுக்காக 2½ கோடி ரூபாயை வைப்பு நிதியாக வழங்கியுள்ளது. எஞ்சிய 4½ கோடி ரூபாய்களை, இலட்ச ரூபாய்களுக்கு மேலே ஆண்டு வருமானம் பெற்று விளங்கும் இதர 69 ஆலயங்கள் வழங்கியுள்ளன.

வங்கிகளில் வைப்பு நிதியாக வைக்கப் பட்டுள்ள இவ்வேழு கோடி ரூபாய்கள் கரை யாது கட்டாகப் பேணப்படுகிறது. அத்தொகை யிலிருந்து வட்டியாக ஆண்டொன்றுக்குப் பெறப்படும் சுமார் எழுபத்தைந்து லட்ச ரூபாய்கள் மட்டுமே ஆலய மேம்பாட்டுத் திட் டங்களுக்குப் பயன் படுத்தப்படும். இப்புதுமை யான திட்டம் அறிவிக்கப்பட்ட ஓராண்டிற் குள்ளாகவே இத்திட்டங்களின் செயல்முறை துவக்க விழாவும் 20.7.1985 அன்று தஞ்சை பெருவுடையார் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. கிராமப்புறக்கோயில் திருப் பணிக்காக பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் நிதியினின்றும் ஒதுக்

டீடு செய்யப்பட்டுள்ள ரூபாய் ஒரு கோடியி னின்றும் கிடைத்துள்ள வட்டி வருவாயினின் றும் அண்மையில் 13.3.1986ஆம் நாளன்று சென்னை அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயிலில் நடைபெற்ற விழாவில் தமி ழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களி லிருந்தும் தேர்வு செய்யப்பட்ட 150 கிராமப் புறத் திருக்கோயில்களுக்கு ரூ. 10,000 வீதம் ரூ. 15 லட்சம் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் நிதி வழங்கப்பட்டது.


ஒரு வேளை பூசைக்குக்கூட வருமானம் இல்லாத 32 ஆலயங்களுக்குத் தலா ஐயா யிரம் ரூபாய் பூசைச் செலவிற்காக வழங்கப் பட்டுள்ளது. ஆலயப் பணியாளர்களுக்கு மருத்துவ நிதி தலா ரூ.100 வீதம் பலருக்கும், கல்வி நிதி தலா ரூ. 100 வீதம் பலருக்கும் வழங்கி இத்திட்டம் முதல் கட்டமாகச் செயல் படுத்தப் பட்டிருப்பது மட்டும் அல்லாமல், வரும் ஆண்டுகளில் மேலும் இத்திட்டங்களால் மிகஅதிகமாக ஆலயங்கள் பயன்பெற இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாலய மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட 20.7.85ஆம் நாளன்றே இத்திட்டங்களில் குறிப்பிடப்படாத மற்றுமொரு திட்டமும் செயல்படுத்தப்பட் டது குறிப்பிடத்தக்கது.

ஆலயப் பணியாளர்களுக்குச் சம்பளம் கூடத் தரமுடியாத நிலையில் தஞ்சையிலும், திருநெல்வேலியிலும் பல கோயில்கள் உள்ளன. இக்கோயில்களுக்கு நிலங்கள் ஏராளமாக இருந்தபோதிலும், அவற்றைப் பயிர் செய் யும் குத்தகைதாரர்கள் பலர் விளைவில் 25 சதவீதம் என விதிக்கப்பட்டுள்ள குத்தகையை ஆலயங்களுக்குச் சரிவரச் செலுத்துவதில்லை. குத்தகையை முறையாகச் செலுத்தாத குத் தகைதாரர்களை எதிர்த்து வழக்கு மன்றத் திற்குப் போகவும் முடியாமல், அவர்களை வெளியேற்றவும் முடியாமல் மோரடோரியம் ( Moratorium ) என்ற பாதுகாப்புச் சட்டமும் அமலில் இருந்தபடியால், 1392ஆம் பசலி முடிய வரவேண்டிய குத்தகைப் பாக்கி வேறு ரூ. 31.5 கோடியாக உயர்ந்துவிட்டது. இதனால் தஞ்சையிலும், திருநெல்வேலியிலும் ஆலயப் பணியாளர்கள் 930 பேருக்குச் சம்பள பாக்கி வழங்கப்படாமல், அவர்கள் பரிதவித்த நிலையையும் அறநிலையத்துறை பரிவுடன் பரிசீலித்து ,930 பேருக்கு வழங்கப்பட வேண் டிய சம்பள பாக்கி ரூ. 5,64,856 மற்றும் 41 காசுகளையும் இவ்வேழு கோடி ரூபாய்த் திட் டத்தின் துணை கொண்டு ஆலயப் பணியாளர் களின் சம்பள பாக்கியையும் 20.7.1985ல் தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தில் நடை பெற்ற ஆலய மேம்பாட்டுச் செயல்முறைத் தொடக்க விழாவில் தீர்த்து வைத்ததும் குறிப் பிடத் தக்க சாதனையாகும்.

குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த மோரடோரியம் என்ற பாது காப்புச் சட்டமும், 1985 ஜனவரி மாதத் தோடு காலாவதியாக்கப்பட்டிருப்பது குறிப் பிடத்தக்கது. பல ஆண்டுகளாகக் குத்தகை தாரர்கள் சேர்த்து வைத்துள்ள குத்தகை பாக்கிகளை 1987ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிவதற்குள் ஐந்து தவணைகளில் அவர்கள் கட்டியாகவேண்டும். குறிப்பிட்ட தவணை களில் பாக்கியைச் செலுத்தவில்லையானால், உடனடியாக அத்தகையவர்கள் மேல் நட வடிக்கை எடுக்க அறநிலையத்துறை வழிவகை செய்து, நிலுவைகளை வேகமாக வசூலிக்க ஆவன செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆலய நிர்வாக அதிகாரிகள், உதவி ஆணை யர்கள், துணை ஆணையர்கள் ஒவ்வொரு வருக்கும் நிலுவைகளை வசூலிக்க குறியீடு நிர்ணயம் செய்து, அறநிலையத்துறை வேக மாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை எண்ணற்ற சமுதாய நலப்பணி களையும் மேற்கொண்டு செயல்படுத்தி வரு வது இங்கே குறிப்பிடத்தக்கது. அறநிலையத் துறையின் கீழ் தற்போது கல்வி நிறுவனங்கள் 44, பெண்கள் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி 1, அன்பு இல்லங்கள் 35 ,மருத்துவ மனைகள் 20, நூலகங்கள் 201 ஆகியவை இயங்கி வருகின்றன. இவை மட்டுமல்லாமல் சமுதாய வளர்ச்சிக்கு அறநிலையத்துறை மேலும் பல பணிகளை நிகழ்த்தி வருகின்றது. அவற்றில் ஒன்றுதான் சுதந்திரத் திருநாளில் ஆண்டுதோறும் நடத்தப்படும் சிறப்பு வழி பாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சிகள்.

''எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம். எல்லோரும் இந்நாட்டு மக்கள்'' என்று பாடிய மகாகவி பாரதியார், ''சாதிகள் இல்லையடி பாப்பா'' எனச் சாற்றினார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருமூல ரும், ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்று அறிவுறுத்தியிருக்கிறார். உலகப் பொது மறை தந்த திருவள்ளுவரும் ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று பாடியிருக்கிறார். இறைவன் ஆலயத்தில் அரிசனரும் அந்தண ரும் சரிநிகர் சமமானமானவர்களே என்பதை வற்புறுத்தும் பொருட்டு 1981-ஆம் ஆண்டு






முதல், ஆகஸ்ட் 15-ஆம் நாளில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சிகள் அறநிலையத்துறையால் சிறப்புற நடத்தப்பட்டு வருகின்றன. 1981ஆம் ஆண்டு 3847 ஆலயங்களில் 7 இலட்சம் மக்கள் கலந்து கொண்ட பொது விருந்து ரூ. 8.59 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது. 1982-ஆம் ஆண்டு 3900 திருக்கோயில்களில் 9 லட்சம் மக்கள் கலந்து கொண்ட பொது விருந்து ரூ. 10.76 லட்சம் செலவில் நடத்தப்பட்டது. 1984-ஆம் ஆண்டு 2700 திருக்கோயில்களில் 7 இலட்சம் மக்கள் கலந்து கொண்ட பொது விருந்து ரூ.13 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளது. 1985-ஆம் ஆண்டு 2600 திருக்கோயில்களில் ரூ. 9,14,000 செலவில் பொது விருந்து நடத்தப்பட்டுள்ளது. 1983-ஆம் ஆண்டு மட்டும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அனுதாபம் தெரிவித்து இப் பொதுவிருந்து நிகழ்ச்சி நடத்தப்படவில்லை.

பொது விருந்து திட்டம் தொடங்கப்பட்ட அதே 1981ஆம் ஆண்டு முதல் வசதி மிக்க ஆலயங்களில் அறநிலையத்துறையால் தொடங்கி நடத்தப்படுவதே சிறப்புத் திருமணங்கள் எனும் இச் சீரிய திட்டமாகும். ஏழைகள் பலர் வயது வந்த தம் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து பார்க்க முடியாமல் அதற்குக் குறைந்த பட்சச் செலவாகத் தேவைப்படும் ஒரு ஆயிரம் ரூபாய் கூட இல்லாமல் வாடி நிற்கிறார்கள். எண்ணற்ற விதவைத் தாய்மார்கள், வயது முதிர்ந்த வறுமையில் வாடும் பெற்றோர்கள் படும் துன்பத்தைத் துடைக்க, அறநிலையத்துறை கண்ட திட்டமே சிறப்புத் திருமணத் திட்டமாகும். மாண்புமிகு அமைச்சர்கள், ஆன்மீகத் தலைவர்கள் சட்டமன்ற, நாடாளுமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், மடாதிபதிகள், பொது மக்கள் ஆகிய அனைவரும் ஒரு சேர வாழ்ந்த இத்தகு திருமணங்கள் நடத்தப்பெறுவதால், இவற்றை இலவசத் திருமணங்கள் என்று கூறாமல், சிறப்புத் திருமணங்கள் என்றே குறிப்பிடல் வேண்டும் என்பது அரசின் விருப்பமாகும். 1981ஆம் ஆண்டில் 220, 1982-ல் 622, 1983-ல் 182, 1984-ல் 112, 1985-ல் 109 ஆக இதுவரை மொத்தம் 1245 திருமணங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இதில் பயன்பெற்றவர்கள் 979 ஜோடி, ஆதிதிராவிடர் மணமக்கள், 209 ஜோடி பிற்பட்ட மணமக்கள், 44 ஜோடி கலப்புத் திருமணங்கள்மணமக்கள், 13ஜோடி இதர வகுப்பைச் சேர்ந்த மணமக்கள் ஆவர். ஒரு திருமணத்திற்கு சுமார் ரூ.750 விருந்து ரூ.1,000 வரை அந்தந்தத் திருக்கோயில் உபரி நிதியிலிருந்து செலவிடப்பட்டுகிறது. இது வரை இத்திருமணங்களுக்காக ரூ. 9,61,200 வசதிமிக்க அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் போன்ற ஆலயங்களிலிருந்து செலவிடப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு வசதியற்றவர்க்குச் சிறப்புத் திருமணங்கள் நடத்தி வைக்கப்படுவதுடன் வசதி குறைந்தவர்கள் திருமணங்கள் நடத்திக் கொள்ளத் திருமணமண்டபங்கள் தேவைப்படுவதையும் அறநிலையத்துறை உணர்ந்து, இதுவரை 109 திருமண மண்டபங்களைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அறநிலையத்துறையின் திருமண மண்டபங்களே, நடுத்தர ,கடைத்தர மக்களுக்கு வரப்பிரசாதம்போல் குறைந்த வாடகையில் கிடைக்கப் பயன்பட்டு வருகின்றன.

தல தரிசனம் காண வேண்டிப் புறப்பட்டு வரும் தமிழக மக்களுக்கும் இதர மாநில மக்களுக்கும் தங்குமிட வசதிகளைச் செய்து தருவதிலும் சிறப்பிடம் வகிக்கிறது. நம்முடைய அறநிலையத்துறை, திருக்கோயில்களில் இதுவரை 58 ஓய்வு விடுதிகளும், 231 குடில்களும், 951 அறைகளும் யாத்திரிகர்களும் வசதிகளுக்காக அமைத்திருக்கின்றது. மேலும் திருச்செந்தூர் ஜெயந்திநாதர் விடுதியில் முதல் மாடி, இரண்டாவது மாடி கட்ட ரூ. 18.36 இலட்சம், திருப்பரங்குன்றம்

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் 24 அறைகள் கொண்ட ஓய்வு விடுதி கட்ட ரூ. 5.60 இலட்சமும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தில் இப்போதுள்ள தங்கும் வசதிகளுடன் மேலும் 40 ஒற்றை அறைகள் கட்ட ரூ.17 இலட்சமும் அனுமதிக்கப்பட்டு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. தனியார் தங்குமிடங்களில் வசதிகள் குறைவாக இருந்தபோதிலும் மிக அதிகமான கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. அறநிலையத்துறை அமைத்துள்ள தங்குமிடங்களில் மிகக் குறைவான கட்டணங்களே வசூலிக்கப்படுகின்றன.

பழமையான கோயில்களைப் பழுதுபார்ப்பது, திருக்குளங்களைச் சீரமைப்பது, தேர்களைச் செப்பனிடுவது போன்ற பல கோயிற்திருப்பணிகளையும் அறநிலையத்துறை முனைப்போடு செயல்படுத்தி வருகின்றது. அரசாங்கமும் இப்பணிகளில் ஆர்வம் கொண்டு ஆண்டுதோறும் மானியம் வழங்கி வருகின்றது. 1981-82-ஆம் ஆண்டிற்கு ரூ 12 இலட்சமும், 1982-83ஆம் ஆண்டிற்கு ரூ 20 இலட்சமும், 1983-84ஆம் ஆண்டிற்கு ரூ. 23 இலட்சமும் 1984-85ஆம் ஆண்டிற்கு ரூ. 30 இலட்சமும் கோயிற் திருப்பணிகளுக்காக அரசு மானியம் வழங்கப்பட்டிருக்கின்றன. இவ்வரசு மானியங்களோடு அறநிலையத்துறையும் ஆலய நிதியிலிருந்து பெருமளவில் நிதி ஒதுக்கித் திருப்பணிகளைச் செய்து வருகின்றது.

உலகிலேயே மிக உயர்ந்த கோபுரமாக 13 நிலைகளுடன் அமைக்கப்பட்டு வரும் திருவரங்கம் கோபுரத்தில் 13-வது நிலை கோபுரக் கட்டுமானப் பணிக்கு ரூ. 7 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டு திருப்பணி நடந்து வருகின்றது. அருள்மிகு காசிவிஸ்வநாதசுவாமி ஆலய இராசகோபுரத் திருப்பணி 90 இலட்ச ரூபாய், அருள்மிகு சிதம்பரம் சபாநாயகர் திருக்கோயில் திருப்பணி 38 இலட்ச ரூபாய், அருள்மிகு மாங்காடு காமாட்சியம்மன் கோயில் திருப்பணி 8 இலட்ச ரூபாய், சேலம் கோட்டை மாரியம்மன் ஆலயத் திருப்பணி 17 இலட்ச ரூபாய், ஸ்ரீரங்கம் ரெங்கநாத சுவாமி திருக்கோயில் திருப்பணி ஒரு கோடி ரூபாய், திருவாரூர் தியாராஜ சுவாமி திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணி ரூ.11.57 இலட்ச ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், திருச்செங்கோடு மலை மீது அமைந்துள்ள அருள்மிகு அர்த்த நாரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வாகனங்கள் மூலம் மலை மீது பக்தர்கள் சென்று வழிபடுவதற்கு வசதியாக மலைப்பாதை ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க, மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மேற்படி மலைப்பாதை அமைக்கும் வேலையைத் துரிதமாகச் செய்து வருகிறது. அரசு மானியமாக ரூ. 5 இலட்சம் வழங்கப்பட இருக்கிறது. இதுபோன்ற பல திருப்பணிகளும் அறநிலையத்துறையின் சார்பாக நடைபெற்று வருகின்ற எண்ணற்ற திருப்பணிகளில் குறிப்பிடத்தக்க சிலவாகும்.

திருக்கோயில்களில் உள்ள பஞ்சலோக விக்கிரகங்கள் விலை மதிப்பற்றவை. அவற்றைப் பாதுகாக்க தக்க பாதுகாப்புப் பணிகளையும் அறநிலையத்துறை சிறப்பாகச் செய்து வருகின்றது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 2000 உலோகத்திருமேனிகள் உள்ளன. இவற்றைப் பாதுகாக்க அருள்மிகு திருவாரூர் தியாகராஜசுவாமி ஆலயத்தில் ரூ. 12,90,000 மதிப்பீட்டில் ஒரு சிலைகாப்புக் கூடம் அமைக்கும் பணியை அறநிலையத்துறை மேற்கொண்டு பணி முடியும் தருவாயில் உள்ளது. வங்கிகளிலுள்ளது போன்ற பாதுகாப்பான கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. எளிதில் உடைக்க முடியாத கான்கிரீட்டு அறைகளும் உறுதியான தளமும் உள்ள பலமான கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மற்றும் திருவானைக்கா ஆகிய இரு இடங்களிலும் இதே போன்று பாதுகாப்பான சிலை பாதுகாப்புக் கூடம் ஏற்படுத்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு அரசு மான்யம் வழங்கப்பட்டு வேலை துவங்கப்பட உள்ளது.

இவ்வாறு அறநிலையத்துறையின் சீரிய முயற்சியால், எண்ணற்ற திருப்பணிகள் நடந்து முடிந்தும், நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றன. நாளும் தமிழ் இன்னிசையால் சமயம் வளர்த்த ஞானசம்பந்தர் வாழ்ந்த நாட்டில் தற்போது நாளும் கும்பாபிஷேகங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. 1981ல் 88 கோயில்களிலும், 1982-ல் 69 கோயில்களிலும், 1983-ல் 114 கோயில்களிலும், 1984-ல் 84 கோயில்களிலும், 1985-ல் 117 கோயில்களிலும் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவில் திருப்பணிகள் முடிந்து கும்பாபிஷேகங்கள் நடந்தேறியுள்ளன. கடந்த 8 ஆண்டுக் காலத்தில் மட்டும் ஏழு தங்கத் தேர்கள் அமைக்கப்பட்டுள்ளன. சங்கரன் கோயில், சங்கரநாயனார் ஆலயத்தில் அறநிலையத்துறையின் பத்தாவது தங்கத் திருத்தேர் 15.12.1985ல் வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது.

ஆலயங்கள் வளர்ந்தால் மட்டும் போதாது, ஆலயப் பணியாளர்கள் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வாழ்ந்தால் மட்டும் போதாது, பல கோடி மக்களை நெறிப்படுத்த, ஆலயங்கள் தூய்மையுடன் பராமரிக்கப்பட வேண்டியதும் அவசியமாகும். திருநாவுக்கரசர் பெருமான் உழவாரத் திருப்பணி புரிந்து, ஆலயத் தூய்மையைப் பராமரித்த அருங்குணச் செல்வர் ஆவார். அவர்தம் வழியில் ஆலயங்களில் தூய்மையைப் பராமரிக்க அண்மையில் அறநிலையத்துறை மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் திருக்கோயில் தூய்மைப் பராமரிப்புப் பணியைத் தொடங்கி வைத்து, அத்தகைய பணியில் அனைத்து ஆலயங்களும் ஈடுபட ஆவன செய்துவருகிறது.

கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கு அவர் பிறந்த தேரெழுந்தூரில் கம்பர் கோட்டம் ரூ. 20 இலட்ச செலவில் கட்டி அதனை 10.12.84ல் திறந்து வைத்திருக்கும் அறநிலையத்துறை, இளங்கோ அடிகளுக்கும், சேக்கிழாருக்கும் சிறந்த சமயச் சான்றோர்கள் பலருக்கும் கோட்டங்கள் அமைக்க முயன்று வருகின்றது.

இவ்வாறு அறநிலையத்துறை ஆற்றியிருக்கும் பணிகள் மிகப்பல. ஆற்ற வேண்டிய பணிகளும் மிகப்பல. ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் மகேசன் தொண்டே மக்கள் தொண்டாகவும், மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகவும் முனைந்து செயலாற்றி வரும் அறநிலையத்துறை வருங்காலத்திலும் பல சிறந்த செயற்திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றவும் உள்ளது.



# நீதி நிர்வாகம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி வழங்குவது இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும்.

அரசின் செயற்பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவினின்றும் இது தனித்துச் செயல்படுகின்றது. இம்மாநிலத்தில் நீதி வழங்கும் தலைமை வாய்ந்த நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். உயர் நீதிமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆகும்.

பதிவாளர், உயர்நீதிமன்ற அலுவலகத்தின் நிர்வாகத் தலைவர் ஆவார். இவருக்கு உதவியாகப் பல அதிகாரிகள் அதாவது, கூடுதல் பதிவாளர், மாஸ்டர், துணைப் பதிவாளர், நீதிமன்றம் நியமித்த கணக்கு ஆய்வாளர், வழக்குகளை வகைப்படுத்தும் தனி அதிகாரி, உதவிப் பதிவர்ளர்கள், துணை உதவிப் பதிவாளர்கள், முது நிலைக் கணக்கு அதிகாரி ஆகியோர் உள்ளனர். உயர்நீதி மன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டது.

நீதி வழங்குவதோடு, மாநில நீதித்துறையில் நிருவாகத்திற்கும் உயர்நீதிமன்றம் பொறுப்பு வகிக்கிறது.

குற்றவியல் நீதி மன்றங்களில் வழக்குகளின் விசாரணையை விரைவுபடுத்த வேண்டுமென்ற நோக்குடன், ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றத்திற்கும், அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை) ஒருவரை அரசு நியமித்துள்ளது.

பயணச்சீட்டு இல்லாமல் பயணம்செய்வது போன்ற குற்றங்கள் குறித்து இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் விசாரணை செய்து தீர்ப்பளிப்பதற்காக எழும்பூர் இரயில்வே நிலையத்தில் ஒன்றும், சென்ட்ரல் இரயில்வே நிலையத்தில் ஒன்றுமாக இரு இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள் உள்ளன.

இம்மாநிலத்தில் 66 சார்நிலை நீதுமன்றங்கள் உள்ளன.

மாவட்ட முன்சீப் நீதி மன்றங்கள் 127 உள்ளன. அத்துடன் மாவட்ட முன்சீப் கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்கள் 6ம் மாவட்ட முன்சீப் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள் 2ம் உள்ளன.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் சென்னையில் நான்கும், மதுரையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும் உள்ளன. மாநிலம் முழுவதிலும் அதிகார வரம்பைச் செலுத்தும் தொழிற்சாலைகள் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது.

இம்மாநிலத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள் 14 உள்ளன. இவற்றுடன், பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்ய கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றும், கும்பகோணத்தில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களும், வனம் தொடர்பான குற்றங்களை விசாரணை செய்ய சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் தருமபுரி மாவட்டத்தில் கூடுதல் தனி நீதிபதி நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

மதுவிலக்கு வழக்குகளை விசாரணை செய்வதற்காக கூடுதல் நீதிமன்றங்கள் 22, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்காகக் கூடுதல் நீதிமன்றங்கள் 4, வணிகக் குற்றங்களை விசாரணை செய்வதற்காகக் கூடுதல் நீதி மன்றங்கள் 3 ஆகியவை உட்பட மொத்தம் 58 நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 144 உள்ளன.

''தீர்ப்புத் திரட்டு'' என்னும் சட்டத்தமிழ் (திங்கள்) இதழ் ஒன்றை உயர்நீதிமன்றம் வெளியிட்டுள்ளது.

ஏழை எளியவர்களுக்கு சட்ட ஆலோசனை நல்கும் பொருட்டு 1977ஆம் ஆண்டில் அரசு அமைத்த தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகள் இருவரின் கீழ் செயல்பட்டு வருகிறது. மாவட்டங்களிலும் வட்டங்களிலும், சட்ட உதவிக் குழுக்கள் இருப்பதுடன், மாநகரிலும், மாவட்டங்களிலும் சட்ட ஆலோசனைப் பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள 34 சட்ட உதவி மையங்களுடன் 18 மாவட்டக் குழுக்களும், 85 வட்டக் குழுக்களும் உள்ளன. இக்குழுவின் செலவிற்கு அரசு மானியம் அளிக்கிறது.

இக்குழு ஏழை எளியவர்களுக்கும், சட்ட ஆலோசனை பெறத் தகுதியுடையோருக்கும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும், சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது.

# குடும்ப நலத் திட்டம் மக்கள் இயக்கமாகிறது

குடும்பநலத் திட்டத்தை, மக்கள் இயக்கமாகக் கொண்டு அரசியல் கட்சிகள், மதச் சார்புள்ள அமைப்புகள் ஆகியவற்றின் முழு ஆதரவுடன் அனைவரும் முன் வந்து ஏற்றுக் கொள்ளும் வகையில் தமிழக அரசு, 1956ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் தொண்டு நிறுவனங்கள் பலவும் ஈடுபட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதை பிறப்பு, இறப்பு பற்றிய பின்வரும் புள்ளிவிவரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

| மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 1971-81 | சதவீதம் |
|---|---|
| இந்தியா | 25.00 |
| தமிழ்நாடு | 17.50 |

**தம்பதியினர் குடும்பநலக்காப்பு வீதம்**

குடும்பநலத் திட்டத்தின் வாயிலாக தம்பதியினர் நலக்காப்பு வீதம் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. இதனைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்.

| | | |
|---|---|---|
| 1981-82 | 28.9 | சதவீதம் |
| 1982-83 | 30.2 | ,, |
| 1983-84 | 34.2 | ,, |
| 1984-85 | 39.0 | ,, |
| 1985-86 | 43.5 | ,, |

குடும்ப நலஅறுவைச் சிகிச்சைக்குரிய தம்பதியினர் நலத்தைப் பாதுகாத்து அத்தகையோர் சதவீதத்தைப் பெருக்கி மக்கள் தொகை பெருக்கத்தைக் குறைப்பதே இதன் நோக்கமாகும். அதே சமயத்தில் பிறப்புவீதம், இறப்பு வீதம், குழந்தை இறப்பு வீதம் ஆகியவற்றைக் குறைப்பதிலும் கவனம் செலுத்தப்படும் தேசிய சுகாதாரக் கொள்கையாக இந்நாட்டில் கி.பி. 2000க்குத் திட்டமிடப்பட்ட இலக்குக்கு மாறாக 1990 ஆண்டில் 1000 பேருக்கு பிறப்பு இறப்பு வீதத்தை முறையே 21:9 ஆகக் குறைப்பதே நம் திட்டங்களின் நோக்கமாகும்.

**இலக்கும் எய்திய சாதனையும்**

1977-78 முதல் 1985-86 வரையிலான கால அளவுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கிணங்க கருத்தடை அறுவைச் சிகிச்சையின் கீழ் எய்திய சாதனையைப் பின்வரும் விவர அறிக்கை காட்டுகிறது.

தமிழ்நாடு 1981-82, 1983-84, 1984-85, 1985-86-ஆம் ஆண்டுகளில் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு நிர்ணயித்த இலக்கைக் காட்டிலும் அதிக அளவு சாதனையை எய்தியுள்ளது என்பதை இவ்விவர அறிக்கைகளிலிருந்து காணலாம்.

பல்வேறு வகையிலும் குடும்ப நலத்திட்டத்தின் வெற்றிக்கு உழைத்து வரும் தமிழக அரசு 1986ஆம் ஆண்டினைத் திட்டமிட்ட குடும்ப நல ஆண்டாக அறிவித்துத் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. மத்திய அரசின் முதல் பரிசாக ரூ. 2.5 கோடி 1984-85-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டச் சாதனைக்காக வழங்கப்பட்டது. தொடர்ந்து தமிழ்நாடு இரண்டாவது முறையும் முதலிடம் பெற்றுள்ளது. இத்தொடர் வெற்றிக்குக் காரணம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அளித்து வரும் ஆலோசனைகளும், ஊக்கமும் ஈடுபாடுமே ஆகும்.

| | தமிழ்நாடு | | இந்தியா | | தமிழ்நாடு |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | 1000பேருக்கு பிறப்புவீதம் | 1000பேருக்கு இறப்புவீதம் | 1000பேருக்கு பிறப்புவீதம் | 1000பேருக்கு இறப்புவீதம் | பிறந்த 1000 குழந்தைகளில் இறப்புவீதம். |
| 1977 | 29.3 | 13.7 | 33.0 | 14.7 | 113.5 |
| 1978 | 28.9 | 12.8 | 33.3 | 14.2 | 99.6 |
| 1979 | 29.1 | 12.0 | 33.2 | 12.8 | 98.5 |
| 1980 | 27.1 | 10.9 | 33.5 | 12.5 | 99.8 |
| 1981 | 26.1 | 10.9 | 33.9 | 12.5 | 91.2 |

| ஆண்டு | இலக்கு | சாதனை | சாதனைவீதம் |
|---|---|---|---|
| 1977-78 | 3,50,000 | 1,11,587 | 31.9% |
| 1978-79 | 2,76,700 | 2,16,478 | 78.2% |
| 1979-80 | 2,82,000 | 1,57,642 | 55.9% |
| 1980-81 | 1,82,000 | 1,38,831 | 76.2% |
| 1981-82 | 1,82,000 | 1,88,828 | 103.4% |
| 1982-83 | 2,92,000 | 2,66,279 | 91.2% |
| 1983-84 | 3,99.000 | 4,96,780 | 124.5% |
| 1984-85 | 4,75,000 | 5,25,431 | 110.6% |
| 1985-86 | 4,75,000 | 5,13,990 | 108.2% |



# அருந்தமிழ் நாட்டில் பெருந் தொழில்கள்

தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தும் சீரிய நோக்குடன் கீழ்க்கண்ட அரசு சார்பு நிறுவனங்களை இவ்வரசு அமைத்துள்ளது. தமிழ்நாடு அரசு தொழில் துறையின் நேரடிப் பார்வையில் இந் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் அனைத்து வகைத் தொழிற்சாலைகளும் பெருகி வளமுறப் பாராட்டத்தக்க பணிகளை ஆற்றி வருகின்றன.

(1) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்
(2) தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்.
(3) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.
(4) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.
(5) தமிழ்நாடு அச்சுத்தாள் காகித நிறுவனம்
(6) தமிழ்நாடு கனிம நிறுவனம்.
(7) தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம்.
(8) தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம்

தமிழ்நாட்டில் புதிய தொழில்களை அமைக்க முன்வருவோர்க்கு வேண்டிய எல்லா உதவிகளையும் தங்கு தடையின்றி இவ்வரசு செய்து வருகிறது. புதிய விண்ணப்பங்களை பரிந்துரை செய்து, இசைவுக் கடிதம் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட பின் அதைத் தொழில் உரிமங்களாக மாற்ற உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1977 முதல் 1986 மார்ச் மாதம் வரை 819 விண்ணப்பங்களைப் புதிய தொழில்கள் துவங்குவதற்காகப் பரிந்துரை செய்து இவ்வரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. அவற்றுள் 468 தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசால் அனுமதியளிக்கப்பட்டும் 255 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டும் உள்ளன.

1985-ஆம் ஆண்டில் (டிசம்பர் வரையில்) தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை அமைக்கத் தொழில் முனைவோருக்கு 97 இசைவுக் கடிதங்களும், 155 தொழில் உரிம மாற்றங்களும் வழங்கப்பட்டுள்ளன. 1985-ஆம் ஆண்டில் 35 எஸ். ஐ. ஏ. பதிவுகளும், 163 டி.ஜி.டி.டி. பதிவுகளும் செய்யப்பட்டுள்ளன.

இவ்வரசு எடுத்த தீவிர நடவடிக்கை மற்றும் தொடர்ச்சியான முயற்சிகளின் பலனாக 1977 முதல் 1986 வரை தமிழ்நாட்டில் ரூ. 1,600 கோடிக்கு மேலாக முதலீடு செய்து புதிய தொழிற்சாலைகள்/விரிவாக்கப் பணிகள் மையஅரசைச் சார்ந்த நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழில் வளர்ச்சியில் தமிழகம் சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது. முன்னணியில் உள்ள முதல் நான்கு மாநிலங்களுள் ஒன்றாக உள்ளது.

பம்பாயிலுள்ள இந்தியப் பொருளாதார வளர்ச்சி ஆய்வு மையம் என்ற நிறுவனம், 1985 செப்டம்பர் மாதம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, பொதுவாகத் தொழில் வளர்ச்சியை நிர்ணயிக்கும் கீழ்க்கண்ட ஐந்து அம்சங்களில் தமிழகம் முதல் நான்கு இடங்களுள் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்:

1. புதிய தொழில்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெருக்கும் குறிப்பு : இதில் தமிழகம் மூன்றாவது இடத்திலுள்ளது.

2. தொழிற்சாலைகளில் உற்பத்தி மதிப்பு: இதில் தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளது.

3. 1960-61 முதல் 1980-81 வரையிலான காலத்தில் ஆலைகளில் சேர்க்கப்பட்ட மதிப்பீட்டை ஒப்பிடுதல்: இதில் தமிழகம் நான்காவது இடத்திலுள்ளது.

4. தொழில்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்பு மற்றும் உற்பத்தி பற்றிய ஒப்பீடு: தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்த வரை தமிழ்நாடு நான்காவது இடத்திலும், தொழிலாளர்களின் எண்ணிக்கையில் தமிழகம் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

5. தொழிற்சாலைத் துறையில் மதிப்பு பெருக்கம்: (தேசீய வருமான உற்பத்தி அடிப்படையில்)

அகில இந்திய நிதி நிறுவனங்களிலிருந்து உதவித்தொகை பெறும் இனத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது

என்பதையும் பெருமையுடன் குறிப்பிடலாம்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) 1965-ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இது தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு பெருமை வாய்ந்த நிறுவனமாகும். இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூல தனம் ரூ. 60 கோடியாகும். இதில் ரூ.59.72 கோடி செலுத்தப்பட்டுள்ளது.

டிட்கோ இது வரையில் பொதுத் துறையிலும் கூட்டுத் துறையிலும் 45 தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது.

டிட்கோவினால் நிறுவப்பட்ட 45 தொழிற் திட்டங்களில் 38 திட்டங்கள் இம் மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன.

தொடக்கத்தில் டிட்கோவின் ஒரு பிரிவாக நிறுவப்பட்ட தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனம், 3-4-1984 முதல் டிட்கோவின் ஒரு கிளை நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது.

3-4-1984 முதல் மீள் உருளை ஆலையும் தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் திட்டச் செலவு ரூ. 782.10 இலட்சமாகும். இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 25,000 டன்கள் ஆகும். இது 109 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கியுள்ளது.


தமிழ்நாடு கெமிக்கல் பிராடக்ட் லிமிடெட் டிட்கோவினுடைய ஒரு நிறுவனமாகும். இத்தொழிற்சாலை காரைக்குடியில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திட்டச் செலவு ரூ. 756 இலட்சமாகும். இது சுமார் 271 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கியுள்ளது. இலாபத்தில் இயங்கி வரும் இந் நிறுவனம் 30-9-1985 வரை ரூ. 83.10 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு தொழிலியல் மருந்து நிறுவனத்தின் திட்டச் செலவு ரூ. 2,350 இலட்சமாகும். இத்திட்டத்தினால் சுமார் 450 நபர்களுக்கு வேலை வாய்ப்பும், ஏறக்குறைய 100 பேருக்கு நேரடி அல்லாத வேலை வாய்ப்பும் கிடைக்கும். இத்திட்டம் தன் வணிக அளவிலான உற்பத்தியை 9-2-1986 முதல் தொடங்கியுள்ளது.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு அரசு பொதுத்துறை நிறுவனங்களை ஏற்படுத்தி வருகிறது. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் (டான்சம்) நிறுவனமானது தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினரால் (டிட்கோ) முழுவதும் உடைமை ஆக்கப்பட்ட ஒரு நிறுவனமாக 1976ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமான ரூபாய் பன்னிரண்டரைக் கோடியில் ரூபாய் 12.36 கோடி இது வரையில் செலுத்தப்பட்டு உள்ளது. இந்நிறுவனம் 1-4-1976 முதல் செயல்படத் தொடங்கியது.

ஆலங்குளம் சிமெண்ட் ஆலையின் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம்மெட்ரிக் டன் ஆகும். இதன் திட்டச் செலவு ரூ. 666 இலட்சமாகும். இந்த ஆலை 1970-ஆம் ஆண்டு முதல் வணிக உற்பத்தியைத் தொடங்கியது.

இவ்வாலை, இப்பின்தங்கிய பகுதியில் சுமார் 1,600 நபர்களுக்கு நேரடிவேலைவாய்ப்பும் மற்றும் மூலப்பொருட்கள் உற்பத்திப் பொருட்களின் போக்குவரவு வகையினில் கணிசமான அளவில் நேரடி இல்லாத வேலை வாய்ப்பினையும் அளிக்கிறது.



அரியலூர் சிமெண்ட் ஆலை ஓர் உலர் செய்முறை ஆலை ஆகும். இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன். இதன் திட்டச் செலவு ரூ. 2,876 இலட்சம். வணிக அளவிலான உற்பத்தி 1977-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தொடங்கியது.

இவ்வாலை சுமார் 900 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் மற்றும் மூலப்பொருட்கள், செய் பொருட்கள் முதலியவற்றின் போக்குவரத்து வகையில் கணிசமான அளவில் நேரடி அல்லாத வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

ஆண்டொன்றுக்கு 36,000 மெட்ரிக் டன்கள் அளவில் 80 மி.மீ. முதல் 600 மி.மீ. வரை விட்ட அளவுகள் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்ட் குழாய்களை உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலை திருச்சி மாவட்டம் மாயனூரில் அமைக்கப்பட்டது. இதன் திட்டச் செலவு ரூபாய் 945 இலட்சம்.

1984-85-ஆம் ஆண்டில் இதன் ஆறுமாத கால உற்பத்தியில் 8,427 மெ. டன். ஆஸ்பெஸ்டாஸ் குழாய்களை உற்பத்தி செய்தது. நடப்பு ஆண்டில் 10,886 மெ. டன். குழாய்கள் மற்றும் துணைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தின் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் வளர்ச்சிக்கான நிதி உதவி மற்றும் தொழில் நுட்ப உதவிகளான திட்ட அறிக்கை, வளர்ச்சி மையங்களில் தேவையான அடிப்படை வசதிகள் செய்து முதலீட்டுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் மாநில அரசு வழங்கும் உதவிகளைத் தொழில்களுக்கு முறைப்படுத்தி வழங்குதல் போன்ற பணிகளைத் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) ஏற்றுச் செயல்பட்டு வருகின்றது.

வட்டியில்லா விற்பனைவரிக் கடன் வழங்கும் ஊக்கச்சலுகை திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து 1985-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் தேதி வரை 250 தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபாய் 29,15.49 இலட்சம் ஒப்புதல் அளித்து, அதில் ரூபாய் 25,07.46 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் மானியம் (உதவித்தொகை) வழங்கும் திட்டத்தின்கீழ், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் பயன்பெறுகின்றன.

**இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவி:**

திட்டத்தின் கீழ் சிப்காட் நிறுவனம் ஒப்புதல் அளித்தது மற்றும் வழங்கியது 31-3-1985 முடிய முறையே ரூ. 519.24 இலட்சம் மற்றும் ரூ. 382.61 இலட்சம் ஆகும்.

1984-85-ஆம் நிதியாண்டில் எல்லாச் செலவினங்களும் தேய்மானங்களும் போக நிகர லாபம் ரூபாய் 116.56 இலட்சம், 1983-84-ஆம் ஆண்டு இலாபம் ரூ. 124.42 இலட்சமாகும்.

**வேலை வாய்ப்பு**

1985-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் தேதி முடிய சுமார் 88,000 பேர்கள் சிப்காட்டில் நிதியுதவி பெற்ற நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்**


உலக வங்கியிடமிருந்து ரூ. 105 கோடி உதவியுடன், கரும்புச்சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு இயங்கும் ஒரு பெருமை வாய்ந்த காகித ஆலை திட்டத்தை நிறுவும் நோக்கத்துடன் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தைத் தமிழக அரசு உருவாக்கியது. இந்த ஆலை நாளொன்றுக்கு 300 டன்கள் செய்தித்தாள் காகிதமும், 240 டன்கள் அச்சிடும்/எழுதும் காகிதமும் உற்பத்தி செய்யும் திறனுடையதாம்.

1-4-1985லிருந்து 31-12-85 முடிய உள்ள கால கட்டத்தில் இந்நிறுவனம் 39,535 டன்கள் செய்தித்தாள் காகிதமும் 6,797 டன்கள் எழுதுதாள் அச்சிடும்தாள் காகிதமும் உற்பத்தி செய்து, தனது உற்பத்தித் திறனின் 70 சதவிகிதத்தை எட்டியுள்ளது. ரூ. 40 கோடி மதிப்புள்ள அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்த உதவியுள்ளது.

1,500 பேருக்கு நேர்முக வேலை வாய்ப்பும், 5,000 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் அளிக்கும் இந்த ஆலை 24-5-86 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

மாநில அளவில் நிதியுதவி அளிக்கும் நிறுவனத்தைச் சார்ந்த தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் அதன் விரைவான முன்னேற்றத்திற்கும் நிதி உதவி அளிக்கும் தனது பணிகளுடன் இருபது அம்சத் திட்டம் உள்ளிட்ட அரசின் சமூகப் பொருளாதாரக் கொள்கைகளைச் செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகித்து வருகின்றது.

கடன் தொகைக்கு அனுமதித்தல், வழங்குதல், வசூலித்தல் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், இந்நிறுவனத்தின் பணி கணிசமான



அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் ரூபாய் 200 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் 1974ஆம் ஆண்டு ஜூலை திங்கள் நிறுவப்பட்டு 1975ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22-ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூபாய் 200 இலட்சம், ரூ. 145 இலட்சமாகும்.

மிகவும் பின் தங்கிய பகுதியில் அமைந்துள்ள இத்திட்டம் 1975-ஆம் ஆண்டு திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு 1976-ஆம் ஆண்டு முதல் உப்பு உற்பத்தியைத் தொடங்கியது.

இத்திட்டம் 1985-ஆம் ஆண்டு இரசாயனத் தொழிற்சாலைக்குகந்த தரமான 33,600 டன் உப்பு உற்பத்தி செய்தது. 31-12-1985 முடிய 27,202 மெட்ரிக் டன் உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.


உப்பு உற்பத்திக் காலத்தில் 70 பேர்களுக்கு நிரந்தரவேலை வாய்ப்பும் 150 பேர்களுக்குப் பருவகால வேலை வாய்ப்பும் அளிப்பதுடன், ஒப்பந்தக்காரர்கள் மூலமாகச் சுமார் 200 பேர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தற்பொழுது 32 நபர்கள் அலுவலக வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

தொழில்களுக்குப் பயன்படும் சிலமுக்கிய கனிமங்களை வணிக முறையில் வெட்டியெடுப்பதற்கும் கரும்பாறை மற்றும் இதர நிறப் பாறைகளை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்யும் பணிகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு கனிம நிறுவனம் 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறுவப்பட்டது. நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் தற்போது ரூ. 300 இலட்சம் ஆகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 207-50 இலட்சம் ஆகும்.

தனியாரின் பிடியிலிருந்த கனிம வளத்தை இந்த அரசு, அரசுடைமையாக்கியதுடன் டாமின் என்னும் கனிம வள நிறுவனத்தை 1978-ல் உருவாக்கி உள்ளது. அதன் தொடர்பாக கருங்கல் பாறை மெருகேற்றும் தொழிற்சாலை மணலியில் ரூ. 6 கோடியே 40 இலட்சம் மூலதனத்துடன் 25-3-86-ல் தொடங்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 266 இலட்ச ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கும். அடுத்து வரும் ஆண்டுகளில் இந்தத் தொகை மேன்மேலும் அதிகரிக்கும்.

தற்போது கூட்டுறவுத்துறையில் 11 சர்க்கரை ஆலையும், தனியார் துறையில் 10 சர்க்கரை ஆலையும், பொதுத்துறையில் 3 சர்க்கரை ஆலையும் இம்மாநிலத்தில் இயங்கு வருகின்றன.

ஒவ்வொரு சர்க்கரை ஆலையும், தான் அரவை செய்யும் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.5 வீதம் கரும்பு மீதான மேல் வரி (செஸ்) அரசுக்குச் செலுத்துகின்றன. மேற்படி தொகை கரும்பு வளர்ச்சிக்கான ஆராய்ச்சி, சர்க்கரைஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் புதிய சாலைகள் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள சாலைகளைப் பராமரித்தல் போன்ற இனங்களுக்குச் செலவழிக்கப்படுகின்றது. 1985-86-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## சிறுதொழில்கள்

| | |
|---|---|
| 1978ல் நிரந்தரமாகச் சான்றிதழ் பெற்ற சிறு தொழில்களின் எண்ணிக்கை | 18,789 |
| 1986 மார்ச்சுத் திங்களில் இந்த எண்ணிக்கை | 72,979 |
| 1978ல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | 297 |
| 1986 மார்ச்சுத் திங்கள் நிலவரப்படி இந்த எண்ணிக்கை | 597 |

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடந்த 30 ஆண்டுகளில் அதாவது 1949 லிருந்து 1973 வரை சிறு தொழில்களுக்கு வழங்கியுள்ள நிதி ரூ. 34 கோடி ஆகும்.

| | |
|---|---|
| ஆனால் 1982-83ல் மட்டும் | ரூ. 49 கோடி |
| 1983-84ல் | ரூ. 53.33 கோடி |
| 1984-85ல் | ரூ. 62.69 கோடி |
| 1985-86ல் | ரூ. 86.45 கோடி |

1-4-78 முதல் 31-5-86 வரை சிறுதொழில்கள் தொடங்க மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை மட்டும் 26,439 ஆகும்.

சர்க்கரைத் தொழில் பெருமளவில் நேரடி வேலைவாய்ப்பு அளிப்பதோடு சர்க்கரைஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு வழங்கி வருகின்றது.

மாநில அரசின் நிறுவனமான தமிழ்நாடு மின்னணுக் கழகம் இம்மாநிலத்தில் மின்னணுவியல் தொழிற்சாலைகளில் முன்னேற்றத்தினை தனது தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த மூலதனம் ரூ. 5 கோடியாகும். அதில் 1-3-86 வரை தமிழக அரசு ரூ. 3.24 கோடி முதலீடு செய்துள்ளது.

'எல்காட்' இதுவரை சுமார் 400பேர்களுக்கு அதன் சொந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளித்துள்ளது. இத்தொழிற்சாலை தருமபுரி மாவட்டத்தில் ஹோசூரில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த முதலீடு ரூ. 179.31 இலட்சமாகும். மிகக் குறுகிய கால அளவில், அதாவது 18 மாதங்களில் இது நிறுவப்பட்டு, 1983 மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் கொள்கலன்கள் விற்பனைச் சந்தையில் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளன. இத்தொழிற்சாலை தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கப் பெரிதும் உபயோகிக்கப்படும் உதிரி உறுப்புகளை தயார் செய்கின்றது. இத்தொழிற்சாலையின் உற்பத்தி 1985-86-ல் ரூ. 178 இலட்சமாக இருந்தது. 1986-87-ல் ரூ. 380 இலட்சமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பந்தப் பிரிவின் விற்பனை அளவு வெகுவாக அதிகரித்துள்ளது. 1983-84-ல் இப்பிரிவின் விற்பனை அளவு ரூ. 3.29 இலட்சமாக இருந்தது; 1984-85ல் ரூ. 24.58 இலட்சமாக உயர்ந்தது. 1985-86-ல் ரூ. 50 இலட்சமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. 1985 86-ல் ரூ. 18.60 இலட்சம் மதிப்புள்ள 3100 வானொலிப் பெட்டிகளை இப்பிரிவு ஊராட்சிகளுக்கு வழங்கியுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள மார்க்கோனி நிறுவனத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் 'எல்காட்' நிறுவனத்தின் தகவல் தொடர்புக் கருவிப் பிரிவானது 1985-ஏப்ரலில் இருந்து தகவல் தொடர்புக் கருவிகளை விற்பனைக்காக உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ.150 இலட்சம். சென்னையை அடுத்த திருவான்மியூரில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. அரசுத் துறைகளான காவல் துறை, நல்வாழ்வுத் துறை ஆகியவற்றிற்கும், இரயில்வேக்கும் இக்கருவிகள் தயாரித்து அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் உற்பத்தி மதிப்பு 1985-86-ல் ரூ. 60 இலட்சமாகவும், 1986-87-ல் ரூ.120 இலட்சமாகவும் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் குவார்ட்ஸ் அனலாக் சுவர்க் கடிகாரங்களை இந்நிறுவனம் விற்பனை செய்து உதவி வருகிறது. 1983-84-ல் 334 கடிகாரங்களும், 1984-85-ல் ரூ. 6.55 இலட்சம் மதிப்புள்ள 2,248 கடிகாரங்களும் விற்கப்பட்டன. 1985-86-ல் ரூ. 11 இலட்சம் மதிப்புள்ள கடிகாரங்களும், 1986-87-ல் ரூ. 14 இலட்சம் மதிப்புள்ள கடிகாரங்களும் விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநிலத்தில் விற்பனையாகும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் விற்பனை வரிசையில் 3-வது இடத்தை 'சியர்ஸ்' எல்காட்' பெற்றுள்ளது. 1985 86-ல் 20,000 தொலைக்காட்சிப் பெட்டிகள் விற்கப்பட்டன. வரும் ஆண்டில் அதன் விற்பனை 30,000 வரை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.






தமிழகத்தின் கல்வித்துறை

1. பள்ளிக்கல்வி
2. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி
3. கல்லூரிக் கல்வி
4. தொழில்நுட்பக் கல்வி
5. பொது நூலகங்கள்

என ஐந்து பெரும் பிரிவுகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. இந்த ஐந்து துறைகளிலும், கடந்த ஒன்பது ஆண்டுகளில் தமிழக அரசு செய்து வருகின்ற சாதனைகள் தமிழகத்தின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்துள்ள என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும்.

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுப்புச் சலுகைகள் அனைத்தும் தனியார் நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் வகையில் ஆணை இடப்பட்டது.

பணியிலிருக்கும்போது இறந்து விடும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் தமிழ்நாடு குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டம், தனியார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது.

கல்லூரிகளில் இருந்து வந்த புகுமுக வகுப்புகள் 1.7.78 முதல் ரத்து செய்யப்பட்டன. 10+2 +3 கல்வி முறை தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் புகுத்தப்பட்டது. +2 நிலையை பள்ளிகளோடு சேர்த்திட இந்த அரசு செய்த புரட்சிகரமான முடிவின் விளைவாக எஸ்.எஸ்.எல்.சி. க்கு மேலான உயர்கல்வி வசதி முதன் முதலாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில், அதுவும் பெரும்பாலான கிராமப் புறங்களில் எளிதில் கிடைத்திட வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. முதுகலை பட்டம் பெற்ற பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வைப் பாடம், பாடமாகத் தேற வகைசெய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. ( Compartmental System ). 1, 2, 3 வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியர்களை யாரும் தோல்வியுறச் செய்யக்கூடாது என்ற ஏற்பாடு செய்யப்பட்டது. கல்வி நிலையங்களில் மாணவர்களைச் சேர்க்கும்பொழுது பிற்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடு 31 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

அரசு பணியாளர்கள் ஏற்கெனவே பெற்று வந்த பின்வரும் சலுகை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

1977-78 லிருந்து ஆசிரியர்களின் பிள்ளைகளுக்குத் தொழில் படிப்பு படிக்க படிப்புதவித் தொகை ஆசிரியர் நலனுக்காகத் தேசிய நிதியிலிருந்து வழங்கப்படுகின்றது. பணியிலுள்ள ஓய்வு பெற்ற மற்றும் இறந்துவிட்ட ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு இப் படிப்புதவித் தொகைகள் கிட்டும். பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவப் படிப்புகளுக்குப் படிப்புதவித் தொகைகள் வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

1978-79ல் மேல்நிலைப் பள்ளிகளில் கலை, அறிவியல் பாடங்களைக் கற்றுத் தருவதற்கான ஆசிரியர் தேவை பெரும்பகுதி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை (முழுத் தகுதி பெற்றவர்களும் பெறாதவர்களும்) மேல்நிலைப் பள்ளிகளில் நியமித்து பூர்த்தி செய்யப்பட்டது. மேற்கொண்டு தேவையாயிருந்த அப் பாட ஆசிரியர்கள் தேவையைப் பூர்த்தி செய்ய 1978-79ஆம் ஆண்டில் 1,300 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்

டன. 1979-80ல் மேல்நிலைப் பள்ளிகளுக்கான கூடுதல் ஆசிரியர் பதவிகள் 2,438 ஏற்படுத்தப்பட்டன. 1980-81ல் கூடுதலாக மேலும் 2,100 பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. உயர் நிலைப்பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் உடற்பயிற்சியைக் கவனிக்கப் போதுமான ஆசிரியர்கள் இல்லாததால் 1980-81ல் கூடுதலாக 200 உடற்பயிற்சி இயக்குநர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன.

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் சுமார் 95,000 பேர்களும் 1.6.1981 முதல் அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டு அரசு ஊழியர்களுக்குரிய அனைத்துச் சலுகைகளும் விஸ்தரிக்கப்பட்டன.

1982-83ல் இளஞ்சிறார்கள் கல்விக்கெனப் பெரிய அளவிலான திட்டம் தொடங்கப்பட்டது. இளஞ்சிறார்களுக்கு பள்ளி செல்லும் மனப்போக்கைப் புகட்டுதல் மூலம் இளஞ்சிறார் கல்வியானது தொடக்கக் கல்வி வளரவும் உதவும். இத்திட்டத்தின் முதற்கட்டமாக இம் மாநிலத்திலுள்ள 4,433 குழந்தைகள் நல மையங்கள் (பால்வாடிகள்) ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரி பிரிவு ஏற்படுத்த வகை செய்யப்பட்டது.

1980-ஆம் ஆண்டிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவ, மாணவிகளுள் அதிக மதிப்பெண் பெற்று முதலிடம் பெற்று தேர்ச்சி காட்டிய மாணவர் அல்லது மாணவிக்குத் தங்கப் பதக்கம், இரண்டாம் இடம் பெற்ற மாணவர் அல்லது மாணவிக்கு வெள்ளிப் பதக்கம் மற்றும் முதன் மூன்று இடங்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இளநிலை, இடைநிலை மற்றும் அவற்றுக்குச் சமமான நிலைகளிலான ஆசிரியர்களுள் 20 ஆண்டு தத்தம் நிலையில் திருப்திகரமாகப் பணியாற்றுபவர்களுக்கு அவர்கள் தம் பதவிக்குரிய தேர்வு நிலையில் 10 ஆண்டு பணியாற்றி முடித்திராவிட்டாலும் கூட சிறப்பு நிலை வழங்கும் சலுகை 1.6.81 முதல் அமலாக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் அனைவரையும் 1.1.81 முதல் முதனிலைத் தமிழாசிரியர்களைத் தரஉயர்வு செய்து ஆணை இடப்பட்டது.

அரசு உயர் நிலைப் பள்ளிகளில் காலி ஏற்படும் தலைமை ஆசிரியர் பதவிகளுக்கு, தமிழாசிரியர்களாகப் பணிபுரிபவர்களையும் பதவி உயர்வு செய்து நியமனம் செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தேர்வு நிலைத் தகுதி பெற்றுள்ள பள்ளி உதவி ஆசிரியர்கட்கு அவர்கள் தேர்வு நிலை



அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழக தொடக்க விழா

பெற்று 10 ஆண்டுக் காலம் பணி முடிக்காமல் இருந்தாலும், பள்ளி உதவி ஆசிரியர் பணியில் 20 ஆண்டுக் காலம் பணி முடித்திருந்தால், சிறப்பு நிலை பெறத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்பட்டு, அவ்வாணை 1.4.82 முதல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

1976-77ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கென அரசால் 127 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1985-86ஆம் நிதி ஆண்டிற்குப் பள்ளிக் கல்வித் துறைக்கென மட்டும் ரூ. 445 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**முதலமைச்சரின் மூன்று முன்னோடித் திட்டங்கள்**

முதலமைச்சரின் குழந்தைகளுக்கான சத்துணவுத்திட்டம் 1.7.82 முதல் துவக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கூடுதலான மாணவர் சேர்க்கையில் முன்னேற்றம் காண்பதோ ''பள்ளிக்கு வராமையும்'' இடையில் பள்ளியை விட்டு ''விலகுதலும்'' பெருமளவுக்குக் குறைய வழிவகுத்துள்ளது.

1984-85ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையினைத் தொடர்ந்து முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவு உண்ணும் மாணவர்கட்கு இலவசப் பாடப் புத்தகங்கள் இந்தக் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன. ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

**ஆசிரியர்கள் எண்ணிக்கை**

| | 1976-77 | 1985-86 |
|---|---|---|
| முதல்நிலைப் பள்ளிகள் | 1,11,033 | 1,16,625 |
| நடுநிலைப் பள்ளிகள் | 67,846 | 66,919 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 72,838 | 39,978 |
| மேல் நிலைப்பள்ளிகள் | — | 64,347 |
| | 2,51,717 | 2,87,869 |



**இலவச சீருடை மற்றும் இலவச பாடப் புத்தகங்கள்-பயன்பெறுவோர் எண்ணிக்கை (1-ஆம் வகுப்பு முதல 8-ஆம் வகுப்பு வரை)**

| | |
|---|---|
| **ஆண்கள்** | 33,05,286 |
| **பெண்கள்** | 25,63,067 |
| மொத்தம் | 58,68,353 |

புதிய கல்விக் கொள்கை பற்றிய கருத்துக்கள் பல நிலைகளில் விவாதிக்கப்பட்டு தமிழ்நாட்டு அரசினுடைய கருத்து நடுவண் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. புதிய கல்விக் கொள்கை பற்றிய பொது அம்சங்களை ஆசிரியர் சமுதாயம் தெரிந்து கொள்வதற்கான புத்துணர்வுப் பயிற்சி நாடு பூராவும் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 180 மையங்களில் 720 புத்துணர்வுப் பயிற்சி முகாம்கள் மூலமாக 36,000 ஆசிரியர்கள் 6.6.86 முதல் தொடங்கி பயிற்சி பெற்றார்கள்.

15.9.85 முதல், மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவு திட்டத்தின் கீழ் உணவு உண்ணும் ஒன்று முதல் எட்டு வகுப்பு வரையிலான எல்லா மாணவ, மாணவிகட்கும் இலவசச் சீருடை வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனாக சுமார் 60 லட்சம் மாணவ, மாணவிகள் பயன் பெறுகின்றனர்.

**பள்ளிகளின் எண்ணிக்கை**

| | 1976-77 | 1985-86 |
|---|---|---|
| முதல் நிலைப் பள்ளிகள் | 27,306 | 29,118 |
| நடுநிலைப் பள்ளிகள் | 5,730 | 5,691 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 3,020 | 2,569 |
| மேல் நிலைப் பள்ளிகள் | | 1,554 |
| மொத்தம் | 36,056 | 38,932 |

**பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி**

இன்றைய தேசிய கொள்கையான 'எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி' என்ற இலக்கை அடைவதற்கான முயற்சியில் தமிழ் நாடு முன்னணியில் இருக்கிறது. இவ் வளர்ச்சி, கடந்த பத்து ஆண்டுகளில் சீரிய திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செவ்வனே நிறைவேற்றிய தன் விளைவேயாகும்.

மேற்குறிப்பிட்ட தேசிய குறிக்கோளை நிறைவேற்றும் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக 1976-ம் ஆண்டே பள்ளிசாராக் கல்வி இயக்ககம் தமிழ்நாட்டில் தனியாகத் தோற்றுவிக்கப்பட்டது. 1976-77ம் ஆண்டில் 11 இலட்சம் அளவில் மட்டும் திட்டத்திற்கான செலவு செய்த இவ்வியக்ககம் 1986-87ஆம் ஆண்டில் பெற்றுள்ள மொத்த நிதி ஒதுக்கீடு ஏறத்தாழ ரூ. 550 இலட்சம் ஆகும்.

1976-77ஆம் ஆண்டு முதல் பள்ளிசாராக் கல்வித் திட்டம் நமது மாநிலத்தில் நடைமுறையில் உள்ளது. இத்திட்டம் பள்ளிப் படிப்பைத் தொடர இயலாத 6-14 வயதினருக்குக் கல்வி அளிக்கும் வகையில் தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

ஊரகச்செயல் முறை எழுத்தறிவுத் திட்டமானது நடுவண் அரசின் முழு நிதியுதவியுடன் தமிழ்நாடு அரசின் மூலம் 1979-80ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்றது.

இத்திட்டத்தின் மூலம் , 8100 மையங்கள் நடைமுறையில் உள்ளன. ஒரு திட்டப் பகுதிக்கு முதலாண்டிற்கு ஆகும் செலவு ரூ. 10.48 இலட்சம் ஆகும். அடுத்து வரும் ஆண்டுகளுக்கு ஆகும் செலவு ரூ. 9.75 இலட்சம்

மொத்த மாணவர்கள் எண்ணிக்கை

| | 1976-77 | 1985-86 |
|---|---|---|
| மாணவர் | 47.10 | 61.38 |
| மாணவியர் | 33.93 | 47.87 |
| மொத்தம் | 81.03 | 103.25 |

மேல்நிலைப்பள்ளி நிலையில் தொழிற் கூடங்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருந்து வருகிறது. 1985-86ல் மொத்தம் 1,126 மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. 1985-86ல் மேல் நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 3.49 லட்சம் மாணவர்களில் 67,765 பேர் அதாவது சுமார் 17 விழுக்காட்டினர் பாடங்களைப் பயின்று வந்தனர்.

ஆகும். தற்போது இத்திட்டத்திற்கு இந்த ஆண்டில் சுமார் 256 இலட்சம் செலவு செய்யப்பட உள்ளது.

1979-80ஆம் ஆண்டில் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டமானது முழுவதும் மாநில அரசின் நிதியுடன், தமிழ்நாட்டில் 61 தன்னிறைவுத் திட்டத்துக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் 140 இலட்ச ரூபாய் செலவில் 6100 மையங்கள் செயல்படுத்த ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## இவ்வாண்டில் பயன்பெறுவோர் பற்றிய விவரம்

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| கற்போர் | 25,306 | 2,27,384 | 2,52,690 |
| இவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் | 12,385 | 99,869 | 1,12,254 |
| இவர்களில் பழங்குடியினர் | 807 | 1,652 | 2,459 |

இத்திட்டமானது 1983-84-ஆம் ஆண்டில் மேலும் 54 ஊராட்சி ஒன்றியங்களுக்கு விரிவு படுத்தப்பட்டு தற்போது இந்த 5,400 மையங்களிலும் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது தவிர இத்திட்டம் 1985-86-ஆம் ஆண்டில் மேலும் 6 ஒன்றியங்களுக்கு விரிவு படுத்தப்பட்டு 600 மையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தற்போது மொத்தம் 121 ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் 100 மையங்கள் வீதம் 12100 மையங்கள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் கல்லூரிக் கல்வித்துறையின் கீழ் கலைக் கல்லூரிகள் கல்வியியல் கல்லூரிகள், தமிழ்க் கல்லூரிகள் மற்றும் சமூகப் பணிக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக் கல்லூரிகள் சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக் கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகங்களின் இணைவு பெற்று செயல்பட்டு வருகின்றன.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முதலாகப் பல்கலைக் கழக மான்யக் குழுவின் ஆலோசனைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சில தனியார் கல்லூரிகளுக்கு 1979-80 முதல் தன்னாட்சி வழங்கப்பட்டது.

கடந்த பத்து ஆண்டுகளில் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 2 இலட்சம் ஆகும். 1979-80-ஆம் ஆண்டு புகுமுக வகுப்பு கல்லூரிகளிலிருந்து நீக்கப்பட்டு விட்டதால் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 1.35 இலட்சமாகக் குறைந்து விட்டது. 1985-86ஆம் ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கை 2 இலட்சமாக அதிகரித்துள்ளது. இதைத் தவிர அஞ்சல் வழிக் கல்வி மூலம் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். சென்னை, மதுரை காமராசர் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் அஞ்சல் வழிக் கல்வியை வழங்கி வருகின்றன.

1976-77-ஆம் ஆண்டு கல்லூரி ஆசிரியர்களின் எண்ணிக்கை சுமார் 12,000 ஆகும். 1986-87ஆம் ஆண்டுஇது சுமார் 14,100 ஆகும்.

பத்து ஆண்டுகள் பணி முடித்திருந்த எல்லா உதவிப் பேராசிரியர்களுக்கும் 1.4.80 முதல் பேராசிரியர்களாகப் பதவி மேம்பாடு செய்து அரசு ஆணையிட்டது. இதுவரையில் 4357 உதவிப் பேராசிரியர்கள் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டு அதிக ஊதியம் பெற்று வருகிறார்கள்.




தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் மாதந்தோறும் முழுமையாகவும் குறித்த காலத்திலும் ஊதியம் பெறும் வகையில் நேரடிச் சம்பளப் பட்டுவாடா திட்டம் 1.4.80 முதல் செயல்பட்டு வருகின்றது.

இவற்றைத் தவிர தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றும், கொடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டன. வள்ளல் அழகப்பர் அவர்களின் நினைவைப்போற்றும் வகையில் அழகப்பர் பல்கலைக் கழகம் 1985-86 முதல் செயல்பட்டு வருகின்றது. இப்புதிய பல்கலைக் கழகங்களின் வளர்ச்சிக்காக அரசு அதிக அளவில் மான்யம் அளித்து வருகின்றது. புதிய பாடத்திட்டங்கள் அமலாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள கலைக் கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக் கழகங்களுடன் இணைவு பெற்று செயல்பட்டு வந்தன. ஒவ்வொரு பல்கலைக் கழகத்துடன் நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரிகள் இணைந்து செயல்பட்டன. இந்த நிலையை மாற்றியமைப்பதற்காக 1982-ஆம் ஆண்டில் பாரதியார் பல்கலைக் கழகம் கோவையிலும், பாரதிதாசன் பல்கலைக் கழகம் திருச்சியிலும் நிறுவப்பட்டன.

1977-78ஆம் ஆண்டு முடிய தொழில்நுட்பக் கல்வித்துறையின் கீழ் 6 பொறியியற் கல்லூரிகளும் 3 மகளிர் பாலிடெக்னிக்குகள் உள்ளிட்ட 38 பாலிடெக்னிக்குகளும் இருந்தன. தற்போது (1985-86 முடிய) 30 பொறியியற் கல்லூரிகளும் 12 மகளிர் பாலிடெக்னிக்குகள் உள்பட 129 பாலிடெக்னிக்குகளாக உயர்ந்துள்ளது. அதாவது கடந்த ஏழெட்டு ஆண்டுகளில் 24 புதிய பொறியியற் கல்லூரிகளும் 91 புதிய பாலிடெக்னிக்குகளும் துவக்கப்பட்டவையாகும்.

மேற்கண்ட வளர்ச்சியின் காரணமாகப் பொறியியற் கல்லூரிகளின் சேர்ப்பு எண்ணிக்கை 1977-78ஆம் ஆண்டு முடிய 1500ஆக (125 மகளிர் எண்ணிக்கை உட்பட) இருந்தது, தற்போது 5700 (890 மகளிர் எண்ணிக்கை உட்பட) ஆக அதிகரித்துள்ளது. இதுபோன்றே 1977-78ஆம் ஆண்டில் 5700 (445 மகளிர் எண்ணிக்கை உட்பட) ஆக இருந்த பாலிடெக்னிக்குகளின் சேர்ப்பு எண்ணிக்கை தற்போது 21,100 (1600 மகளிர் எண்ணிக்கை உட்பட) ஆக அதிகரித்துள்ளது.

# இணையற்ற இந்திய முறை மருத்துவம்



இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி முறை மருத்துவத்தை மேம்படுத்துவதற்காக அரசு தீவிரமாக முயற்சிகள் மேற்கொண்டது என்பதை 1977-78 முதல் 1986-87 வரை அத்துறைக்காக அரசு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் தொகை ஒதுக்கீடு செய்துள்ளதிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.

நிதி ஒதுக்கீடு அதிகரித்துக் கொண்டே வருவதைப் பின்வரும் விவர அட்டவணையிலிருந்து காணலாம்.

| ஆண்டு | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு |
|---|---|
| 1977—78 | ரூ. 63.88 லட்சம் |
| 1978—79 | ,, 64.72 ,, |
| 1979—80 | ,, 113.70 ,, |
| 1980—81 | ,, 129.45 ,, |
| 1981—82 | ,, 231.20 ,, |
| 1982—83 | ,, 235.72 ,, |
| 1983—84 | ,, 243.09 ,, |
| 1984—85 | ,, 266.57 ,, |
| 1985—86 | ,, 330.47 ,, |
| 1986—87 | ,, 348.82 ,, |

**மருத்துவக் கல்வி**

1977-78-ஆம் கல்வியாண்டில் பி. எஸ். எம்.எஸ். என்னும் பட்டப்படிப்பு இந்திய மருத்துவ மையக் கழகத்தால் அனுமதியளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 1978-79-ஆம் ஆண்டு முதல் பி.எஸ்.எம்.எஸ். படிப்புக்கு ஆண்டு தோறும் தேர்ந்து எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 40-லிருந்து 44க்கு உயர்த்தப்பட்டது. 1980-81-ஆம் ஆண்டு முதல் அதன் எண்ணிக்கை 75க்கு அதிகரிக்கப்பட்டது. 1983-84-ஆம் ஆண்டு 75-லிருந்து 77-ஆக உயர்த்தப்பட்டது. மேற்கொண்டு 1984-85-ஆம் ஆண்டு 77-லிருந்து 100-ஆக பி.எஸ்.எம்.எஸ். மாணவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. மூன்றாண்டு பயிற்சிக் காலமுள்ள சித்த மருத்துவம், சித்த குணபாடம் ஆகிய இரு பிரிவுகளைக் கொண்ட சித்தா மேற்பட்டப் படிப்பு அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் பயிற்சி பெறத் தேர்ந்து எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மேற்கண்ட ஒவ்வொரு பிரிவிலும் 10 ஆகும். மேற்கண்ட இரு பிரிவுகளுக்கும் சேர்த்துப் பட்ட மேற்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை 21-ஆக1983-84ல் உயர்த்தப்பட்டது.

1985-86-ஆம் ஆண்டு அரசு பட்ட மேற்படிப்பில் சிறப்பு மருத்துவம், பாலர் மருத்துவம் ஆகிய மேலும் இரு பிரிவுகள் தொடங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்பட்ட மேற்படிப்புப் பயிற்சியாளர்களுக்கு அதிகப்படியான உதவித்தொகை 20.10.1981 முதல் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவை வருமாறு:—

5 ஆண்டுகள் முறைப்படுத்தப்பட்ட பணி முடித்த பணியிலுள்ளவர்கள் மற்றும் அவர்



Sig 4

கவின் தகுதி காண் பருவம் முடிந்திருந்தால் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 650 பெறுவார்கள்.

5 ஆண்டுகள் முறைப்படுத்தப்பட்ட பணி முடிந்த பணியிலுள்ளவர்கள் மாதம் ஒன்றிற்கு ரூ. 525 பெறுவார்கள்.

தற்காலிக நியமனங்களிலுள்ளவர்களும் பணியில்லாதவர்களும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 325 பெறுவார்கள். மருந்தாளுநர் பட்டயப்படிப்புப் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலும், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையிலும் நடத்தப்பட்டு வருகிறது. 1981/82க்கு முன் ஆண்டுதோறும் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் சித்தாவில் 7 பேர்களும், ஆயுர்வேதாவில் 5 பேர்களும், யுனானியில் 5 பேர்களும் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் சித்தாவில் 8 பேர்களும் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள். 1981-82 முதல் பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் 8-லிருந்து 25 மாணவர்களாகவும் சென்னை அரசினர் அண்ணா இந்திய மருத்துவ மனையில் 7-லிருந்து 25 சித்தா மாணவர்களாகவும் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. 1983-84-ஆம் ஆண்டு முதல் ஆயுர்வேதம், மற்றும் யுனானிக்கான பட்டயப்படிப்பு (டிப்ளமா இன் ஃபார்மசி) தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு அவற்றிற்கான அனுமதிக்கப்பட்ட தலா 5 இடங்களை சித்தா மருந்தாளுநர் படிப்புடன் சேர்த்துக் கொள்ளப்பட்டு எண்ணிக்கை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டையில் 30 இடங்களும், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, சென்னையில் 30 இடங்களும் ஆக மாற்றப்பட்டன.

1984-85-ஆம் ஆண்டு மருந்தாளுநர் பட்டயப் படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பயிற்சி நிலையங்களிலும் 50-ஆக உயர்த்தப்பட்டது. மே 1982-ல் அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி (சித்தா) என்ற பெயர் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி என்று மாற்றப்பட்டது. பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் கீழ்க்கண்ட சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

உடல் கூற்றியல் பிரிவுக் கட்டடம் கட்டுதல் (1979-80).

ஆண், பெண் மாணவர்களுக்கு தனித்தனி மாணவர் இல்லம் கட்டுதல் (1979-80).

பயிற்சி பெறுபவர்களுக்கு விடுதி கட்டுதல் (1979-80).

உடற்கூற்றியல் பிரிவுக்கான தளவாடங்கள் வாங்குவதற்காக 1981-82-ல் அனுமதி வழங்கப்பட்டு வாங்கப்பட்டன. 1983-84-ஆம் ஆண்டு பட்ட மேற்படிப்புக்கான தனிக்கட்டடமும், விலங்கின (Animal house) கூடத்திற்கான கட்டடமும் கட்ட அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

1984-85-ல் பட்டப்படிப்பில் குணபாடம் உடற்கூறுகள், உடல் தத்துவம், நோய் நாடல் ஆகிய நான்கு பிரிவுகளின் வளர்ச்சிக்காக, பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பிற பணியாளர்களும் நியமிக்க ஆணை வழங்கப்பட்டது.

1985-86-ஆம் ஆண்டு பட்டப்படிப்பில் (1) மருத்துவம் (2) அறுவை மருத்துவம் (3) சூல் மருத்துவம் மகளிர் மருத்துவம், மற்றும் பிள்ளைப்பிணி மருத்துவம் (4) நஞ்சு நூல், மருத்துவ நீதி நூல் ஆகிய நான்கு துறைகளின் மேம்பாட்டிற்கான கூடுதல் பணியாளர்கள் நியமிக்க ஆணை வழங்கப்பட்டது.


15.11.1985 அன்று அண்ணா மாவட்டம், பழனியில் புதிய மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 50 மாணவர்கள் பி.எஸ்.எம். எஸ். பட்டப்படிப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதற்குரிய பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1979-80ஆம் ஆண்டு அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி (யுனானி) சென்னையில் 15 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. நவம்பர் 1982-ல் அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி (யுனானி) என்ற பெயர் அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரி என்று மாற்றப்பட்டது.

இந்திய முறை மருத்துவ நிலையங்களில் செவிலியர் பணிகளைக் கவனித்துக் கொள்ள அலோபதி முறைப் பயிற்சி பெற்ற செவிலியர் தற்போது பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு இந்திய முறை வைத்தியத்தில் பயிற்சி தரும் திட்டத்தை 1980-81-ல் அரசு அனுமதித்துள்ளது.

1982-83-ல் அரசு யோக முறையை ஒரு வைத்திய முறையாக ஏற்றுக் கொண்டுள்ளது.

கீழ்ப்பாக்கம் மருத்துவமனை வளாகத்தில் இருந்த ஓமியோபதி மருத்துவக் கல்லூரி 28.8.1985-ல் சென்னையிலிருந்து மதுரை மாவட்டம் திருமங்கலத்திற்கு மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. 1983-84-ஆம் ஆண்டு ஒரு இடம் அதிகரிக்கப்பட்டு மொத்த இடங்கள் 22-ஆக உயர்த்தப்பட்டது. 1985-86-ஆம் ஆண்டு ஓமியோபதி மருத்துவ பட்டயப்படிப்பு ஓமியோபதி பட்டப்படிப்பாக (பி.எச்.எம்.எஸ்) மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டது.



1977க்குப் பிறகு சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் செய்யப்பட்ட வளர்ச்சிப் பணிகள் பின் வருமாறு:

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் அரசிதழ் பதிவில்லா ஊழியர்களுக்கு என்று தனி வெளி நோயாளிகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

1979-80-ல் நூல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

மருந்து செய் நிலையம் இயந்திரமயமாக்கும் பணி 1979-80ல் ஆரம்பிக்கப்பட்டது.

1982-83-ஆம் ஆண்டில் நோய்க் குறியியல் ஆய்வகம், உயிர் வேதியியல் ஆய்வகம் ஆகியவற்றிற்குப் பணியாளர்கள் நியமிக்கவும் சாதனங்கள் வாங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பிரிவுகள் 19.4.1982 முதல் இயங்கி வருகின்றன.

1982-83-ஆம் ஆண்டு, ஊடுகதிர் சாதனம் வாங்கவும் அதற்கான பணியாளர்களையும் நியமிக்க ஆணை வழங்கப்பட்டு 25.8.1983 முதல் இயங்கி வருகிறது.

1983-84-ஆம் ஆண்டு மருத்துவ ஆவணப் பிரிவு (மெடிகல் ரெகார்டு செக்ஷன்) ஏற்படுத்தப்பட்டது.

1977-க்கு பிறகு பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனையில் செய்யப்பட்ட சாதனைகள் பின் வருமாறு:

ஒரு புதிய புற நோயாளர் பிரிவு டிசம்பர் 1978-ல் திறக்கப்பட்டது.

1980-81ல் நவீன வசதிகளோடு கூடிய சமையற்கூடம் அனுமதிக்கப்பட்டது.

இயந்திரமயமாக்கப்பட்ட மருந்து செய் நிலையம் 1980-81லும், 1982-83 லும் அனுமதிக்கப்பட்டது.

ஊடுகதிர்ப் பிரிவுக்கான கட்டடம் கட்ட 1982-83ல் அனுமதியளிக்கப்பட்டது.

1982-83ல் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவின் கட்டடம் கட்ட அரசு அனுமதித்துள்ளது.

1983-84-ஆம் ஆண்டு ஊடுகதிர் சாதனம் வாங்கவும், அதற்குரிய பணியாளர்களை நியமிக்கவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

1984-85-ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்தொட்டி கட்ட அனுமதி வழங்கப்பட்டது.

1986-87-ஆம் ஆண்டு மருத்துவமனையின் படுக்கைகளின் எண்ணிக்கை 232-லிருந்து 250 ஆக உயர்த்தப்பட்டது.

1979-80-ல் தாலுக்கா, மற்றும் தாலுக்கா அல்லாத மருத்துவ மனைகளில் 15 சித்தா பிரிவுகளும், 1980-81-ல் 15 சித்தா பிரிவுகளும் திறக்க அரசு அனுமதியளித்துள்ளது. தற்போது மாவட்ட தலைமை, தாலுக்கா மற்றும் தாலுக்கா அல்லாத மருத்துவமனைகளில் 103 சித்தா பிரிவுகள் இயங்குகின்றன.

தமிழ்நாட்டில், 8 அரசினர் சித்த மருந்தகங்களும் 5 ஆயுர்வேத மருந்தகங்களும் இயங்கி வருகின்றன. 1984-85-ஆம் ஆண்டு சென்னையில் இரண்டு மருந்தகங்கள் தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டு சென்னை பட்டினப்பாக்கத்தில் ஒரு மருந்தகம் தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையுடன் இணைக்கப்பட்ட மருந்து செய் நிலையம் ஒன்றும், பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட மருந்து செய் நிலையம் ஒன்றும் இயங்கி வருகிறது.

25 படுக்கைகள் கொண்ட அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனை இயங்கி வருகிறது.

1975-76-ஆம் ஆண்டு அரசின் மாவட்ட தலைமை மருத்துவமனை திண்டுக்கல்லில் ஒரு ஓமியோபதி பிரிவு தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. 1978-79-ஆம் ஆண்டு சேலம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் ஓமியோபதி பிரிவு தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. 1980-81-ஆம் ஆண்டு ஆறு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் ஓமியோபதிப் பிரிவு தொடங்க ஆணை வழங்கப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டு 7 மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் ஓமியோபதி பிரிவு தொடங்க ஆணை வழங்கப்பட்டது. 1984-85-ஆம் ஆண்டு சென்னையில் இரண்டு அரசினர் ஓமியோபதி மருந்தகங்கள் தொடங்க ஆணை வழங்கப்பட்டது. மேற்கண்ட அனைத்து ஓமியோபதி பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் 1983-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதன் கீழ் இயங்கி வரும் விற்பனைப் பிரிவு மூலம், சித்தா, ஆயுர்வேதம், யுனானி தொடர்பான நூல்கள் வெளியிடப்படுகின்றன.

சித்த மருத்துவ வாரியத்தால் நாட்டு மருந்துகள் குறித்துப் பன்னாட்டு மாநாடு ஒன்று 1986 சனவரி 23 முதல் 25-ஆம் நாள் வரையில் சென்னையில் நடத்தப்பட்டது.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் தமிழ்நாடு மருந்துச் செடிப் பண்ணைகள்-மூலிகை மருந்துக்கழகம் 1.8.1984 முதல் இயங்கி வருகிறது.

மூலிகைத் கூந்தல் தைலத்தைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

மூலிகைத் தேயிலை, மூலிகை இனிப்பு, மூலிகை பால்பெருக்கி, மூலிகைப் பற்பொடி, கண்சொட்டு மருந்து, ஏனைய இந்திய முறை மருந்துகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.



# உணவுத் துறையின் ஒப்பற்ற பணிகள்

**1985-86**-ஆம் நிதி ஆண்டின் துவக்கத்தில், மாநிலத்தின் உணவு நிலைமை மிகவும் திருப்திகரமாக இருந்தது. 1984-ஆம் ஆண்டு குறுவை மற்றும் 1985-ஆம் ஆண்டு சம்பா பருவங்களில் உணவு உற்பத்தி சிறப்பாக இருந்தால் வெளிச்சந்தையிலும், அரசிடமும் கணிசமான இருப்பு இருந்தது. 1985ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் பொது விநியோகத்தில் கேட்பு அதிகரித்தது. 1985ஆம் ஆண்டு ஜூலை ஆகஸ்டு, செப்டம்பர் அக்டோபர் மாதங்களில், பொதுவிநியோகத்தில் மட்டும் கேட்பு 1 லட்சம் மெ.டன்களுக்கும் மேல் கூடியது.

விவசாயிகளுக்கு அளிக்கப் பட்ட இடு பொருள் மானியமும் குவிண்டாலுக்கு ரூ.20-லிருந்து ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டது. மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள விலைகளுக்கும் மேலாக இடுபொருள் மானியம் வழங்கப்படுகிறது.

| ரகம் | குவிண்டால் நெல்லுக்கு | |
|---|---|---|
| | 1984-85 | 1985-86 |
| | ரூ. | ரூ. |
| சாதாரணம் | 137 | 142 |
| சன்னம் | 141 | 146 |
| மிகச் சன்னம் | 145 | 150 |

1985ஆம் ஆண்டு குறுவையில் 3.75 இலட்சம் விவசாயிகளும், 1986-ஆம் ஆண்டு சம்பாப் பருவத்தில், 15-2-1986 முடிய 1.80 இலட்சம் விவசாயிகளும் இடுபொருள் மானியம் பெற்று பயனடைந்துள்ளனர். குறுவையில் அளிக்கப்பட்ட இடுபொருள் மானியத்தின் மதிப்பு ரூ.11.62 கோடியும், சம்பாவில் இதுவரை அளிக்கப்பட்ட இடுபொருள் மானியத்தின் மதிப்பு ரூ. 5.50 கோடியும் ஆகும்.

1981ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் மத்திய அரசு ஐந்து தடவை விலையை உயர்த்தியுள்ளபோதிலும், தமிழக அரசு பொது விநியோகத்தில் அரிசியின் விற்பனை விலையை மாற்றி அமைக்கவில்லை.

இம்மாநிலத்தில் 20,723 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 15,648 கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், 5011 கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், 64 கடைகள் மலைத்தோட்ட நிர்வாகங்கள், தொழிற் சங்கங்கள் போன்ற அமைப்புகளாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நியாய விலைக் கடைகள் மூலமாக 119.65 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் நியாயவிலைக் கடைகள் அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற அரசு ஆணைக்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. இது குறித்து மற்றொரு வழக்கு உச்சநீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் விரைவில் உச்ச நீதி மன்றத்தின் ஆணைகள் பெறத்தேவையான நடவடிக்கைகளை இவ்வரசு எடுத்து வருகிறது.

நியாய விலைக் கடைகளின் பொருளாதார நிலை பற்றி ஆராய மாநிலக் கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறை இயக்குநரை தலைவராகக் கொண்டு அரசு அமைத்த குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**அரிசி**

1985-86-ஆம் ஆண்டில், இதுவரை எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு அரிசி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 28-2-1986 வரையில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்ட மொத்த அளவு 9.98 லட்சம் டன்களாகும். ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் மாதமொன்றுக்கு 1.03 லட்சம் டன்களாக இருந்த அரிசின் விநியோக அளவு, குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் அளவைக் குறைத்ததாலும், போலிக் குடும்ப அட்டைகளை ஒழிப்பதை தீவிரப்படுத்தியதாலும், ஆண்டின் கடைசி நான்கு மாதங்களில் மாதமொன்றுக்கு சுமார் 70,000 டன்களாகக் குறைந்துள்ளது.

**கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள்:**

மத்திய அரசு முன்பு போலவே இந்த ஆண்டும் மாதமொன்றுக்கு 30,000 டன்கள் கோதுமையை இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்தது. ஆனால், பொது விநியோக முறையின் கீழ் கோதுமை வாங்குவது தொடர்ந்து குறைவாகவே உள்ளது. மத்திய அரசின் மொத்த ஒதுக்கீடான 3,30,000 டன்களில் 1.4.1985 முதல் 28.2.1986 வரையிலான காலத்தில் 57,702 டன் கோதுமைதான் நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு 1-2-1986 முதல் கோதுமை விற்பனை விலையை குவிண்டால் ஒன்றுக்கு 172 ரூபாயில் இருந்து 190 ரூபாயாக உயர்த்தியது. இதன் காரணமாக மாநில அரசு கோதுமையில் சில்லறை விற்பனை விலையை கிலோ ஒன்றுக்கு 2.05 ரூபாயாக நிர்ணயித்துள்ளது.

நாடு முழுவதும் ஒரே விலையில் விற்கப்படும் லெவி சர்க்கரை நியாய விலைக் கடைகள் மூலம் மாதமொன்றுக்கு நபர் ஒருவருக்கு 450 கிராம் என்ற அளவில் விநியோகிக்கப்படுகிறது. கிலோ ஒன்றுக்கு 4 ரூபாயாக இருந்த லெவி சர்க்கரையின் விலை 1-4-1985 முதல் 4.40 ரூபாயாகவும் 1-12-1985 முதல் 4.80 ரூபாயாகவும் மத்திய அரசால் உயர்த்தப்பட்டது. 1985-ஆம் ஆண்டில் ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களிலும், ஆகஸ்ட் முதல் சனவரி 1986 முடியவும், கார்டிற்கு மாதமொன்றுக்குக் கூடுதலாக ஒரு கிலோ லெவி சர்க்கரை வழங்கப்பட்டது.

1985 ஜூன் முதல் நவம்பர் வரையிலான காலத்தில் வெளி அங்காடியில் சர்க்கரை விலை உயர ஆரம்பித்தபோது வழக்கமாக இம்மாநிலத்துக்கு ஒதுக்கப்படும் 21,292 டன்களும், கூடுதலாக மாதமொன்றுக்கு 3,402 டன்கள் லெவி சர்க்கரை ஒதுக்கப்பட்டதால் வெளிச் சந்தை விலை கட்டுப்படுத்தப்பட்டது. இதைத் தவிர, விலையைக் கட்டுப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்டது. மத்திய அரசு ஒதுக்கீடு செய்த வெளிச்சந்தை சர்க்கரை விநியோகத்தை முறைப்படுத்தி, சர்க்கரை விலை வெளிச் சந்தையில் உயர்வதை இந்த அரசு கடுத்தது.

மாதம் ஒன்றுக்கு இம்மாநிலத்துக்கு தேவைப்படும் 60,000 கிலோ லிட்டரில, மத்திய அரசு 47,000 கிலோ லிட்டரைத்தான் ஒதுக்கீடு செய்கிறது. வெள்ளநேரத்தில் அதிகப்படியாக 1,000 டன் மண்ணெண்ணெய் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. குடும்ப அட்டைதாரர்களின் தேவைக்கு அதிகமாக மண்ணெண்ணெய் இருந்தால், நகராட்சிகள் மற்றும் நகரியப் பகுதிக் குடும்ப அட்டைதாரர்களுக்கு, அதை வழங்க மாவட்ட ஆட்சி தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பெட்ரோலியம் பொருட்களின் விலையை மத்திய அரசு ஏற்றிய காரணத்தால், மண்ணெண்ணெய்யின் விற்பனை விலை சென்னையிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் லிட்டர் ஒன்றுக்கு 2.25 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

மத்திய அரசு, இம்மாநிலத்துக்கு மாதமொன்றுக்கு 3,600 டன்கள் சமையல் எண்ணெய் ஒதுக்கீடு செய்கிறது. இது தவிர இந்துஸ்தான் தாவர எண்ணெய்க் கழகத்தின் மூலம் மாதமொன்றுக்கு 1,000 டன்கள், டின்களில் அடைக்கப்பட்ட சமையல் எண்ணெய்யும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சமையல் எண்ணெய்யைச் சீராக விநியோகம் செய்வதற்குத் தேவையான உள்ளமைப்பை இம்மாநிலம் ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளது. 1.4.1985 முதல் 28.2.1986 வரையிலான காலத்தில் 56,645 டன்கள் சமையல் எண்ணெய் பொது விநியோக முறையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட அளவை விட இந்த ஆண்டு சமையல் எண்ணெய் குறைவாகவே ஒதுக்கப்பட்டிருப்பினும், உள்ளூர் உற்பத்தி அதிகமான காரணத்தால் வெளி அங்காடியில் சமையல் எண்ணெய் விலை கட்டுப்பாட்டிலேயே உள்ளது. மத்திய அரசு பாமாலின் விலையை டன்னுக்கு 1000 ரூபாய் ஏற்றியதால், சில்லறை விலையை கிலோ ஒன்றுக்கு 11.85 ரூபாயாக இவ்வரசு நிர்ணயித்துள்ளது.

மத்திய அரசு, 1985 ஏப்ரல் மாதம் கிராமப் பகுதிகளில் உள்ள நலிவுற்றோருக்குச் சென்றடையும் வகையில் கட்டுப்பாட்டுத் துணியின் விநியோகம் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டது. கட்டுப்பாட்டுத்துணி அனைத்து நலிவுற்றோருக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வரசு கிராமப் பகுதிகளிலும் நகர்ப்புறங்களிலும் மாதம் 1,000 ரூபாய்க்குக் குறைவான வருவாய் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டும் கட்டுப்பாட்டுத்துணி வழங்கப்பட வேண்டுமென ஆணையிட்டுள்ளது. 1985-86ஆம் ஆண்டுக்கு 18 மில்லியன் சதுர மீட்டர் கட்டுப்பாட்டுத்துணி இந்த மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச்சங்கங்களின் அதிகாரிகளோடு காலமுறைக் கூட்டங்கள் நடத்தி உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர் கட்டுப்பாட்டுத்துணி வழங்கப்படுவதை கண்காணித்து வருகிறார்.



1985-86-ஆம் ஆண்டில் 28-2-1986 வரை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 2.02 இலட்சம் டன்கள் அரிசியையும், 28,710 டன்கள் பருப்பு வகைகளையும், 6,179 டன்கள் சமையல் எண்ணெயையும், 66,504 சத்துணவு மையங்களுக்கு வழங்கியது. இதனால் 86.88 இலட்சம் குழந்தைகளும் 1,99,794 முதியோர் உதவித்தொகை பெறுவோரும், 112 முன்னாள் படைவீரர்களும, பயனடைகிறார்கள். சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவித்தபடி, இம்மாநிலத்தின் எல்லா சத்துணவு மையங்களுக்கும் அரிசி, பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகிய பொருட்களைக் கொண்டு செல்லும் பணியைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்று நடத்துகிறது.

அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்குவதன் அவசியத்தை உணர்த்தும் பொருட்டு, இதுவரை 10 கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. 15 செயல்முறை விளக்க மையங்களில் பொருத்துவதற்குத் தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் நெல் கொள்முதல் செய்தல், கொள்முதல் செய்த நெல்லை அரிசியாக்கி, அதைக் கிட்டங்கிகளில் சேமித்து வைத்தல் மற்றும் இன்றியமையாப் பொருட்களைப் பொது விநியோகத்திற்கு வழங்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டில் இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 20 கோடியிலிருந்து ரூ.30 கோடிக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 19.89 கோடியாகும்.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், குடும்ப அட்டை தாரர்களுக்கான அரிசியை விநியோகம் செய்வதற்காக நெல், அரிசியை தமிழக அரசின் முகவராக இருந்து நேரடிக் கொள்முதல் செய்கிறது. 1985-86-ஆம் ஆண்டில், சம்பாவில் 15-3-1986 வரை இக்கழகம் 4.68 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்துள்ளது. இதற்கென இக்கழகம் 832 நேரடிக் கொள்முதல் நிலையங்களையும், 45 லெவி சேகரிப்பு நிலையங்களையும் நிறுவியுள்ளது.

இக்கழகம் 1985-86-ஆம் ஆண்டில், இதன் 3.20 லட்சம் டன்கள் கொள்ளளவு கொண்டசேமிப்புக்கிங்டகுவசதியுடன்மேலும் 30,4000 டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்புக்கிடங்கு வசதியைப் பெருக்கியுள்ளது. அரசால் அனுமதியளிக்கப்பட்ட 5 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சேமிப்புக் கிடங்குகள், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும் லெவி கொள்முதல் நிலையங்கள் ஆகியவற்றை ரூ. 73.73 கோடி செலவில் கட்டுவதற்காக திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளது. வரும் நிதியாண்டில் நேரடிக்கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்காக ரூ.10 லட்சமும், செயல்முறை சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு ரூ. 10 லட்சமும் அரசு அனுமதி அளித்துள்ளது.

1985-86-ஆம் ஆண்டில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நிர்வகிக்கப்பட்டுவரும் 13 நவீன அரிசி ஆலைகளின் அரைவைத் திறனை ஆண்டுக்கு மேலும் 60,000 டன்கள் அதிகரிக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதைப் போன்று ஆறு நவீன அரிசி ஆலைகள் கட்டுவதற்கான திட்டத்திற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. இதைத் தவிர, ஏழாவது ஐந்தாண்டுத். திட்ட காலத்தில், இரண்டு நவீன அரிசி ஆலைகளைநிறுவுவதற்குத் திட்டக் குழுவினால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் அனுமதியளிக்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில், சீர்காழி வட்டத்தில், எருக்கூர் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் நவீன அரிசி ஆலை,1986 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் செயல்படத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், தமிழ்நாடு முழுவதும் சேமிப்புக் கிடங்கு வசதியை அளிக்கிறது. விவசாய விளைபொருட்கள் மற்றும் அறிவிப்பு செய்யப்பட்ட பொருள்களுக்குப் பூச்சிமருந்து அடிக்கும் பணியையும் மேற்கொள்ளுகிறது. இந் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ.6 கோடியாகும். 1985-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடிய இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனத் தொகை ரூ. 5.01 கோடியாக இருந்தது. 1985-86-ஆம் ஆண்டு, அரசு இந்நிறுவனத்திற்கு ரூ. 20 லட்சம் பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது. இதே போன்று மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் அதன் பங்கான ரூ. 20 லட்சத்தை இந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. 1986-87ஆம் ஆண்டு, இந்நிறுவனம் இதன் பங்குத்தொகையை ரூ. 60 லட்சமாக உயர்த்தக் கருதியுள்ளது.

1985-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 321-ம் நாள்முடிய, இந்நிறுவனம் 43 இடங்களில்123 கிட்டங்கிகளை நடத்தி வந்தது. இவற்றின் கொள்திறன் 3.37 லட்சம் டன்களாக இருந்தது. 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் 2.52 லட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்பு வசதியை, ரூ. 12.86 கோடி செலவில் ஏற்படுத்த இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டிற்கு, கூடுதல் சேமிப்பு வசதியை ஏற்படுத்த இந்நிறுவனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 40,000 டன்கள் மட்டுமேயாகும். இந்நிறுவனம், 75,000 டன்கள் கூடுதல் சேமிப்பு வசதியை ஏற்படுத்தி இந்த இலக்கைத் தாண்டியுள்ளது.

இந்நிறுவனம், தொடர்ந்து பல ஆண்டுகளாக லாபத்தையே ஈட்டி வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டியுள்ள லாபம் பின்வருமாறு

| ஆண்டு | இலாபம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1980—81 | 24.62 |
| 1981—82 | 69.31 |
| 1982—83 | 84.58 |
| 1983—84 | 100.10 |
| 1984—85 | 125.23 |





# வருவாய் ஈட்டித்தரும் வணிகவரித் துறை

மக்களாட்சியில் சமுதாயப் பணிகளுக்கான செலவினங்களுக்கு வருவாய் திரட்டுவதில் வணிக வரிகள் மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருவாய், பெரும்பங்கு வகிக்கிறது. வணிக வரிகளுள் முதன்மையானது விற்பனை வரியே. இவ்வரி விதிப்பு மிகச் சிறிய அளவில் அதாவது விற்பனைத் தொகையில் ஒரு ரூபாய்க்கு ஒரு காசு (1/192) என்ற விகிதத்தில் 1939-ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது.

மாநிலங்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட இந்த வரி விதிப்பின் மூலம் அரசுக்கு வருவாய் வழிவகுத்ததில் மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது. இவ்வரிகள் உள்மாநில இடைமாநில விற்பனையின் மேல் விதிக்கப்படுகிறது. வெளிநாட்டு மது, உள்நாட்டில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள், உள்நாட்டு மதுவான சாராயம் ஆகியவற்றிற்கு அதிகபட்ச வரியாக 50, 30 மற்றும் 20 விழுக்காடு விதிக்கப்படுகிறது. ஆடம்பரப் பொருள்களுக்கு 15% வரியும் மற்றப் பொருட்களுக்கு அவற்றின் உற்பத்தி தேவை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இந்த அரசினால் வரி விகிதம் நிர்ணயிக்கப்படுகிறது. மொத்த, வரி வசூலில் தமிழ்நாடு அனைத்திந்திய அளவில் மகாராஷ்டிரத்திற்கு அடுத்த இடத்தைப் பெற்று வருகிறது. 1976-77-ஆம் ஆண்டில் வணிக வரிகள் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ. 255.58 கோடியாக இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் ரூ. 1035.08 கோடி. அதாவது நான்கு மடங்காக உயர்ந்துள்ளது.

இத்துறையின் மற்றுமோர் சாதனை 1976—77 ஆம் ஆண்டில் 55, 683 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 43.71 கோடி விற்பனைத் தொகை மறைப்பு வெளிக் கொணரப்பட்டு அரசுக்கு ரூ.1 கோடி 74 இலட்சம் அதிக வரி கிடைக்க வழி செய்யப்பட்டது. 1984—85ஆம் ஆண்டில் 96,746 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு ரூ.245 கோடி விற்பனைத் தொகை மறைப்பு வெளிக்கொணரப்பட்டு, அரசுக்கு ரூ.21 கோடி 57 இலட்சம் அதிகவரி கிடைக்க வழி செய்யப்பட்டது.

இம்மாநிலத்தில் வரி விதிப்பின் மூலம் ஏழை, எளிய நடுத்தர மக்களைப் பாதிக்காமல் இருக்க, அம்மக்களுக்குஅடிப்படையாகத் தேவைப்படும் பொருட்களின் விற்பனையின் மேல் முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. ஏழை எளிய மக்களின் அன்றாடத் தேவையான விறகின் மேல் முழு வரி விலக்குள்ளது.

உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பொருட்களுக்கும், பன், பொறை, ரொட்டி முதலியவற்றிற்கும் முழு வரி விலக்களிக்கப் பட்டுள்ளது. அப்பளம், சேமியா பொருட்களின் மேலும் 1981-ஆம் ஆண்டிலிருந்து வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. முதியோரின் நலன் காக்கும் பொருட்டு மூக்குக் கண்ணாடிகளுக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. கையினால் செய்யப்படும் செங்கற்கள், மண்பாண்டங்கள் ஆகியவைகளுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்கள், கரும்பலகைகள், எழுது பொருட்கள் ஆகியவற்றிற்கும் முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. புத்தகங்கள் அனைத்திற்கும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. கால்நடைகள் மற்றும் விலங்கினங்கள் விற்பனையின் மேலும், கால்நடைகளுக்கு இரையாக உள்ள புல், வைக்கோல், தாழ், தவிடு முதலியவற்றிற்கும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் மற்றும் விலங்குகள் சக்தி மூலம் இயக்கப்படும் விவசாயத் துணைப் பொருட்கள் மேலும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும் இயற்கை உரத்திற்கு முழு வரி விலக்களிக்கப் பட்டுள்ளது. ஆனால், இரசாயன உரங்கள் மீதும், பூச்சி, காளான், வேர்க் கொல்லி மீதும் குறைந்த வரியாக மூன்றரைச் சதவீதம் விதிக்கப்படுகிறது.

நடுத்தர மக்களுக்கும் வரி விதிப்பில் சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் தயார் செய்யப்படும் மின்னணுக் கருவிகளுக்கு வரிவிதிப்பு 6 சதவிகிதமாகவும், பிற இடங்களில் தயாரிக்கப்படும் மின்னணுப் பொருட்களுக்கு 10 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. சைக்கிள்கள் அவற்றின் டயர், டியூபுகள், கையால் செய்யப்படும் சோப்புகளுக்கு வரி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. இயற்கைச் சக்திகளான சூரிய ஒளி, காற்று, தழை மற்றும் சாணம் ஆகியவற்றை மக்களுக்குப் பயன்படும் எரிபொருள் மற்றும், மற்றச் சக்திகளாக மாற்றிடும் கருவிகளுக்கு வரி விலக்களிக்கப் பட்டுள்ளது. உயிர்காக்கும் 41 மருந்து வகைகளுக்கு வரி 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பலமுனை வரிக்குட்பட்ட பொருட்கள் மட்டுமே விற்பனை செய்யும் வணிகர்கள் பதிவு செய்து கொள்வதற்கான விற்பனைத் தொகை வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ.75,000 இந்நிதியாண்டிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும், இப்பொருட்களில் வாணிபம் செய்யும் சிறு வணிகர்களுக்கு, ஆண்டொன்றிற்கு விற்பனைத் தொகை ஒரு இலட்சம் ரூபாய்க்குள் இருந்தால் வரி விதிப்பு இல்லை. இவ்வணிகர்களின் ஆண்டு விற்பனைத் தொகை ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய்க்குள் இருந்தால் சலுகை வரி விதிப்பு முறை அமலில் உள்ளது.

கேளிக்கை வரி விதிப்பு இம்மாநிலத்தில் 1926-ஆம் ஆண்டு முதல் அமலில் உள்ளது. இதன் மூலம் கிடைக்கும் வருவாய் பெரும் பகுதி உள்ளாட்சி-ஊராட்சி ஒன்றியங்களுக்கே அளிக்கப்பட்டாலும், வணிகவரித்துறையே இவ்வரியையும் வசூலித்துவருகிறது. 1939-ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தில் 77-ஆம்ஆண்டிலிருந்து, முழு அளவில் நகராட்சி மற்றும் பஞ்சாயத்து எல்லைகளுக்குட்பட்ட திரையரங்கங்கள் இணக்கத் தொகையான வரி செலுத்தும் முறை அமல் செய்யப்பட்டு வரி ஏய்ப்பு எண்ணம் ஏற்படாத வண்ணம் அரசு காத்துள்ளது.

பந்தய வரி, சென்னை மற்றும் ஊட்டியில் நடக்கும் குதிரைப் பந்தயங்களின் மேல் 1935-ஆம் ஆண்டு முதல் விதிக்கப்பட்டு வருகிறது. இவ்வரியும் இத்துறை மூலமே வசூலிக்கப்படுகிறது. மேலும், ஓட்டல்கள் மற்றும் தங்குமிடங்களில் விதிக்கப்படும் சொகுசு வரி 13.11.80லிருந்து இத்துறை மூலம் வசூலிக்கப் படுகிறது.

வணிகர்களின் நலனுக்காக வணிகர் நல ஆலோசனைக்குழு மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அரசுக்கு வரி விதிப்பு ஆலோசனை கூறவும், வணிகர்களின் பொதுக் குறைகளைக் களைவதற்கும், மாநில அளவில் வணிகவரித்துறை அமைச்சரின் தலைமையில், மாநில விற்பனை வரி ஆலோசனைக்குழு செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் குறைகளைக் களைவதற்காக மாவட்ட ஆட்சியாளர் தலைமையிலும், துறை அலுவலர்கள், வணிகர்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

வரி ஏய்ப்புத் தொடர்பான இரகசியத் துப்புகள் அளிப்பவர்களுக்குத் துறையின் மூலம் தகுந்த பரிசு வழங்கப்படுகிறது. அது போன்றே, வரி தவிர்ப்பு அல்லது ஏய்ப்பினை ஆராய்ந்து கண்டுபிடித்து அரசுக்கு வரி வசூலித்துத் தரும் இத்துறை அலுவலர்களுக்கு முதலமைச்சரின் திறமைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. தமிழகத்தைப் பின்பற்றி, பிற மாநிலங்களும் இம்முறைகளைக்கடைப்பிடிக்கின்றன.

வணிகர்களின் குறிப்பிட்ட புகார்களை விசாரித்து நடவடிக்கை எடுக்க வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. அக்குழுவினிடம் தெரிவிக்கப்படும் புகார்களின் மேல், உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு**

— திருக்குறள்

## குங்குமச்சேற்றில் குழைத்தெடுத்த தங்கத்தூணே !

## தமிழ்க்குலம் தழைக்க மணம் வீசும் மல்லிகைப் பந்தலே !

பசிப்பிணி என்ற அந்தகார இருளை அனாதையாக்கி
ஒரு சுபிட்சபுத்திரனை சுவீகாரமாக ஏற்றுக்கொண்ட
எங்கள் **ஞானத் தந்தையே!**


குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற கொள்கைக்கு
அரங்கேற்றம் நடத்தும் எங்கள் ஆருயிர்த் **தலைவரே !**

முப்பது இலட்சம் வீடுகள் என்ற முனைப்பான
திட்டத்திற்கு முகவுரை எழுதிய எங்கள் முத்தான
**முதல்வரே !**

**பல்லாண்டு வாழ்க நின் ஆட்சி !**

திருப்பூர் **வி.ஆர்.மணிமாறன்**
தலைவர்

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்**





# மக்கள் தேவைக்கேற்ப சேவை அதுவே சென்னை குடிநீர்



- சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் 1.8.1978 அன்று சட்டப்படி தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனமாக அமைக்கப்பட்டது.

## இதன் நோக்கம் :

- சென்னைப் பெருநகர் பகுதியின் பொதுச் சுகாதாரத்தை பேணிக் காத்து நகர மக்களின் வளர்ந்து வரும் தேவைகளைக் கவனித்து குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் ஆகியவையே ஆகும்.
- இவ்வாரியம் தொடங்கி எட்டு ஆண்டுகளுக்குள் சேவை மனப்பான்மையில் திறம்படப் பணி புரிந்து மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளது.

1981 முதல் 1983 வரையிலான 3 ஆண்டுகள் நிலவிய கடுமையான வறட்சி நிலைமையை இவ்வாரியம் ரூ. 10 கோடி செலவிட்டு வெற்றிகரமாக சமாளித்தது.

## நிதி :

மாநில அரசின் உதவியோடு பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு குடிநீர் பிரிவின் கீழ் ரூ. 37.84 கோடி செலவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு 31 திட்டங்களில் 18 திட்டங்களும் கழிவு நீரகற்று பிரிவின் கீழ் ரூ. 33.53 கோடி செலவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு 21 திட்டங்களில் 7 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

## உலக வங்கித் திட்டம் :

நிலத்தடி நீரை எடுத்து குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு தமிழக அரசு ரூ. 15 கோடி வழங்கி ஆழ்துளை கிணறுகள் போடப்பட்டுள்ளன.

மேலும் ரூ. 136 கோடி உலக வங்கித் திட்டம் செயல்படுத்திட தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## குடிநீர் வழங்குதல் :

1978-ம் ஆண்டு நாளொன்றுக்கு வழங்கப்பட்ட குடிநீர் சராசரியாக 48 மில்லியன் காலன் (215 Mld.) பயன் பெற்றோர் — 26.39 இலட்சம் மக்கள், பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியதால் இன்று நாளொன்றுக்கு வழங்கப்படும் குடிநீர் சராசரியாக 54 மில்லியன் காலன் (245 Mld.) பயன் பெறுவோர் 33.35 இலட்சம் மக்கள்.

இதைத் தவிர மீஞ்சூர், பஞ்சட்டி, தாமரைப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள கிணறுகளிலிருந்து நாள் ஒன்றுக்கு 53 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்பட்டு மணலி மற்றும் எண்ணூர் அனல் மின் நிலையப் புகுதிகளில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

1978ம் ஆண்டில் 12 ஊராட்சிகள் சென்னை மாநகரோடு இணைக்கப்பட்டு, திருவான்மியூர், கோடம்பாக்கம், சாலிக்கிராமம் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் கொடுங்கையூர், எருக்கஞ்சேரி, வில்லிவாக்கம், ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் விரைவில் வழங்கப்படும்.

## கழிவு நீரகற்றல் :

சென்னைப் பெருநகர் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திலும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு அந்நீர் புல் வளர்ப்புக்குப் பயன்படுத்தப்படுகிறது. 1978ம் ஆண்டு நிலவரப்படி கழிவு நீரகற்று நிலையங்களின் திறன் நாள் ஒன்றுக்கு 190 மில்லியன் லிட்டராகும். ஆனால் இப்பொழுது பல்வேறு திட்டங்களை மேற்கொண்டதால் ஏற்பட்டுள்ள திறன் 220 மில்லியன் லிட்டராகும். மேலும் புதிதாக 6 கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. பெருங்குடி, கோயம்பேடு ஆகிய இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்படத் தொடங்கி உள்ளன.






ரூ. 12 கோடி செலவில் சின்னமலை, வேளச்சேரி சாலை, அரும்பாக்கம்; அமிஞ்சிக்கரை ஆகிய பகுதிகளில் புதியதாக கழிவு நீரகற்று அமைப்புகள் ஏற்படுத்தபட்டுள்ளன. மேலும் 10 நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

## தமிழ் நாடு முதலமைச்சரின் ''சத்துணவுத் திட்டம்''

சென்னை குடிநீர் வாரியம், சென்னை நகரில் 1609 சத்துணவு கூடங்களுக்கு குடிநீர் வசதி அளித்துள்ளது. இவற்றில் பல்வேறு கூடங்களுக்கு 671 குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட முடியாத 397 கூடங்களில் எஃகு தொட்டிகள் வைக்கப்பட்டு நாள்தோறும் லாரிகள் மூலம் அவற்றில் குடிநீர் நிரப்பப் படுகிறது. இது தவிர 395 குழாய் கிணறுகள், கழுவும் பணிகளுக்காக முடிந்த இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

## கழிவு நீர் சுத்திகரிப்பு சாதனங்கள் :

கழிவு நீரகற்றுப் பணிகளை நவீனப்படுத்துவதற்காக, ஆழமான, சிக்கலான கழிவுநீர் அடைப்புகளை அகற்றுவதற்காக ''மான்ஸ்ட்டர் 2000'' என்னும் சாதனம் ஒன்று ரூ. 40 லட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

## குடிசைகளுக்கு குடிநீர்—கழிவு நீரகற்று வசதி :

இவ்வாரியம் 225 குடிசைப் பகுதிகளுக்கு குடிநீர் வசதியும் 35 குடிசைப் பகுதிகளில் கழிவு நீரகற்று வசதிகளும் செய்து கொடுத்துள்ளது.

## ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் :

ஏழாவது திட்டக்கால முடிவில் — நாள் ஒன்றுக்கு குடிநீர் சுத்தப்படுத்தப்படும் திறனளவு மேலும் 90 மில்லியன் லிட்டர் அதிகரிக்கப்படும்.

நிலநீர் திட்டத்தின் முதல் கட்டப் பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் சென்னைக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு நாளொன்றுக்கு 55 மில்லியன் லிட்டர் அதிகரிக்கப்படும். கொடுங்கையூரில் அமைந்துள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன் மேலும் அதிகரிக்கப்படும். பள்ளிப்பட்டு, மேல்பட்டடை, கோட்டூர், மாம்பலம் ஏரிக்கரை, திருவான்மியூர், வில்லிவாக்கம் ஆகிய பகுதிகளில் புதிதாக கழிவு நீரகற்று வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

# இவை மட்டுமல்ல. . . . சாதனைப் பட்டியல் இன்னும் தொடரும்.


# சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம்

1, பம்பிங் ஸ்டேஷன் சாலை, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-600 002.

DIPR 28263/939/86-10 (R)

அன்று
ஏழையின் சிரிப்பில் இறைவனைக்
கண்டார் அண்ணா

இன்று
ஏழையின் சிரிப்பினில் அண்ணாவைக்
காண்கின்றார் புரட்சித் தலைவர்



ஆண்ட பத்தாண்டு காலத்தில்
அடித்தளத்து மக்கள் வாழ்வில்
அமைதி ஒளி ஏற்றிய
தங்கத் தலைவர்,
தமிழக முதல்வர்
அடிச்சுவட்டினில்
தமிழ்நாடு குடிசைப்பகுதி
மாற்று வாரியம்
தனது புனிதப் பணியை
தொடர்கிறது.

முப்பது இலட்சம் வீடுகள் தருவது
புரட்சித் தலைவரின் இலட்சியம் — அதனை
கட்டித்தந்து நிறைவேற்றுவதே எங்கள் கடமை

---

**என்.வி.என்.செல்வம்**
தலைவர்

**தமிழ்நாடு
குடிசைப்பகுதி
மாற்று வாரியம்**



# வளர்ந்து வரும் போக்குவரத்துத் துறை

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967ல் தமிழகத்தில் முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் பல்வேறு நலப் பணியில் ஈடுபட்டார். மக்களின் குரலுக்கு மதிப் பளித்து வந்த அண்ணா அவர்கள், தனி யாரின் ஆதிக்கத்திலிருந்து வந்த பேருந்து களை நாட்டுடைமையாக்கும் மாபெரும் திட்டத்தை நடைமுறைப் படுத்தினார். பேருந்துகள் ஏழை, எளிய மக்களுக்கு நல்ல விதத்தில் பயனளிக்க வேண்டும் என்பதற் காகவும், பேருந்துகளின் மூலம் வருகின்ற வருமானம் நாட்டு மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகவும் தான் பேருந்து களை நாட்டுடைமையாக்குவதில் அண்ணா அதிக ஆர்வம் காட்டினார். பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கு வதற்கும் அவர் திட்டமிட்டிருந்தார்.

அவரது கொள்கைகளை அப்படியே கடைப்பிடித்து வரும் அண்ணாவின் அரசு, போக்குவரத்துக் கழகங்களை அதிக அளவில் உருவாக்கி, பொதுமக்களுக்கு ஏராளமான வசதிகளைச் செய்து தருகிறது. குக்கிராமங் களில்கூட பேருந்துகளைச் செலுத்தி அங்கு வாழும் மக்கள் பயணம் செய்வதற்கு வழி வகைகளைச் செய்து வருகிறது. சுருக்கமாகச் சொன்னால், ஒரு நாளின் எந்த நேரத்திலும் தமிழக அரசுக்குச் சொந்தமான போக்கு வரத்துக் கழகங்களைச் சேர்ந்த பேருந்துகள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. மக்கள் நலனையே கருத்தில் கொண்டு இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் பணியாற்று கின்றன.

போக்குவரத்துக் கழகங்களின் கடந்த ஒன்பது ஆண்டு வளர்ச்சி

1. **போக்குவரத்துக் கழகங்கள்**

| 1977 | 1986 |
|---|---|
| பல்லவன் | பல்லவன் |
| பாண்டியன் | பாண்டியன் |
| சேரன் | சேரன் |
| சோழன் | சோழன் |
| அண்ணா | அண்ணா |
| கட்டபொம்மன் | கட்டபொம்மன் |
| தந்தை பெரியார் | தந்தை பெரியார் |
| | பட்டுக்கோட்டை அழகிரி |
| | மருது பாண்டியர் |
| | ஜீவா |
| | தீரன்சின்னமலை |
| | நேசமணி |
| | திருவள்ளுவர் |
| | இராணிமங்கம்மாள் |

| | 1977 | 1986 |
|---|---|---|
| 2. டெப்போக்களின் எண்ணிக்கை | 106 | 187 |
| 3. பேருந்துகளின் எண்ணிக்கை | 4,974 | 10,201 |
| 4. அரசுடைமையாக்கப் பட்ட பேருந்துகளின் (சதவீதம்) | 51 | 66 |
| 5. வழித்தடங்கள் எண்ணிக்கை | 2,045 | 5,230 |
| 6. நாளொன்றுக்கு ஓடிய கிலோ மீட்டர்கள் (இலட்சத்தில்) | 12 | 32 |
| 7. நாளொன்றுக்கு ஏற்றிச் சென்ற பயணிகள் (இலட்சத்தில்) | 37 | 92 |
| 8. பணியாளர்களின் எண்ணிக்கை | 40,904 | 75,700 |
| 9. ஒரு பணியாளரின் சராசரி மாத வருமானம் | ரூ.534 | ரூ.1370 |
| 10. போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் உள்ள வைப்புத்தொகை (ரூ. கோடியில்) | 3.11 | 69.11 |




| | | |
|---|---|---|
| 11. போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் ஓராண்டிற்கு அரசு போக்குவரத்துக்கழகங் களுக்கு அளித்த கடனுதவி (ரூ.கோடியில்) | 6.05 | 62.44 |
| 12. இக்கடனுதவியாலும், சொந்த ரொக்க உற்பத்தி யாலும் ஓராண்டில் வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் | 674 | 2,200 |

**போக்குவரத்துத் துறையில் கடந்த ஒன்பது ஆண்டுப் பணிகள்**

1. சாலைப் போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதற்காக முன்னாள் மத்திய அமைச்சர் திரு பட்டாபிராமன் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியின் 236 பரிந்துரை களையும் விரைவில் ஆராய்ந்து, அதன் பேரில் நடவடிக்கைகளை எடுத்துச் சாதனை புரிந் தது.

2. 1979ல் மாநிலம் முழுவதும் பெருமளவில் சாலைப் போக்குவரத்து ஆய்வு கணக்கீட்டுப் பொறியியல் செய்தது.

3. மாநிலத்தில் ஏழு போக்குவரத்துக் கழகங் களாக இருந்ததை மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகமாக 14 போக்குவரத்துக் கழகங்கள் அமைத்தது. சிறுசிறு பொறியியற் கழகங்களை அதன் தாய்க் கழகங்களோடு இணைத்தது.

4. 1981-82ஆம் ஆண்டு முதல் பேருந்துகள் வாங்குவதற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திட மிருந்து சுலபக் கடன் வாங்கி தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் மூலம் விநியோகம் செய்தது.

5. முதன் முதலாக தூங்கும் வசதி கொண்ட ஓர்வளிப் பேருந்து இயக்கியது.

6. டீசல் எண்ணெய் மிச்சப்படுத்தும் வகை யில் ஆகாய விமானம் போன்ற வடிவமைப்பில் ஜீவா ஜெட் பேருந்து இயக்கியது.

7. அதிகப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு வசதியாக ஆர்டிகுலேட் பஸ் இயக்கியது.

8. கிராமப் பகுதிகளில் சாமான் ஏற்றிச் செல்ல வசதியாக அங்காடிப் பேருந்துகள் இயக்கியது.

9. சாலைப் பயணிகள் வசதிக்காக சாலை யோர விடுதிகள் அமைத்தது.

10. முக்கிய இடங்களில் போக்குவரத்துக் கழகங்களால் அனைத்து வசதிகளுடன் நவீன பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டன.

11. உலகெங்கிலும் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவனங்களுக்குப் பரிந்துரை கூற பல்லவன் போக்குவரத்து பரிந்துரைப் பணிக்குழு அமைத்தது.

12. கடந்த 9 ஆண்டுகளில் சுமார் 13,000 புதிய பேருந்துகள் ரூ.400 கோடிக்கு வாங்கி, பழைய பேருந்துகளுக்குப் பதிலாக மாற்றி யமைத்தும், பழைய வழித்தடங்களில் கூடுத லாகவும் புதிய வழித்தடங்களிலும் ஓடவிடப் பட்டிருக்கின்றன.

13. நகர்ப்புறப் பேருந்து வழித்தடங்களின் நீளத்தை 25 கி.மீட்டரிலிருந்து 30 ஆக மாற் றியது.


14. இந்தியாவிலுள்ள மற்ற பெரும்பாலான மாநிலங்களைவிட நமது மாநிலத்தில் பேருந்துக் கட்டணம் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

15. பேருந்துக்கூடு கட்டுவதில் தன்னிறைவு அடைந்தது மட்டுமல்லாமல், அந்தமான், டில்லி, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகிய பிற மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கும் பேருந்துக் கூடு கட்டிக் கொடுத்தது.

16. அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டு செல்வதற்காக நவீன கப்பல் வாங்கி மிக அதிக அளவில் குறைந்த செலவில் நிலக் கரி கொண்டு சென்று சாதனை புரிந்தது.

17. கன்னியாகுமரியில் உள்ள விவேகானந் தர் பாறை நினைவுச் சின்னத்திற்கு ஓடப் போக்குவரத்து ஏற்றுக்கொண்டது.

18. அரசு கட்டுமானக் கழகம் துவக்கியது.



# ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன்

**1981**-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதிதிராவிடர் 88.81 இலட்சம் பேர். இது மொத்த மக்கட் தொகையல 18.35 விழுக்காடு ஆகும். பழங்குடியினர் 5.20 இலட்சம் பேர். இம்மாநிலத்தில் மொத்த மக்கட் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் தொகை 46.76 விழுக்காடு ஆகும். ஆதிதிராவிடர்களில் 29.67 விழுக்காடும், பழங்குடியினரில் 20.45 விழுக்காடும் கல்வி அறிவு பெற்றுள்ளனர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்தில் பல்வேறுபணிகள் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் 12-வதுவகுப்பு வரை எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு முதுநிலை பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. பள்ளிக்குச் செல்லும் வயதுடைய 25 இலட்சம் ஆதிதிராவிடர் குழந்தைகளில்19.56 இலட்சம் பேர் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

1985-86-ஆம் ஆண்டிலிருந்து முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவ, மாணவியருக்கும் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் கல்வித்துறையால் வழங்கப்படுகின்றன. மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்புப் பயில்கின்ற-தங்கிப் பயிலும் ஆதிதிராவிடர் மாணவர்கட்கும் அவர்களது பெற்றோர்களின் வருட வருமானம் ரூ. 6,000த்திற்கு அதிகப்படாமல் உள்ளவர்கட்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

தற்பொழுது ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு உதவித் தொகை பெறுபவர் ஆணா/பெண்ணா என்பதைப் பொறுத்தும், படிக்கின்ற படிப்பின் தன்மையைப் பொறுத்தும் உணவு மற்றும் உறைவிடச் செலவுக்கு ரூ. 250-லிருந்து ரூ. 350 வரை வழங்கப்படுகிறது.

முதுநிலை பட்டப் படிப்பு வரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயிலாத மாணவர்கள் மற்றும் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் எந்தப் பாலினர் மற்றும் எந்தப் படிப்புப் பயிலுகின்றனர் என்பதைக் கணக்கில் கொண்டு பராமரிப்பு உதவித்தொகை மாதத்திற்கு முறையே ரூ. 50லிருந்து ரூ. 120 மற்றும் ரூ. 75லிருநது ரூ. 200 வரை தற்போது தரப்படுகிறது.

மாநிலத் திட்டத்தின் கீழ் இவ்வுதவித் தொகை மாதத்துற்கு ரூ. 50லிருந்து ரூ. 75 வரை கொடுக்கபபடுகிறது.மேற்கண்ட இவ்விரு திட்டங்களின் கீழ், ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 62,000 ஆதிதிராவிட மாணவர்களும் 300 பழங்குடி வகுப்பு மாணவர்களும் பயனடைகிறார்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியனர் இனத்தைச் சார்ந்த மாணவர்களில் 7 மாணவர்களுக்கு ஒரு ஜதைப் புத்தகம் என்ற விகிதத்தில் ரூ. 2,300 பெறுமான புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதோடு அலமாரி வாங்குவதற்கு 5 ஜதைப் புத்தகங்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் ரூ. 1,000, இதர செலவுக்காக ரூ. 100 வழங்கப்பட்டன.

1982-83-ஆம் ஆண்டில் இது 4 ஆதிதிராவிடர் / பழங்குடியினர் இன மாணவர்களுக்கு ஒரு ஜதை என்ற விகிதத்தில் ரூ. 5000 என்று உயர்த்தப்பட்டது. அது மேலும் 3 மாணவர்களுக்கு ஒரு ஜதை என்ற விகிதத்தில் ரூ. 5,000 என்று 1985-86 லிருந்து மாற்றப்பட்டது. 1985-86-ல் இதற்காக ரூ. 28.75 இலட்சம் செலவிடப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில், ஒன்று முதல் எட்டுவரை உள்ள வகுப்புகளில் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் இலவசமாக இரண்டு ஜதைச் சீருடைகள் வழங்கப்படுகின்றன. பழங்குடியினர் மாணவர்களின் பயன் கருதி அரசு 170 உண்டி, உறைவிடப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் 10,795 பழங்குடியினர் மாணவர்களுக்கு உணவு மற்றும் உறைவிட வசதிகள் இலவசமாகவழங்கப்படுகின்றன. இப்பள்ளிகளில் முதல்வரின் சத்துணவுத் திட்டமும் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிட மாணவர்கள் இலவசமாக உணவு மற்றும் தங்கும் வசதியுடன் கல்வி பயில ஆதிதிராவிடர்களுக்கு 728 விடுதிகளும், பழங்குடியினர்களுக்கு 22 விடுதிகளும் அரசால் நடத்தப்படுகின்றன. இவ்விடுதிகளில் 51,924 ஆதிதிராவிடர் மற்றும்



பிற மாணவர்கள் தங்கிக் கல்வியைத் தொடருகிறார்கள்.

தங்கிப் படிப்பவர்களுக்காக எல்லா வசதிகளையும் கொண்ட விடுதிகள் படிப்படியாகக் கட்டப் படுகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங்களுக்காகச் செய்யப் படும் நிதி ஒதுக்கீட்டில் 50 விழுக் காடுகளுக்கு மேல் ஆதிதிராடர் மற்றும் பழங்குடியினர் கல்விக் கெனச் செலவிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிடர்களில் சுமார் 7.40 இலட்சம் பேர் விவசாயிகள் ஆவர். இவர்களுடைய பொரு ளாதார மேம்பாட்டிற்காக, பாசனக் கிணறுகள் வெட்டு வதற்காக ரூ. 6000, உழவு மாடுகள் வாங்குவதற்காக ரூ. 600 மான்யமாக வழங்கப்படு கின்றன.

ஆதிதிராவிடர்கள் கறவை மாடுகள் வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவதாலும், பாலுக்கு அதிகத் தேவையிருப்பதாலும், பால் வழங்கு கூட்டுறவுச் சங் கங்கள் இவர்களுக்காக நிறுவப் பட்டு வருகின்றன. ஒவ்வொரு கறவை மாடும் ரூ. 2,500 விலை யாகிறது. இதில் ரூ. 833, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி யினர் நலத்துறையில் மானிய மாக வழங்கப்படுகிறது. எஞ்சிய ரூ. 1667 தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளால் கடனாக வழங்கப் படுகிறது. ஒவ்வொரு உறுப்பின ரும் இரண்டு கறவை மாடுகள் வாங்குவதற்குத் தகுதியுடைய வர் ஆவர்.

தமிழ்நாடு தேர்வாணைக்குழு வால் நடத்தப்படும் தொகுதி-4 பணிக்குரிய போட்டித் தேர் வினை எழுத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படு கிறது. இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கு முன்பயிற்சி 1966ஆம் ஆண்டி லிருந்து அளிக்கப்படுகிறது. வழக்கறிஞர் - தொழில் செய்ய விரும்பும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியைச் சேர்ந்த சட்டப் பட்டதாரிகளுக்குப் பதிவு செய்ய வும், அறை வாடகை போன்ற செலவினத்திற்குக் கடனாக ஒவ் வொருவருக்கும் ரூ. 750, சட்ட புத்தகங்கள், மரச் சாமான்கள் முதலியவை வாங்குவதற்கு ரூ. 750 அரசு மான்யமாக வழங்கு கிறது.

ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பத்திற்கும் 3 சென்ட் நிலம் வீட்டு மனையாக ஒப்படைப்பு செய்யப்படுகிறது. இதுவரை 4,58,568 வீட்டு மனைகளுக்கு நில எடுப்பு செய்யப்பட்டுள்ளது. இவற்றைச் சேர்த்து இதுவரை 10 இலட்சத்திற்கும் அதிக மான ஆதிதிராவிடர் குடும்பங் களுக்குப் பல்வேறு திட்டங் களின் கீழ் வீட்டு மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் 1974-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது. இதுவரை இக்கழகத் தின் மூலம் 57,884 வீடுகள் ஆதிதிராவிடருக்காகக் கட்டப் பட்டுள்ளன. தொடக்கச் செலவு வழங்கும் திட்டத்தைச் செயல் படுத்தும் பொறுப்பும் தாட்கோ விடமே விடப்பட்டிருக்கிறது. 1,51,276 ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் வகையில் தாட்கோ இதுவரை ரூ. 662.26 இலட்சம் வழங்கியுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நலன் என்ற பிரிவின் கீழ், ஒரு கிணற்றுக்கு ரூ. 7,500 செலவு என்ற முறையில் குடி நீர்க் கிணறுகள் அமைக்கப்படு கின்றன. ரூ. 13,000 செலவில் தரைமட்ட சென்டிரிபிகல் குழாய்க் கிணறுகளும் ரூ. 15,000 செலவில் ஆழ்குழாய்க் கிணறு களும் அமைக்கப்பட்டிருக்கின் றன.

இந்த அரசு, மாநிலத்தில் குடி யியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல் படுத்திக் கொண்டு வருகிறது. நடமாடும் காவல் படைப் பிரிவுகள் 22 இம்மாநிலத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தக் காவல் படைப் பிரிவுகள் 1985 டிசம்பர் முடிய 11,531 வழக்குகளை பதிவு செய்துள்ளன. இவற்றில் 4,134 வழக்குகள் நீதி மன்றங்களால் தண்டனை வழங் கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

குடியியல் உரிமைகள் பாது காப்புச் சட்டத்தின் கீழ் இழைக் கப்படும் குற்றங்களை விசாரிக்க நான்கு தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ் வொரு ஆண்டும் ஜனவரி 24 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி முடிய தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடப்படுகிறது. தீண்டாமைக் கொடுமை ஒழிப் பினைப் பிரச்சாரம் செய்வதற் காக ''தீர்த்த யாத்திரை'' என்ற செய்தித் திரைப்படம் தயாரிக்கப்பட்டு அதை கிராமங் களில் திரையிட்டுக் காட்ட ஒரு கூண்டு உந்து வண்டி வாங்கப் பட்டிருக்கிறது.

கலப்பு மணம் புரிந்த தம்பதி யருக்குத் தங்கப் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இவை தவிர, இத்தகைய தம்பதியரின் இணைந்த ஆண்டு வருமானம் ரூ. 6,000 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் அவர்கள் பெயரில் ரூ. 4,000 தேசிய சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகிறது. மேலும்

திருமணச் செலவிற்காக ரூ. 300 வழங்கப்படுகிறது.

கலப்புத் திருமணத் தம்பதிகளின் குழந்தைகளுக்கென்று ஒருங்கிணைந்த எம். பி.பி.எஸ்., முதலாம் ஆண்டு பட்டப் படிப்பிற்காக 12 இடங்களும், சித்த மருத்துவக் கல்லூரியில் 2 இடங்களும் முதலாம் ஆண்டு பொறியியல் பட்டப் படிப்பிற்காக 5 இடங்களும், நாட்டு முறை மருந்தாக்கப்பட்ட பார்மஸி வகுப்பில் 1 இடமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குக் கல்வி நிலையங்களில் முறையாகப் பிரதிநிதித்துவம் வழங்கும் பொருட்டு மருத்துவம், பொறியியல் மற்றும் தொழில் கல்வி நிலையங்கள் உட்பட ஒவ்வொரு பிரிவிலும் 19 விழுக்காடு என இட ஒதுக்கீடு தற்பொழுது வழக்கத்தில் உள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மாநில அரசுப் பணிகளில் 18 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனைக் கண்காணிக்கப்பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டைத் துரிதப்படுத்துவதற்காக அரசு 1980-81 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

ஆதிதிராவிட விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்வு வளம் பெற 25 விழுக்காடு மானிய விலையில் விவசாய இடுபொருள்கள் வழங்கப்படுகின்றன. நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ், நிலமில்லாத ஆதிதிராவிடர்களுக்கு நிலங்களும் வழங்கப்படுகின்றன. இந் நிலத்தைப் பண்படுத்தி சாகுபடிச் செய்ய ஒரு எக்டருக்கு ரூ. 2,500 நிதி உதவி அளிக்கப்படுகிறது. 1985-86 ஆம் ஆண்டில் சிறப்பு மத்திய உதவியாக அரசு ரூ. 13.39 கோடி அளித்துள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்குப் பொருளாதார மேம்பாட்டிற்காக உதவிகள் நல்கப்பட்டன.



தமிழ்நாட்டில் பழங்குடி மக்கட் தொகை 5.20 இலட்சமாகும். அவை மொத்த மக்கட் தொகையில் 1.07 சதவீதமாகும். பழங்குடியினர் அதிகமாக உள்ள 9 பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. கிட்டத்தட்ட 2.10 இலட்சம் தமிழகப் பழங்குடியினர் இந்த 9 பகுதிகளில் வசிக்கின்றனர். இவர்களின் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களான தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, சிறுதொழில், தேனீ வளர்த்தல் போன்றவை செயல்படுகின்றன.

மேற்கண்ட தொழிலுக்குத் தேவையான இப்பொருள்கள் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கல்ராயன் மலை தவிர (75 சதவீதம் மானியம் தரப்படுகிறது) மற்றப் பகுதிகளின் பழங்குடியினருக்கு 50 சதவீதம் மானியமாகக் கொடுக்கப்படுகிறது. 1985-86ல் உயர்ரக விளைச்சல் தரக்கூடிய விதைகள் மற்றும் நாற்றுகள் வினியோகிக்கும் திட்டம் 3000 ஏக்கர் பரப்புள்ள பழங்குடியினர் நிலத்தில் செயல்படுத்தப்பட்டது.

பட்டுப்புழு வளர்க்கும் தொழிலில் 400 பழங்குடியினர் குடும்பங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 50 விழுக்காடு மானிய விலையில் 1332 பழங்குடியினர் குடும்பங்களுக்குக் கறவைமாடுகள் வழங்கப்பட்டன. 331க்கு மேற்பட்ட பழங்குடியினர் குடும்பங்களுக்குத் தேனீ வளர்ப்புக்கூடுகள் வழங்கப்பட்டன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் வாயிலாக 28,884 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. பழங்குடியினருடைய பொருளாதாரத்திற்குப் பாதிப்பு உண்டாக்கக் கூடிய இடைத்தரகர்களின் நடவடிக்கைகளைத் தடுக்கும் பொருட்டு 12 பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (லேம்ப்ஸ்) இப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இருபது அம்சத் திட்டத்தில் ஏழாவது அம்சம் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கு வழிவகை செய்கிறது. 1980-85 ஆம் ஆண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 9 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களில் 8.90 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களினால் பயன் பெற்றுள்ளனர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 19,999 பழங்குடியினர் குடும்பங்கள் பயன் பெறும் என்று குறியீடு நிர்ணம் செய்யப்பட்டிருந்தும் இத்திட்டக் காலத்தில் 28,884 பழங்குடியினர் குடும்பங்கள் பொருளாதாரத் திட்டங்களின் மூலம் பயன் பெற்றுள்ளன.



# அகதிகளுக்கு மறுவாழ்வு

1983-ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையில் இனக் கலவரம் மூண்டது முதல் இந்திய வம்சா வழியினர் இந்தியா வுக்குப் புகலிடம் தேடி வருகின்றனர். இவர்களில் பெரும் பாலோர் இராமேஸ்வரம் துறைமுகத்திலும், சிலர் விமானம் மூலம் திருச்சி சென்னை, திருவனந்தபுரம் விமான நிலையங்களிலும் வந்து சேருகின்றனர். இராமேஸ் வரத்தில் அவர்கள் வந்தவுடன் வருவாய்த்துறை அலுவலர்கள் அவர்களை வரவேற்று உடனே காப்பி, டீ, குழந்தைகளுக்குப் பால் முதலியவைகளை இலவச மாக வழங்குகின்றனர். நோய் தடுப்பு ஊசியும் போடப்படு கிறது. சுங்கத்துறை அலுவ லர்களின் பரிசோதனை நடந்து முடிந்தவுடன் அவர்களுக்கு இலவசச் சிற்றுண்டி, சாப்பாடு முதலியவை வழங்கப்படுகின் றன. இவர்கள் இராமேஸ்வரத் தில் சத்திரங்களில் தங்க வைக் கப்படுகின்றனர். பிறகு ஒன்று அல்லது இரண்டு நாட் களில் இராமேஸ்வரத்திலிருந்து இரயில் மூலம் மண்டபம் முகா மிற்கு அனுப்பப்படுகின்றனர்.

முகாம்களில் சேர்க்கப்படும் எல்லா அகதிக் குடும்பங்களுக் கும் கீழ்க்கண்ட நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன.

(அ) இலவச தங்குமிடம், மின்வசதி, குடிநீர் வசதி.

(ஆ) குடும்பத்திலுள்ள நபர் களின் எண்ணிக்கையைப் பொறுத்து குடும்பப் பரா மரிப்புத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 110 முதல் ரூ. 357.50 வரை.

(இ) கிலோ ஒன்றுக்கு 57 காசு என்ற முறையில் மலிவு விலையில் அரிசி வழங்கல்.

(ஈ) குடும்பத்திலுள்ள எல்லா நபர்களுக்கும் ஒரு ஜதை உடுப்புகள்.

(உ) பெரியவர்கள் எல்லோ ருக்கும் பாய், போர்வை வழங் கல்.

(ஊ) சமையல் பாத்தி ரங்கள், உடைகள் சராசரி மதிப்பு ரூ. 620 வரையில் கொடுக்கப்படுகின்றன.

24-7-1983 முதல் இந்தியா விற்கு வரும் ஆதரவற்ற அகதிகள் எல்லோருக்கும் இந்த உதவிகள் வழங்க மைய அரசு அனுமதித்துள்ளது. இதற்கான செலவுத் தொகை முழுவதை யும் மைய அரசே ஏற்கிறது. இதுவரை இலங்கையிலிருந்து இனக்கலவரத்தினால் பாதிக் கப்பட்டு இந்தியா வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை விவ ரங்கள் கீழே குறிப்பிடப்பட் டுள்ளன. 22-5-86 நிலவரப்படி.

1. மொத்த அகதிகள் வந்த வர்கள் 1,26,277.

2. அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளவர்கள் 32,142.

3. வெளியிடங்களில் தங்கி யுள்ளவர்கள் 94,135.

வன்செயலில் பாதிக்கப் பட்டு வரும் இலங்கை பிரஜா உரிமை பெற்ற இந்த அகதிகள் இலங்கையில் நிலைமை சீர டைந்தவுடன் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதால் இவர் களில் திக்கற்றவர்களை மட் டும் அகதிகள் முகாம்களில் சேர்த்துக் கொண்டு பத்தி (2) கூறப்பட்ட நிவாரண உதவிகள் மட்டும் வழங்கப்பட்டு வரு கின்றன. 5-2-85 முதல் இலங்கையிலிருந்து படகுகள் மூலம் அகதிகளின் வருகை அதி கரித்துள்ளதால் மாவட்ட அள விலும் அகதிகள் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு நிவாரண உதவிகள் அளிக்கப்பட்டு வரு கின்றன. இதுவரை மண்டபம் முகாம், கொட்டப்பட்டு முகாம் ஆகிய இரண்டு இடைத்தங்கல் முகாம்களுடன் மாவட்ட அளவி லும் சேர்த்து சுமார் 170 முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு இதுவரை 8,482 குடும்பங்கள் அடங்கிய 32,142 நபர்கள் குடி யமர்த்தப்பட்டுள்ளார்கள்.

**அகதிகளுக்கு வீடுகள் கட்டும் பணி**

இராமநாதபுரம் மாவட்டத் தில் மண்டபத்தில் உள்ள இடைத்தங்கல் முகாம் இந்தியா இலங்கை ஒப்பந்தப்படி தாய கம் திரும்பும் இந்திய வம்சா வழியினர் தற்காலிகமாக சிறிது காலம் தங்கியிருக்க உதவும் நோக்கத்துடன் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட முகாம். பெருமளவில் அகதிகள் வந்ததால் இந்த முகாமில் இடநெருக்கடி ஏற்பட்டு கூடு தல் இடவசதித் தேவைகளைச் சமாளிப்பதற்கு, கீழ்க்கண்ட விவரப்படி கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) மண்டபம் முகாமில் ரூ. 9.065 இலட்சம் செலவில் புதிதாக 200 வீடுகள் மாநில

பொதுப்பணித் துறையால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மண்டபம் முகாமிலேயே மேலும் கூடுதலாக ரூ. 92.50 இலட்சம் செலவில் 500 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டம் தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

(இ) இதேபோல் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலமாகவே மேலும் 700 புதிய வீடுகள் ரூ. 112 இலட்சம் செலவில் மண்டபம் முகாமில் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதில் இதுவரை 200 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 500 வீடுகளும் கட்டி முடிவடையும் தருவாயில் உள்ளது.

(ஈ) இதல்லாமல் மண்டபம் முகாமில் ஏற்கெனவே உள்ள 141 பழைய வீடுகள் பழுதுபார்க்க ரூ. 8 . இலட்சமும், 150 பழைய வீடுகளைப் பழுது பார்க்க ரூ. 5.30 இலட்சமும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணி முடிவடைந்து விட்டது.

(உ) இதே போல் திருச்சி மாவட்டத்தில் உள்ள கொட்டப்பட்டு அகதிகள் முகாமிலும் ரூ. 6.23 இலட்சம் செலவில் 100 புதிய வீடுகள் கட்ட அரசு அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணி 31-8-1985ல் முடிந்துவிட்டது. இது பொதுப்பணித்துறையால் கட்டப்பட்டது. இவற்றில் அகதிகள் குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டுவிட்டன.

(ஊ). திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடிக்கு அருகில் மாப்பிள்ளை ஊரணி என்னும் இடத்தில் ரூ. 10 இலட்சம் செலவில் 100 புதிய வீடுகள் கட்ட அரசு அனுமதி அளித்தது. மாநிலப் பொதுப்பணித் துறையினரால் வீடுகள் முடிக்கப்பட்டு அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

(எ) மதுரை மாவட்டம் விளாங்குடியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கட்டிய 792 வீடுகள் இலங்கை அகதிகளின் உபயோகத்திற்கு அரசு விலைக்கு வாங்க உத்திரவிடப்பட்டுள்ளது. இந்த வீடுகளைக் கிரயம் பெற தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் நடவடிக்கையுள்ளது.



(ஏ) தஞ்சாவூர் மாவட்டத்தில் வேதாரண்யம், நாகப்பட்டினம், பிள்ளையார்பட்டி கிராமங்களில் 1000 குடிசைகள் அமைத்து இலங்கை அகதிகளைக் குடியமர்த்த ரூ. 10 இலட்சம் அரசினரால் வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

6. அரசு செயல்பாட்டுடன் ஒத்துழைத்து கூடுதல் உதவிகள் வழங்க சில சமூக சேவை நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

(அ) சென்னையில் உள்ள கிறிஸ்துவ திருச்சபையின் தொழில் பயிற்சிப் பிரிவு, மண்டபம் முகாமில் உள்ள அகதி குழந்தைகளுக்கு தச்சு வேலை, மின்சாரம், தையல் போன்ற பயிற்சிகள் அளித்து வருகிறது.

(ஆ) மைத்திரி என்ற தனியார் நிறுவனம், மண்டபம் முகாமில் பள்ளி ஒன்று நடத்தி வருகின்றது.

(இ) இராமகிருஷ்ணா மிஷன் ஆசிரமம், மண்டபம் முகாமில் உள்ள அகதி குழந்தைகளுக்கு காலையில் சிற்றுண்டி, பிரசாதம் போன்ற உணவுகள் வழங்குகிறது. திருச்சி கொட்டப்பட்டு முகாமில் அகதிகள் குழந்தைகளுக்குத் தனியாகப் பள்ளி ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது.


மண்டபம் முகாமில் அகதி குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள்கள் வழங்கி தேக ஆரோக்கியத்தை வளர்க்கப் பாடுபட்டு வருகிறது. மேற்கண்ட சமூக சேவை சங்கங்களைத் தவிர, தொண்டு இயக்கங்களும் மாவட்ட அளவிலுள்ள முகாம்களின் குடும்பங்களுக்கு உடைகள், உணவுப் பொருள்கள் இலவசமாக வழங்குகின்றன.

(உ) பம்பாய் மற்றும் சென்னை நாற்பாலைக் குழுவின்மூலம் அகதிக் குடும்பங்களில் பெரியோர்களுக்கு 30,190 ஆடைகள் வழங்கப்பட்டன.

(7) அகதிகளுக்கு அளிக்கப்படும் நிவாரண உதவிகளுக்கும் மற்றும் அவர்கள் தங்குவதற்காக தற்காலிகக் கட்டடங்கள் கட்டுவதற்கும் ஆகும் செலவு முழுவதையும் மைய அரசு ஏற்கிறது. 24-7-83முதல் 1986 மார்ச் மாதம் வரை நிவாரண உதவிகளுக்காக ரூ. 326.81 இலட்சமும், கட்டட வேலைகளுக்காக356.66 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 683.47 இலட்சம் மாநில அரசு செலவு செய்துள்ளது. இதற்காக மைய அரசு இதுவரை கொடுத்துள்ள தொகை ரூ. 651.36 இலட்சமாகும்.

பாரஸ் ஃபோட்டோஸின்த் உண்மையிலேயே அதிசயமானது. பயிர்கள் உரங்களை நல்ல முறையில் பயன்படுத்த உதவுகிறது. இதன் மூலம் அதிக மகசூல் கிடைக்கிறது.


## ஆனால் பாரஸ் ஃபோட்டோஸின்த் எப்படி செயல்படுகிறது.



பாரஸ் ஃபோட்டோஸின்த்திலுள்ள மிக்ஸ்டாலோல் எனும் பொருள் நேரடியாக ஃபோட்டோஸின்த் தெஸில் செயலை துரிதப்படுத்து கிறது. 80 % முதல் 90 % பயிர் வளர்ச்சிக்கு இதுவே காரணம். பாரஸ் ஃபோட்டோஸின்த் காரணமாக பயிர்கள் நிலத்திலிருந்து அதிக நீரையும் மண்ணிலுள்ள போஷாக்கையும் உறிஞ்சிக் கொள்வதுடன் காற்றிலிருந்து கரியமில வாயுவையும் எடுத்துக் கொண்டு வேகமாக வளர்கின்றன.

## பாரஸ் ஃபோட்டோஸின்த் பயன் தரும் என்று நான் எப்படி நம்புவது?

உங்கள் வயலை இரு பாகங்களாகப் பிரியுங்கள். இரு பாகங்களிலும் சம அளவு நீர், எரு இவைகளை இடவும். ஆனால் ஒரு பாகத்தில் மட்டும் பாரஸ் ஃபோட்டோஸின்த் தெளியுங்கள்.




15 தினங்களுக்கு பிறகு, நீங்களே காண்பீர்கள் பாரஸ் ஃபோட்டோஸின்த் உபயோகித்த பகுதியிலே பயிர்கள் உயரமாகவும் பெரிதாகவும் வளர்ந்திருக்கும். மேலும் இவற்றின் வேர்கள் நீண்டும் உறுதியாகவும் இருப்பதையும் காணலாம். இதன் பயனாக இப்பயிர்கள் அதிக சக்தியுடன் நீரையும் சத்துக்களையும் உறிஞ்சிக் கொள்ள முடியும்.

எந்தப் பயிர்களில் பாரஸ் ஃபோட்டோஸின்த் தெளிக்கப்பட்டுள்ளதோ, அப்பயிர்களில் பூக்கள் வாடி விழுவதில்லை. எனவே பழங்கள்/காய்கறிகள் இவற்றில் உங்களுக்கு அதிக விளைச்சல் கிடைக்கிறது. தானியங்களும் எண்ணிக்கையிலும் அளவிலும் பெருகி வளரும்.

## எருவுக்குப் பதிலாக பாரஸ் ஃபோட்டோஸின்த் உபயோகிக்கலாமா என்ன?

கூடாது. பாரஸ் ஃபோட்டோஸின்த் எருவுமல்ல, மைக்ரோ நியூட்ரியென்ட்டும் அல்ல எனவே வழக்கமான எல்லா எருவையும் நீங்கள் பயன்படுத்தும் போது, கூடவே பாரஸ் ஃபோட்டோஸின்த்தையும் பயன்படுத்துங்கள். அதிக சாகுபடி, உங்களுக்குக் கிடைக்கும்.

## பாரஸ் ஃபோட்டோஸின்த், அரசுத்துறை விஞ்ஞான அமைப்புகள் மூலம் சோதிக்கப் பட்டுள்ளதா?



ஆம். இந்திய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் மற்றும் விவசாய பல்கலைக்கழகங்கள் பாரஸ் ஃபோட்டோஸின்த்தைப் பற்றிய பரிசோதனை செய்து நெல், கோதுமை, சோளம் மற்றும் பற்பல பயிர்களுக்கும் பாரஸ் ஃபோட்டோஸின்தை உபயோகித்துப் பயன்பெறலாம் என நிரூபித்துள்ளன.

## எந்த பயிருக்கும் பாரஸ் போட்டோஸின்த் பயன் படுத்தலாமா?




ஆம். கோதுமை, நெல், கம்பு, பருத்தி, நிலக்கடலை, பஜ்ரா, காய்கறி, பழம், தேயிலை எதற்கும் பாரஸ் ஃபோட்டோஸின்த் பயன் மிக்கது.

| பயிர்கள் | சாகுபடி பெருக்கம்* |
|---|---|
| கோதுமை | ஏக்கருக்கு 300 கிலோ |
| நெல் | ஏக்கருக்கு 400 கிலோ |
| தக்காளி | ஏக்கருக்கு 2000 கிலோ |
| பருத்தி | ஏக்கருக்கு 200 கிலோ |

* அரசுத்துறை அமைப்புகள் நடத்திய பரிசோதனை மூலம் கிடைத்த அளவுகள்.

## பாரஸ் ஃபோட்டோஸின்த் மூலம் எனக்கு வருமானம் எவ்வளவு பெருகும்?



பாரஸ் ஃபோட்டோஸின்த் மிக சிக்கனமானது. 50 ரூபாய் மதிப்புள்ள பாரஸ் ஃபோட்டோஸின்த் உபயோகிப்பதன் மூலம் சுமார் 500 ரூபாய்க்கும் அதிகம் ஆதாயம் கிடைக்கிறது. மேலும் இது ஏறக்குறைய எல்லா பயிர்களுக்கும் பொருந்தும்.

## பாரஸ் பயன்படுத்துவது எப்படி?

250 மி.லி பாரஸ் ஃபோட்டோஸின்த் ஸ்ப்ரே, 200 லிட்டர் நீரில் கலந்து, விதைத்து/நாற்று நட்டு 15 நாட்களுக்குப்பின் ஏக்கர் ஒன்றுக்கு என்ற கணக்கில் தெளிக்கவும். பூவிடத் தொடங்கும் முன், ஒரு முறை தெளிக்கவும், பயிர்களில் இலைகள் நன்கு நனையும்படி

பாரஸ் ஃபோட்டோஸின்த் கிரான்யூல், ஏக்கருக்கு 10 கிலோ என்ற அளவில், விதைத்து/ நாற்று நட்டு 15 நாட்களுக்குப்பின் வயலில் உரங்களைத் தூவுவது போல், தூவவும்.

பாரஸ் ஃபோட்டோஸின்த் உடன், வழக்கமான உரங்களையும் எருக்களையும் பயன்படுத்தவும்.


பாரஸ் ஃபோட்டோஸின்த் உங்கள் அருகாமையிலுள்ள விவசாய வியாபாரியிடம் கிடைக்கும்.

பாரஸ் ஃபோட்டோஸின்த் பற்றிய மேல் விபரங்களுக்குக் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதவும்:

அக்ரி ப்ராடக்ட்ஸ்
டிவிஷன்,
இந்துஸ்தான்
லீவர் லிமிடெட்.,
165/166 பேக்பே ரிக்ளமேஷன்,
பம்பாய் 400 020.

# பாரஸ் தெளியுங்கள். வயலில் பொன் விளையும்.



# அதே அளவு உரங்களைப் பயன்படுத்தி, பயிர்கள் பெரிய வேர்களைப் பெற்று, அதிக சாகுபடியைத் தரும் வழி இதோ!



# பாரஸ் ஃபோட்டோஸின்த்

சூரிய ஒளி, தண்ணீர், எரு இவைகளைச்
சிறப்பாக உபயோகித்துப் பயிர்களுக்கு
உதவி, சாகுபடியைப் பெருக்குகிறது.

HLL-2588



# சமூக நலத் துறையின் சாதனைகள்

நமது நாடு சுதந்தரம் அடைந்த பிறகு மகளிர், குழந்தைகள், உடல் ஊனமுற்றோர் மற்றும் நலிந்த பிரிவினரின் நலனில் தமிழக அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. சமுதாய வளர்ச்சித்துறையின் ஓர் அங்கமாக இம்மாநிலத்தில் சமூகநலத் துறை செயல்பட்டு வருகிறது.

1975-76-ல் இத்துறைக்கு நிதி ஒதுக்கீடு ரூ. 1.30 கோடியாக இருந்தது. 1986-87-ஆம் ஆண்டில் ரூ. 76.04 கோடியாக உயர்ந்துள்ளது என்பதிலிருந்தே இந்துறையால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் மீது தமிழ்நாடு அரசு காட்டிவரும் அக்கறை தெளிவாகும்.

**மகளிர் நலம்:**

மகளிர்க்கென்றே பதிவு செய்யப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்கள் ஆகியவை அமைத்து எழுதுபொருள் உற்பத்தி, பனைப் பொருள் தொழில்கள், கிராம நூற்பு மையம், சாக்குக்கட்டி, மெழுகுவர்த்தி, தீப்பெட்டித் தொழில், கயிறு பின்னும்தொழில், பட்டுநூல் எடுத்தல், தையல் தொழில், சிற்றுண்டிச்சாலைகள், தட்டெழுத்துப் பயிற்சி, சுருக்கெழுத்துப் பயிற்சி, கணக்குப் பயிற்சி போன்ற பல சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இச்சிறப்புத் திட்டங்களின் மூலமாக 69,000 ஏழை எளிய பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**சேவை இல்லங்கள்:**

ஏழை விதவைகள், ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோரின் நலனுக்காக சேவை இல்லங்கள் 6 இயங்கி வருகின்றன. இச்சேவை இல்லங்களில், அப்பெண்கள் கல்வி பயிலவும், பலகைத்தொழில்களில் பயிற்சி பெற்று சமுதாயத்தில் தனித்து சுய தேவையுடன் வாழவும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

**பணிபுரியும் மகளிர் விடுதி:**

பணிபுரியும் மகளிர்க்குப் பாதுகாப்பும் வசதியும் செய்யும் பொருட்டு, பணிபுரியும் மகளிர் விடுதிகள் தமிழ்நாட்டில் 6 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**வழிகாட்டி நிலையங்கள்:**

ஏழை விதவைகள் மற்றும் ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் வேலை வாங்கிக் கொடுக்கவும் வங்கியின் மூலம் கடன் உதவிபெறவும் வழிகாட்டி நிலையங்கள் 1978-79-ஆம் ஆண்டு முதல், 8 மாவட்டங்களில் துவக்கப்பட்டு 50,000 ஏழைப் பெண்களுக்கு வங்கி மூலம் ரூ. 78 இலட்சம் கடன் உதவி பெற வகை செய்துள்ளன.

**இலவசப் பாடப்புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் வழங்குதல்:**

ஆண்டு வருமானம் ரூ.3,000க்கும் குறைவான ஏழை விதவைகளின் குழந்தைகள் பயன்பெற இலவச பாடப்புத்தகம் மற்றும் நோட்டுப்புத்தகம் வழங்கும் திட்டம் 1978-79ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது; ஆண்டுதோறும் 3,000 குழந்தைகள் பயன்பெறும் வகையில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஆதரவற்ற விதவைகளின் பெண்களுக்குத் திருமண உதவி:**

ஆண்டிற்கு ரூ. 3,000 க்கும் குறைவான வருமானம் உள்ள விதவைகளின் பெண்களுக்கான திருமணத்திற்காக நிதி உதவும் திட்டம் 1981-82ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, ஆண்டொன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 1,000 வீதம் 1,000 ஆதரவற்ற விதவைகள் பயன்பெறும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 4,300 விதவைகளின் பெண்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டம் 1984-85-ஆம் ஆண்டு முதல் 10.15 இலட்சம் செலவில் 1015 விதவைகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அனாதைப் பெண்களின் திருமண நிதியுதவித் திட்டம்:**

இத்திட்டம் 1985-86ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு, ஒரு நபருக்கு ரூ. 1000 வீதம் ஆண்டொன்றுக்கு 1,000 பெண்கள் பயன் பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மகளிர் மேம்பாட்டுக் கழகம்:**

நகர்ப்புறம் மற்றும் கிராமப் புறங்களில் உள்ள பெண்கள் கல்வி, உடல்நலம், வேலை வாய்ப்பு போன்ற எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் 1983-ஆம் ஆண்டு ஒரு கோடி ரூபாய் மூல தனத்துடன் தோற்றுவிக்கப்பட்டது.

**சமூக வளர்ச்சித் திட்டம்:**

சிவகாசி, சாத்தூர், வேம்பக் கோட்டை வட்டாரங்களிலும் சிவகாசி, சாத்தூர் நகராட்சிகளில் அடங்கிய பகுதிகளில் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர் மற்றும் சிறுவர்களுக்கு சுகாதாரம், கல்வி, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ''யுனிசெப்'' மற்றும் பொதுமக்கள் உதவியுடன், தமிழக அரசு சமூக வளர்ச்சி மூன்றாண்டுத்திட்டம் ஒன்றை 1984-85 முதல், மொத்தம் ரூ. 736.97 இலட்சம் செலவில் நிறைவேற்றி வருகிறது.

**பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்குதல்:**

கற்கக் கல்வியும், உண்ண உணவும் வழங்குவதோடல்லாமல், 1 முதல் 8-ஆம் வகுப்புவரை படிக்கும் பள்ளிக் குழந்தைகளுக்கு, ஏறத்தாழ 16 கோடி ரூபாய் செலவில், இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தை 1985-86-ஆம் கல்வி ஆண்டு முதல், தமிழக அரசு துவங்கி உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 59.43 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். சீருடை தைக்கும் பணி, மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், மகளிர் மன்றம், சேவை நிறுவனங்கள், தொழில்வளர்ச்சித்துறை தையல் தொழிற் கூடங்கள் மற்றும் சமூக நல வாரியத்தைச் சார்ந்த நிறுவனங்கள் ஆகியவைகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பணியினால், 40,000 மகளிர்க்கு வேலை வாய்ப்புக் கிட்டியது.

**பாலர் பள்ளிகள்:**

கிராமப் புறங்களில் நர்சரி பள்ளிகளை ஆரம்பிக்கலாம் என்பதனை அரசு கொள்கையளவில் ஏற்று, படிப்படியாகச் செயல்படுத்தி வருகிறது. 1982-83ஆம் ஆண்டில் 4,343 நர்சரி பள்ளிகளும் 1983-84ல் 5,000 நர்சரி பள்ளிகளும் 1984-85-ல் 5,000 நர்சரி பள்ளிகளும், 1985-86-ல் 10,462 நர்சரிப்பள்ளிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பாலர் பள்ளிகள் சிறந்த முறையில் இயங்குவதற்கு கல்வி உபகரணங்கள், விளையாட்டுக்கருவிகள் முதலியன வழங்கப்பட்டுள்ளன.

**உடல் ஊனமுற்றோர் நலம்:**

ஊனமுற்றோர் சமுதாயத்துடன் ஒருங்கிணைந்த ஒரு பகுதி ஆவர். இவர்களில் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றைக் கருதி, கல்வி, தொழிற் பயிற்சி, மருத்துவ உதவி போன்ற பல்வேறு திட்டங்களாகத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இவர்களின் நலனுக்காக 1977-78-ஆம் ஆண்டில் 26.67 இலட்சமாக இருந்த நிதி ஒதுக்கீடு 1986-87-ஆம் ஆண்டில் 201.51 இலட்சங்களாக உயர்ந்துள்ளது.


சுமார் 4500 உடல் ஊனமுற்ற சிறுவர்கள் இலவச தங்கும் வசதி மற்றும் உணவு வசதிகளுடன் சிறப்புக் கல்வி பெறுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்கு தலா இரண்டு ஜோடி இ சீருடைகள் வழங்கப்படுகின்றன.


பார்வையற்ற பெண்களுக்கென்றே தனியாக, 1985-86-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் பள்ளியொன்று தொடங்கப்பட்டுள்ளது.

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக சென்னை குரோம்பேட்டையில் 1984-ல் மனவளர்ச்சி குன்றியோர் நிறுவனம் அரசால் துவங்கப்பட்டது.

**பார்வையற்றோர்க்கான அரசு தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி**

பார்வையற்றவர்களுக்குத் தகுந்த தெரிந்தெடுக்கப்பட்ட தொழிலில் அவர்களுக்குப்போதுமான திறமை ஏற்படவும் வேலை வாய்ப்பை அளிக்கவும், ஒவ்வொரு ஆண்டும் 30 பார்வையற்ற நபர்கள் பொறியியல் பயிற்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, பொறிப்பகுதி பொருத்துதல், புத்தகம் கட்டுதல் மற்றும் மின்கம்பி சுற்றுதல் ஆகிய மூன்று





பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

### காது கேளாதோர்க்குத் தொழிற்பயிற்சி நிலையம்

சென்னை (கிண்டி) மற்றும் மதுரையில் உள்ள தொழிற் பயிற்சி மையங்களில் முழுவதும் காது கேளாதோர்க்குப் பொறிப் பகுதி பொருத்துதல் மற்றும் மின் கம்பி சுற்றுதல் ஆகிய தொழில்களில் பயிற்சி கொடுக்க 1981-82ஆம் ஆண்டில் இரண்டு சிறப்புப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு 1982-83-ஆம் ஆண்டுகளில் காது கேளாதோர் 30 பேருக்கு 2 ஆண்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### ஊனமுற்றோர்க்கு சுயவேலை வாய்ப்பு

வங்கிகளின் மூலம் கடனுதவி பெற்று சென்னை நகரம் மற்றும் பிற மாவட்டங்களிலும் பெட்டிக் கடைகள் அமைக்க ரூ. 250 முதல் ரூ. 500 வரை மானியமாக அரசு வழங்குகிறது. இதுவரை 1240 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

உடல் ஊனமுற்றோர்க்கு (பார்வையற்றோர், காது கேளாதோர், உடல் ஊனமுற்றோர்மற்றும் மனவளர்ச்சி குன்றியோர்) தனிக்கவனிப்பும் கல்வி வசதியும் தேவைப்படுவதால் அவர்களைப் பயிற்றுவதற்கு சிறப்புச் செய்முறை நுட்பம் நிறைந்த ஆசிரியர்களைக் கொண்டு 22 சிறப்புப் பள்ளிகளையும் ஒரு பயிற்சிப் பள்ளியையும் அரசு நடத்தி வருகிறது.

| | |
|---|---|
| பார்வையற்றோர் பள்ளி | ...11 |
| காதுகேளாதோர் பள்ளி | ... 9 |
| மனவளர்ச்சி குன்றியோர்க்கான பள்ளி | ... 1 |
| உடல் ஊனமுற்றோர்க்கான பள்ளி | ... 1 |
| பார்வையற்றோர்க்குப் பயிற்சிப் பள்ளி | ... 1 |

### பயிற்சி பெற்ற ஊனமுற்றோரை தொழில் பழகுவோராக நியமனம் செய்தல்

1979-80-ஆம் ஆண்டு முதல் துவங்கப்பட்ட சிறப்புத்தொழில் பழகுவோர் திட்டத்தின்படி வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஊனமுற்றோர்கள் மாநிலத்தில் உள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களில் அரசு உதவித் தொகையாக மாதம் ரூ. 150 வழங்கப்பட்டு, ஓராண்டிற்கு தொழில் பழகுவோராக அமர்த்தப்படுகின்றனர். இத்திட்டத்தில் 1,327 உடல் ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர்.

### பார்வையற்ற மகளிர்க்கு மறுவாழ்வு இல்லம்

1978-ஆம் ஆண்டு முதல், பார்வையற்ற மகளிர்க்கான உறைவிட வசதிகளுடன் கூடிய ஒரு மறுவாழ்வு இல்லம் சென்னையில் இயங்கி வருகிறது. ஆதரவற்ற 40 வயதுக்குக் குறைந்த, பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் சேர்க்சப்பட்டு, நெய்தல், சாக்குக்கட்டி செய்தல் போன்றவைகளில் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகின்றனர். பயிற்சிக் காலத்தில் அரசு உதவித்தொகையாக நபர் ஒருவருக்கு மாதம் ரூ.50 வழங்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ், பார்வையற்ற மகளிர் 260 பேர் பயனடைந்துள்ளனர்.

### வேலையற்ற பார்வையற்றோர்க்கு நிவாரணம் வழங்குதல்

எஸ்.எஸ்.எல்.சி. / ஐ.டி.ஐ. படித்த பார்வையற்றோர் வேலை வாய்ப்பகத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பதிவு செய்து 40 வயதுக்குக் குறைந்தவராயின் அவர்களுக்கு மாதம் ரூ. 50 நிவாரணத் தொகையாக வழங்கும் திட்டம் 1981ஆம் ஆண்டு உலக ஊனமுற்றோர் ஆண்டின் திட்டங்களில் ஒன்றாகத் துவங்கப்பட்டது.

ஊனமுற்றோர்களின் தன்மைக்கேற்ப முச்சக்கர வண்டிகள், மற்றும் காதொலிக் கருவிகள் இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. 1984-85-ல் 1696 ஊனமுற்றோர்களுக்கும், 1985-86ல் 135 ஊனமுற்றோர்க்கும் முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இதேபோல், 1984-85-ல 4581 காது கேளாதோர்க்கும், 1985-86-ல் 10,419 காது கேளாதோர்க்கும், காதொலிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஊனமுற்றோருக்கென, சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டம் 1981-82ல் தொடங்கப்பட்டது. ஆண்டுக்கு 100 ஊனமுற்றோருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்படுகின்றன.

### ஏனைய திட்டங்கள்

காது கேட்காத, பார்வையற்ற, கைகால் ஊனமுற்ற குழந்தைகள், தொழு நோயாளிகளின் குழந்தைகள் ஆகியோர்களைப் பராமரிப்பதற்குத் தொண்டு நிறுவனங்களுக்கு பராமரிப்பு மானியமாக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 30 வீதம் அரசால் வழங்கப்படுகிறது.

### உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு பயணச் சலுகை

உடல் ஊனமுற்ற மாணவ-மாணவிகளுக்கு வீட்டிலிருந்து பள்ளி மற்றும் மருத்துவ மனை சென்று வர வழங்கப்பட்ட இலவசப் பயணச் சலுகைத் திட்டத்தினால் 13,139 ஊனமுற்ற குழந்தைகள், மாணவ மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

### ஊனமுற்றோர் வாரியம்

உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், காது கேளாதோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தொழு நோயால் பாதிக்கப்பட்டோர்களின் மணவாழ்விற்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்குடன் 1971ல் ஆரம்பிக்கப்பட்ட மாநில ஊனமுற்றோர் வாரியம் 1978ல் சமூக நலத்துறையின் கீழ் கொண்டு வரப்பட்டது. இவ்வாரியம் தற்போது சங்கங்கள் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு சமூக நல அமைச்சரின் தலைமையின் கீழ் 1984-ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது.

### பார்வையற்றோருக்கான திருமண உதவி

கலப்புத் திருமணம் புரிந்து கொள்ளும் தம்பதிகளுக்கு வழங்கப்படும் சலுகை பார்வையுள்ளவர், பார்வையற்றோரை

மணந்து கொள்வதற்கும் நீட்டிக் கப்படுகிறது. இத்திட்டத்தினால் பயன்பெறுபவர் ரூ. 6,000 பெறுவர்.

### சீர்திருத்தப் பள்ளிகள்

சீர்திருத்தப்பள்ளி மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையின் கீழ் இராணிப்பேட்டையில் அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளிகளில் ரூ. 5.34 இலட்சம் செலவில் பற்றவைப்பு மற்றும் உற்பத்தித் தொழிற் கூடம் துவங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒழுக்க நெறி தவறியவர்களுக்குப் புது வாழ்வு அளிக்க தமிழ்நாடு நல நிதி ஒன்று துவங்கவும், 1984-85ஆம் ஆண்டில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பயன் பெறும் இத்திட்டம் 1986-87-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப் படுத்தப்படும்.

### தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம்

உலக வங்கியின் முதலீட்டு உதவியுடன் ஊட்டச்சத்துக் குறைந்த மிகவும் நலிந்த பிரிவினரான 6 மாதம் முதல் 36 மாதம் வரையிலான குழந்தைகள், கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், முன்பருவக்கல்வி பயிலும் குழந்தைகள் இவர்களுக்கு முறையான ஒருமுகத்தோடு ஊட்டச் சத்துடன் இணைந்த பணிகளைப் பரவலாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் செய்யும் குறிக்கோளிற்கிணங்க உலகவங்கி முதலீடு ரூ. 55.78 கோடி உதவியுடன் முதற்கட்டப் பணியாக மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் முன்னோடித் திட்டமாக 1980ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, பின்பு படிப்படியாக 9 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 6 மாதம் முதல் 3 வயதிற்குட்பட்ட எல்லாக் குழந்தைகளின் எடையும் மாதந்தோறும் எடுக்கப்பட்டு, அவர்களுக்குச் சத்துணவு தரப்படுகிறது. வயிற்றுப் பூச்சிக்கு மருந்தும், தடுப்பு ஊசிகளும் கொடுக்கப்படுகின்றன. 5,000 மக்கட் தொகைக்கு ஒரு சுகாதாரத் துணை நிலையம் ஏற்படுத்த 9 மாவட்டங்களில் 1600 சுகாதார துணை நல மையங்கள் கட்டத் திட்டமிடப்பட்டு, இது வரையிலும் 1,071 மையங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

### ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாட்டில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் 1975-76-ஆம் ஆண்டு, முதல் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் படிப்படியாக விரிவு படுத்தப்பட்டுள்ளது.

குழந்தைகள் வருங்காலத்தில் நம்பிக்கை விளக்குகள். எனவே நாட்டிற்கு அவர்கள் உடல் நலத்துடனும், வளத்துடனும் இருத்தல் மிகவும் இன்றியமையாதது. உடலாலும், உள்ளத்தாலும் உறுதியாக உள்ள குழந்தைகளை உருவாக்குதல் வலுவான நாட்டினை அமைக்கச் சிறந்தொரு வழியாகும்.

இவ்வகையில் கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் உடல் நலனும் முக்கியத்துவம் வாய்ந்ததே. இக்குறிக்கோள்களை அடைவதே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பாராட்டுவதற்குரிய நோக்கங்களாகும். இளஞ் சிறார்களிடையேயும், தாய்மார்களிடையேயும், ஊட்டச் சத்துக் குறைவினைப் போக்குவதிலும், குழந்தைகள் சரியான மன வளர்ச்சி, உடல் வளர்ச்சி மற்றும் சமுதாய வளர்ச்சி பெற உதவுவதிலும், இத்திட்டம் சிறப்பான சேவை புரிகிறது.


## ஏழைக் குழைந்தைகளுக்கு இலவசப் பாடநூல்கள்



தமிழ்நாட்டில் 65 இலட்சம் மாணவ, மாணவிகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள் இவர்களில் 1-வது முதல் 8-வது வகுப்புவரை படிக்கும் ஏழை மாணவர்களுக்குத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் இலவசமாக நோட்டு, புத்தகம் வழங்கி வருகிறது. 1986 ஆம் ஆண்டு ரூ. 12 கோடிக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் குழந்தைகளுக்குத் தமிழ்ப்புத்தகங்கள் கிடைக்காததால், தமிழ் படிக்க வாய்ப்பு இல்லாமல் இருந்து வந்தது. இப்போது அந்தமான், பர்மா, பிஜித்தீவு ஆகிய வெளிநாடுகளுக்கும் இலவசமாகத் தமிழ்ப் புத்தகங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதில் பிஜித்தீவுக்கு மட்டும் ரூ. 85 ஆயிரம் மதிப்புள்ள புத்தகங்கள் இலவசமாக அனுப்பப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம் ஆண்டுதோறும் தனது நிதியில் இருந்து நலிந்து போன பள்ளிக்கூடங்களுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ. 25 இலட்சம் இலவசமாக வழங்குகிறது. அது இந்த ஆண்டு முதல், ரூ. 50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.



# வீட்டு வசதியில் முன்னேற்றம்

உணவு உடைக்குப் பிறகு வீட்டுவசதி மக்களின் முக்கிய அடிப்படைத் தேவையாக உள்ளது. அவ்வாறிருப்பினும், நீண்டகாலமாக வீட்டு வசதித் துறையில் முதலீடு செய்வதென்பது உற்பத்தித் திறனில்லாதது என்ற தவறான எண்ணப்போக்கைப் பொருளாதார் திட்ட வல்லுநர்கள் கொண்டிருந்தனர். எல்லாக் குடிமக்களுக்கும் அடிப்படை வசதியான வீட்டுவசதி அளிக்காதவரை மக்கள் சக்தியையும், மக்கள் வளத்தையும் வலுப்படுத்த இயலாது. வீட்டு வசதிப் பணிகள் தீவிரப்படுத்தப் பட்டலொழிய, கட்டிடத் தொழிலினைச் சார்ந்த ஆக்கப் பொருள்கள் தயாரித்தல் மற்றும் இதர பணிகள் வளர்ச்சி அடையாமல் பொருளாதார வளர்ச்சியிலும் ஒரு தேக்க நிலை ஏற்படும். மூன்றாவதாக, நகர மற்றும் கிராமப்புறங்களில் உள்ள தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரும் தங்களது மிகக் குறைவான வருவாய் மூலம் வீடுகளைக் கட்ட இயலாது. எனவே, மாநிலத் திட்டம், இதனைக் கருத்தில் கொண்டு சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் மிக முக்கியமான இச்சமூகநல முதலீட்டில் ஏற்படும் பற்றாக்குறையை நிரப்ப வேண்டும். பொருளாதாரத்தில் நலிவுற்றோரின் செலவு செய்யும் சக்தியை மனத்தில் கொண்டு எல்லாப் பிரிவினருக்கும், வீட்டு வசதியினைச் செய்து கொடுப்பதுதான் இந்த அரசின் அடிப்படைக் கொள்கையாகும். இக்கொள்கைகளுக்கேற்ப தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மற்றும் கிராமப்புற வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், குடிசைப்பகுதி மாற்று வாரியம், நகர்ப்புற வளர்ச்சித்துறை ஆற்றிய 9 ஆண்டுச் சாதனைகளை இப்போது காண்போம்.

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்:**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அதன் துவக்கக் காலத்திலிருந்தே 1985-86 ஆம் நிதியாண்டு முடியப் பல்வேறு வருமான வரம்பு அடிப்படையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள வீடுகளின் தகவல்களும் வருமாறு:

1960-61 ஆம் ஆண்டு முதல், 5 ஆம் ஐந்தாண்டுத் திட்டம் (1979-80) முடிய குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 1970 குடியிருப்புகளும், நடுத்தர மற்றும் உயர் வருவாயினருக்கு 8164 குடியிருப்புகளும், அரசு அலுவலர்களுக்கு 10731 வாடகைக் குடியிருப்புகளும், தொழிலாளர்களுக்கு 2494 மலிவு வாடகைக் குடியிருப்புகளும், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்க்கு 9046 குடியிருப்புகளும், குடிசைப் பகுதியினருக்கு 14956 குடியிருப்புகளும் என மொத்தம் 59022 குடியிருப்புகளை அரசு கட்டித் தந்துள்ளது.

6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980-1981) குறைந்த வருவாயினருக்கு 10917 குடியிருப்புகளும், நடுத்தர மற்றும் உயர் வருவாயினருக்கு 11917 குடியிருப்புகளும், அரசு அலுவலர்களுக்கு 4733 வாடகைக் குடியிருப்புகளும், தொழிலாளர்களுக்கு 636 குடியிருப்புகளும், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு 21656 குடியிருப்புகளும், குடிசைப் பகுதியினருக்கு 4576 குடியிருப்புகளும் என மொத்தம் 56888 குடியிருப்புகளை அரசு கட்டித் தந்துள்ளது.

1986-87 ஆம் நிதியாண்டில் மொத்தம் 16,400 வீடுகள் - மனைகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இதற்காகும் மொத்தச் செலவு ரூ.3742.50 இலட்சம், அரசின் நிதி உதவி ரூ. 1567.50 இலட்சமாகும். இதன் விவரங்கள் கீழ்வருமாறு.:

இவை தவிர, குறைந்த வருவாய்த் தொகுதியினர் / நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினருக்கும் வீட்டு வசதி செய்து தருகின்ற திட்டமாகும். 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 20,081 வீடுகள் (நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினருக்கும்) கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய 3,761 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்-1 மற்றும் 2 மூலமும் வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

| | குடியிருப்பு எண்ணிக்கை | 1986-87-ஆம் ஆண்டின் ஒதுக்கீடு | அரசின் நிதி உதவி |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (தன்னிறைவு வீட்டுமனைகள் திட்டத்தின்கீழ்) | 7,200 | 700.00 | 600.00 |
| 2. குடிசைப்பகுதி மாற்றுத்திட்டம் | 96 | 67.50 | 67.50 |
| 3. குறைந்த வருவாய்ப் பிரிவினர் | 1,300 | 300.00 | 100.00 |
| 4. நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர் | 5,016 | 1875.00 | .. |
| 5. அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டம் | 2,788 | 800.00 | 800.00 |
| மொத்தம் | 16,400 | | |

**தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டம்:**

இத்திட்டம், சென்னை நகரம், மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையகங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்குச் சலுகை வாடகை அடிப்படையில் வீட்டு வசதி வழங்க உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அரசுச் சார்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயல்படுத்துகிறது. மேலும், வாரியம், கட்டி முடித்த வீடுகளைப் பேணிப் பாதுகாக்கவும் செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகள் அரசுக்குச் சொந்தமாகும். 1985-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை வாரியம் 15,464 குடியிருப்புகளைக் கட்டி முடித்துள்ளது. 1986-ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் இறுதி வரை 1962 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 1986-87 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 800 இலட்சம், 2,788 குடியிருப்புகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்:**

1971 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை மாநகரில் மூன்று குறிப்பிடத்தக்க திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

1. குடிசை அகற்றுதல் மற்றும் குடியிருப்புகளைக் கட்டுதல்.
2. விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம்.
3. சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள்.

1983—84 ஆம் ஆண்டு வரை குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் சென்னை மாநகரத்தில் மட்டும் நடைபெற்றது. பின்பு, இவ்வாரியத்தின் பணிகளைக் கட்டம் கட்டமாகப் பிற நகர்ப்புற மையங்களுக்கு விரிவுபடுத்த முடிவெடுக்கப்பட்டது. தற்போது குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் சென்னையைத் தவிர 43 நகரங்களுக்கு விரிவுப் படுத்தப்பட்டுள்ளன.

இது தவிர குறைந்த விலை வீட்டு வசதித் திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது.

**குறைந்த விலை வீட்டு வசதித் திட்டம்:**

சமீப ஆண்டுகளில், குடியிருப்பின் விலை மிகவும் உயர்ந்துள்ளது. இந்தப் பிரச்னையிலிருந்து மீள்வதற்கென நலிந்த பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் வெளியூர்ப் பகுதிகளில் உள்ள குடிசைவாசிகளுக்கு நன்கு திட்டமிடப்பட்டுள்ள வீட்டு மனைப் பிரிவு, வசதி செய்யப்பட்ட பகுதிகளில் வீட்டு வசதிகளையும், அடிப்படை வசதிகளையும் அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முடிந்தவரை உள்ளூரிலேயே கிடைக்கும் கட்டிடப் பொருட்களைப் பயன்படுத்தி, அதிகரித்து வரும் செலவைத் தடுத்து, குறைந்த செலவில் கட்டுவதற்கான தொழில் நுட்பம் மேற்கொள்ளப்பட உள்ளது. இவ்வீடுகள், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைப் போல் வாடகை முறையிலோ அல்லது நீண்ட காலத் தவணை முறையிலோ ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

1985-86ஆம் ஆண்டில், மதுரையில் பெரியார் நகரில், ரூ. 232 இலட்சம் செலவில் 2,010 வீடுகளை, நலிவுற்ற குடிசைவாசிகளுக்குக் கட்டுவதற்கான இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டம்,1986-87ஆம் ஆண்டில் முடிவு பெறும். 1986-87ஆம் ஆண்டில் மற்ற இடங்களில் சுமார் 10,000 வீடுகளை அளிப்பதற்கெனக் குடிசைப்பகுதி மாற்று வாரியம் திட்டங்களுக்கான செய்முறைகளை வகுத்து வருகிறது.

குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் கைவசமுள்ள சில காலி நிலங்களில், தன்னிறைவு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

**கிராமப்புற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்**

மாநிலம் முழுவதிலும் உள்ள 104 வட்ட மற்றும் கோட்ட அளவிலான பிரதம கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின்

வாயிலாக இம் மாநிலத்தில் கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. பிரதான சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், இச்சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது.

1.4.19843 முதல் கிராமப்புற வீட்டு வசதித்திட்டத்தின் கீழ், கட்டித் தரப்படும் குடியிருப்பு ஒன்றின் உயர்ந்த பட்சக் கட்டுமான மதிப்பு ரூ.6,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மலைப் பகுதிகளிலும் இராமேஸ்வரம் தீவிலும் கட்டப்படும் வீடுகளின் உயர்ந்த பட்சக் கட்டுமான மதிப்பு ரூ. 7,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தினால் மொத்தம் ரூ. 5,440 இலட்சம் கடனாக வழங்கப்பட்டு 1,86,523 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் 1,53,543 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்காகவும் 33,070 வீடுகள் மற்றவர்களுக்காகவும் கட்டப்பட்டுள்ளன.

**நகர்ப்புறக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்**

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் நகர்ப்புறங்களிலுள்ள கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கும் கூட நிதி உதவி அளித்து வருகிறது. இதற்காக, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெறுகிறது. பிரதம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் பொருளாதார நிலையில் பின் தங்கிய பிரிவினர், குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருமானப் பிரிவினர் மற்றும் உயர்ந்த வருமானப் பிரிவினர் ஆகியோருக்கு ரூ. 10,000 முதல் ரூ 80,000 வரை கடனாக வழங்குகின்றன. இத் தலைமைச் சங்கம் துவக்கப்பட்ட நாள் கொடங்கி பிரதான வீட்டுவசதிச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கிய தன் வாயிலாக 1984-85 வரை ,59,490 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதற்காக, தலைமைச் சங்கம் பிரதான சங்கங்களுக்கு ரூ. 16,671.35 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. 1985-86ஆம் நிதி ஆண்டில் 1986 பிப்ரவரி மாதம் முடிய தலைமைச் சங்கம் பிரதான சங்கங்களுக்கு ரூ. 1,848.32 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. மேலும் 4,040 வீடுகள் கட்ட நிதியுதவி அளித்துள்ளது. 1985-86ஆம் ஆண்டு நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்திற்கு ஆயுள் காப்புறுதிக் கழகம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு ரூ. 13 கோடி கடனுதவி வழங்கியுள்ளது.



**அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட முன்பணம்**

வீடு கட்ட முன்பணம் வழங்குத் திட்டத்தின் கீழ் மாநில அரசு ஊழியர்களுக்குத் தற்போது பொதுக்கடன் ரூ. 1,75,000 வழங்கப் படுகிறது. இந்த உச்ச வரம்புக்குட்பட்டு வீட்டை விரிவுபடுத்த மற்றும் மேம்படுத்த ரூ. 75,000 வரை கடன் பெறலாம்.

1985-86ஆம் ஆண்டில் வீடு கட்ட முன் பணம் வழங்க ரூ. 1,280 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1986-87ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வீடு கட்ட முன்பணம் வழங்க ரூ. 1,290 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வீடு கட்ட முன்பணம் குடும்ப நலநிதிச் சிறப்புத் திட்டம்**


வீடு கட்ட முன்பணம் வழங்க விதிகளின் படி, அரசு ஊழியர் வீடு கட்டுவதற்கு முன் பணம் பெற்று அக்கடனை முழுவதும் திரும்பச் செலுத்துவதற்கு முன் அகால மரணமேற்பட்டு இறக்க நேரிட்டால் அவர் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் பாக்கித் தொகையுடன் வட்டியும் சேர்த்து அரசுக்கு அவரது குடும்பத்தினர் செலுத்த வேண்டும். மேற்கண்ட விதியினை நடைமுறையில் அமல் படுத்துவதால் பல குடும்பங்கள் மிகவும் அவதியுறுகின்றன. அவ்வாறு அவதியுறும் குடும்பங்களின் அவலை நிலையைப் போக்க முன்பணம் பெற்ற அரசு ஊழியர்களுக்கென ஒரு தனிக் குடும்ப நலத்திட்டத்தை அரசு இப்போது ஆரம்பித்திருக்கிறது. வீடு கட்ட முன்பணம் பெற்ற அரசு ஊழியர்களும், ஒய்வு பெறுவதற்கு முன்பு ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு அவர்கள் மாதந்தோறும் செலுத்தும் கடன் தொகையில் ஒரு தனி விழுக்காடு தொகையினை மேற்கண்ட குடும்பநலநிதித் திட்டத்திற்குத் தவணையாகச் செலுத்த வேண்டும். இத்திட்டம், வீடுகட்ட முன்பணம் பெற்ற அரசு ஊழியர் அகால மரணமேற்பட்டு இறக்க நேரிட்டால் அவர் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் பாக்கித் தொகையை வட்டியுடன் தள்ளுபடி செய்ய வழிவகை செய்கிறது. இதற்காகும் செலவினை அரசு ஊழியர் மாதந்தோறும் செலுத்தும் தொகையிலிருந்து ஈடு செய்யப்படும். இத்திட்டத்தை 1986ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தேதியிலிருந்து அமல் படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மாமன்றம் 1987 ஆம் ஆண்டை, வீடு இல்லாதவர்களுக்கு வீடு தரும் ஆண்டு என்ற இலட்சியம் கொண்ட ஆண்டாக அறிவித்துள்ளது.

வரும் ஆண்டுகளில் வறுமைக் கோட்டில் உள்ள அனைத்து மக்களும் அரசு ஆதரவுடன் சொந்தமாக வீடுகளைப் பெற வேண்டும் என்பதே தமிழக அரசின் கொள்கையாகும்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற இலட்சியத்தை மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையிலான தமிழக அரசு நிறைவேற்றி வருகிறது.

# ஏற்றமிக்கதோர் எதிர்காலத்தின் அஸ்திவாரமாக 80-கோடித் திட்டமொன்று...



**நாட்டின் மேக்னசைட் தேவையில் மூன்றில் ஒருபங்கு தயாரிக்கும் நிறுவனத்தின்சீரிய சேவை.**

1979ம் ஆண்டில், தமிழக அரசின் நிறுவனமாகத் துவங்கிய, தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், இன்று நமது நாட்டின் மேக்னசைட் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.

தரச்சிறப்பான மேக்னசைட் தயாரிப்பாளரின் மற்றோர் அரிய முயற்சியே இந்த 80 கோடித் திட்டமாகும். இதன் மூலம் உலகத் தரக்கட்டுப்பாடுகளுக்கிணையான மேக்னசைட்டை அளித்து, இறக்குமதியைக் குறைத்து, அந்நியச் செலவாணியை மிச்சப்படுத்த உதவுகிறது தமிழ்நாடு மேக்னசைட்.

அதோடு கிராமப்புற வேலை வாய்ப்புகள் பெருகவும் வழிகோலுகிறது.

எஃகு தொழிற்சாலைகளுக்கான ரிஃப்ராக்டரி செங்கல்களுக்கு முக்கியமாக உபயோகமாகும் இந்த மேக்னசைட், கால்நடைத் தீவனம், இரசாயன உரம், இரயில்வே, மற்றும் மொசைக் தரைத்தளங்களுக்கும் அத்தியவாசியமானதாகும்.

தற்போது, மாதாமாதம் 10,000 மெட்ரிக் டன்கள் மேக்னசைட்டை உற்பத்திசெய்யும் தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், எதிர்காலத்தில் ஏற்றமிக்க பல உற்பத்தி இலட்சியங்களில் வெற்றி வாகை சூடத் தயாராகிவிட்டது.

TANMAG

DIPR/MAC

**தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்.**

(தமிழக அரசு நிறுவனம்)
119, கிரீன்வேஸ் சாலை, ஃபேர்லேண்ட்ஸ்,
சேலம்-636 016.

# TAMILNADU LEATHER DEVELOPMENT CORPORATION LIMITED

**857, Periyar EVR High Road, Kilpauk,**

**MADRAS-600 010.**

Development Projects:

* Training Centres to improve skills of members of Scheduled Caste.
* Market support to traditional artisans engaged in the production of footwear and leather goods. Over 100 artisans regularly supported now.
* Help for the establishment of Small Scale Leather Industries.
* Material Banks at Dindigul & Erode to help small tanners.
* Establishment and operation of Common Effluent Treatment Plant at Vaniyambadi.
* Service to Public with quality leather footwear and leather goods at competitive price.

Commercial Projects:

* Production and sales of quality finished leather hide/skin from tanneries at Vinnamangalam and Madhavaram.
* Quality industrial safety footwear and Derby shoes for Industries and Commercial Establishments.

T A L C O S U P R A T A L C O

# டாம்ப்கால்

## கூந்தல் மூலிகைத் தைலம்


தலைமுடி உதிர்கிறதா!
தடுத்து நிறுத்தும்
மூலிகைத் தைலம்

அருமையான
மூலிகைத் தைலத்தால்
அடர்த்தியான
கூந்தல் வேண்டுமா!

குளிர்ச்சியான
மூலிகைத்
தைலத்தால்
வளர்ச்சியான
கூந்தலைப்
பெறவேண்டுமா!

இள நரையா!
பொடுகா!! இதோ!!!
மூலிகைத் தைலம்






# டாம்ப்கால்

கரிசலாங்கண்ணி, மருதாணி,
கீழாநெல்லி, பொடுதலை,
செம்பருத்தி, குமரி போன்ற
30 வகை உயர் ரக மூலிகைகளைக்
கொண்டு தேங்காய் எண்ணெய்
மற்றும் ஆலிவ் எண்ணெயுடன்
தயாரிக்கப்பட்ட கூந்தல் தைலம்.

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்
## சென்னை-600 005.
( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCO_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | +99.8% $SiO_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | +12% $K_2O$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | +99.7% $SiO_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCO_3$ +94% |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி :**

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN
டிஐபிஆர்/17735/363/86/எஸ்ஏஎஸ்.

**தொழிற்சாலை**

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE



குழந்தைகளுக்குச் சத்துணவு பரிமாறப்படுகிறது. இப்போது 28,134 பாலர் பள்ளி மையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றின் மூலம் 21,55,540 குழந்தைகள் பயன் அடைகின்றனர். இதுதவிர 5 வயது முதல் 10 வயதுக்குட்பட்ட மாணவர்கள் 46,30,009 பேரும் மற்றும் 10 வயது முதல் 15 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் 16,13,653 பேரும் பயன் பெறுகின்றனர். தற்போது பள்ளி மையங்களின் எண்ணிக்கை 37,939 ஆகும்.

முதியோர் ஓய்வூதியம் பெறும் நபர்கள் அருகாமையிலுள்ள பாலர்பள்ளி மையம் அல்லது பள்ளிமையங்களில் உணவு பெறுகிறார்கள். இவர்களது எண்ணிக்கை சுமார் 1.98 இலட்சம் ஆகும். இத்திட்டம் 1.1.84 முதல் 112 இராணுவத்தில் இருந்து ஓய்வூதியம் பெற்றவர்கள் அல்லது அவர்களது விதவைகளுக்கும் விரிவாக்கப் பட்டது. இவர்களது பெயர் முதியோர் ஓய்வூதியம் பெறும் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது. அளிக்கப்படும் உணவுப் பொருட்களில் ஒவ்வொருவருக்கும் பின்கண்ட அளவுகள் உள்ளன.

# சரித்திரம் படைக்கும் சத்துணவுத் திட்டம்


முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 1.7.1982 முதல் தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்தில் கிராமப் புறங்களில் 2 வயது முதல் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப் பட்டது.

பிறகு 15.9.82 முதல், நகர்ப்புறங்களிலுள்ள மேற்குறிப்பிட்ட வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கும் விரிவாக்கப்பட்டது. அப்போது ஏற்கெனவே 10 முதல் 14 வயது வரை பழைய திட்டத்தின் மூலம் உணவு பெற்று வந்த மாணவர்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் தொடர்ந்து சத்துணவு அளிக்கப்பட்டது.

பின்பு, இத்திட்டம் 15.1.83 முதல் முதியோர் ஓய்வூதியம் பெற்று வரும் நபர்களும் பயன்பெற வழிவகை செய்யப்பட்டது.

பாலர் பள்ளி மையங்களில் பயிற்சிபெற்ற குழந்தைகள் நல அமைப்பாளர்களைக் கொண்டு, 2 வயது முதல் 5 வயதுக்குட்பட்ட





| அளிக்கப்படும் பொருட்கள் | பாலர்பள்ளி மையங்கள் | தொடக்கப்பள்ளி/ நடுநிலைப்பள்ளி மையங்கள் | உயர்நிலைப்பள்ளி மையங்கள் | ஓய்வூதியம் பெறும் முதியோர் |
|---|---|---|---|---|
| அரிசி | 80 கிராம் | 100 கிராம் | 120 கிராம் | 200 கிராம் |
| பருப்பு | 10 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் |
| எண்ணெய் | 3 கிராம் | 3 கிராம் | 3 கிராம் | 3 கிராம் |
| காய்கறி மற்றும் தாளிதங்கள் | 50 கிராம் | 50 கிராம் | 50 கிராம் | 50 கிராம் |

பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் ஓய்வூதியம் பெறும் நபர்களுக்கும் அரசாங்க விடுமுறை நாட்களைத் தவிர மற்ற எல்லா நாட்களிலும் உணவு பரிமாறப் படுகிறது. அம்மாதிரியான விடுமுறையின்போது முந்திய நாளே மறுநாளைக்கு வேண்டிய உணவு அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. 10 முதல் 15 வயதுள்ள மாணவர்களுக்கு 200 பள்ளி நாட்கள் மட்டும் உணவு அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் சுமார் 2 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. முக்கியமாகக் கிராமம் மற்றும் நகர்ப்புறப் பெண்கள் வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றனர். வேலையில் அமர்த்தப் பெறும்போது விதவைகளுக்கும் ஊன முற்றோர் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் கிராமப்புறங்களில் இருக்கும் 2 முதல் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்ட பல்பொடி இலவசமாகக் கொடுக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் ஆகும் செலவு சுமார் ரூ.175 கோடியாகும்.

கோவை திரு அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர்களும் முதுகலைப் படிப்பு மாணவிகளும் 1983 ஜூன் தொடங்கி 1984 மே முடிய 12 திங்கள் இத்திட்டத்தினால் பயனடைந்த சிறுவர்கள் எந்த அளவிற்கு உடல்நலம் தேறியுள்ளனர் என்பதை ஆராய்ந்தனர். கோயம்புத்தூரிலும் அதைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளிலும் உள்ள பாலர் பள்ளிகள் மற்றும் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள சிறுவர்களின் உடல்நலன்களைப் பற்றி ஆராய்ந்தனர்.

அந்த மதிப்பீட்டில் சிறுவர்களின் எடை 1.50 கிலோ கிராம் முதல் 2.63 கிலோ கிராம் வரையில் கூடியுள்ளது என்றும் சிறுமியரின் எடை 1.54 கிலோ கிராம் முதல் 2.75 கிலோ கிராம் வரை அதிகரித்துள்ளது எனவும் கண்டு பிடித்தனர்.

மேலும் முன்பு 50 சதவீதத்திற்கு மேற்பட்ட சிறார்களின் தலைமுடி பழுப்பு நிற



முடையதாக இருந்ததோடு முடிவளர்ச்சியும் குறைவாக இருந்தது. இத்திட்டத்தில் பயன் பெற்ற சிறுவர்களுக்கு முடி வளர்ச்சி கருமையாகவும் செழுமையாகவும் ஏற்பட்டுள்ளது. மேலும் கண் பார்வை, பற்கள், உதடுகள், ஈறுகள் ஆகியவை நல்லநிலைமையில் இருக்கின்றன. சிறுவர்கள் சுறுசுறுப்பாகவும், தெம்பாகவும் காணப்படுகின்றனர். பள்ளிகளுக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இருமல், சீதளம், ஜுரம் முதலியவை குறைந்துள்ளன என்று தாய்மார்கள் கூறியுள்ளனர்.

இந்த சத்துணவுத்திட்டத்தின் கீழ் உள்ள பாலர்பள்ளி மையங்களில் குழந்தைகள் உடல் நலத்தைக் கவனிப்பதற்காக விரிவான உடல் நலத் திட்டம் ஒன்று வரையப்பட்டிருக்கிறது. அதன்படி, குழந்தைகளின் உடல்நலம் மற்றும் எடையைக் குறிக்கும் அட்டைகள் மையங்களில் பராமரிக்கப்படுகின்றன. UNICEF நிறுவனத்தின் உதவி மூலம் குழந்தைகளின் எடையைக் கணக்கிட அளவு சாதனங்கள் சத்துணவு மையங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

இதே போன்று காந்தி கிராமம் பல்கலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனம் (SCERT) இத்திட்டம் பற்றி ஆய்வு செய்து, சத்துணவினால் உடல் வலிமை, சமூக ஏற்றத் தாழ்வுகள் குறைதல், சாதி மனப்பான்மையில் மாறுதல் ஆகிய நன்மைகள் ஏற்பட்டுள்ளன என்று காட்டியிருக்கிறார்கள்.

இந்த வகையில் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் இந்நாட்டின் எதிர்கால மக்களின் நல்வாழ்விற்குச் சீரிய அடித்தளமாக அமைந்துள்ளது. இவ்வாறு இத் திட்டம் மனித ஆற்றலின் வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் சிறந்த மூலதனமாகத் திகழ்வதால் நாடளாவிய தேசிய முழு வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒரு திட்டமாக உள்ளது.

## முதலமைச்சரின் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்ட மையங்களின் மொத்த எண்ணிக்கை

| | |
|---|---|
| பள்ளிக் கல்வி இயக்குநர் மூலம் | 35,477 |
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல்வாழ்வு இயக்குநர் .. | 1,053 |
| பிற்பட்ட வகுப்பு இயக்குநர் .. | 277 |
| வன தலைமைக் காப்பாளர் .. | 18 |
| மாநகராட்சி ஆணையாளர், சென்னை .. | 366 |
| மாநகராட்சி ஆணையாளர், கோயம்புத்தூர் .. | 95 |
| மாநகராட்சி ஆணையாளர், மதுரை .. | 90 |
| நகராட்சி நிருவாக இயக்குநர் .. | 1,023 |
| சமூக நல இயக்குநர் .. | 28,105 |
| மொத்தம் .. | 66,504 |

### பயன்பெறுவோர் மொத்த எண்ணிக்கை

| | |
|---|---|
| 2 முதல் 4 ஆண்டு .. | 22,88,111 |
| 5 முதல் 9 ஆண்டு .. | 45,59,732 |
| 10 முதல் 15 ஆண்டு .. | 18,40,259 |
| ஓய்வூதிய முதியோர் .. | 1,99,794 |
| | 88,87,896 |

# பட்டுதனைப் பெருக்கிடுவோம் பாரெல்லாம் அனுப்பிடுவோம்

விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட குறைந்த மூலதனத்தில் கிராமப்புறங்களில் அதிக வேலைவாய்ப் பளிக்கக் கூடிய தொழில் பட்டுத் தொழிலாகும். 1977ஆம் ஆண்டு தொழில் வணிகத்துறையில ஒருஅங்கமாக பட்டு வளர்ப்புப் பிரிவு செயல்பட்டு வந்தது.

தமிழக அரசின் ஆக்கமிக்க திட்டங்களால் பல வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்த வேண்டிய தருணத்தில் தமிழக அரசு பட்டு வளர்ச்சித்துறை, தனியாக சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனித்துறையாகச் செயல்பட 1979ஆம் ஆண்டில் ஆணையிட்டது. பட்டுவளர்ப்புத் தொழில் ஒசூர், தாளவாடி ஆகிய மலைப்பகுதிகளில் மட்டுமே நடைபெற்று வந்தது. தமிழக அரசின் தளராத முயற்சியின் காரணமாக, சமவெளிப் பகுதிகளிலும் பட்டுவளர்ப்புத் தொழில் 1977ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது அனைத்து மாவட்டங்களிலும் பட்டு வளர்ப்புத் தொழில் மேற்கொள்ளப்பட்டு, கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பினை அதிகரிப்பதுடன், நல்ல பணப்பயிராக விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தியுள்ளது.


மாநிலத்தில் 1977ஆம் ஆண்டு 15382 ஏக்கரில் விவசாயிகளால் மல்பரி சாகுபடி செய்யப்பட்டு வந்தது. 1986ஆம் ஆண்டு முடிய கடந்த 9 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி 72,662 ஏக்கர் மல்பரி நடவு செய்யப்பட்டு 3,76,368 நபர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றனர். நடப்பு 1986-87ஆம் ஆண்டில் மேலும் புதியதாக 5 ஆயிரம் ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக அரசின் பொருமைக்குரிய சாதனை. மாநிலத்திற்குத் தேவையான பட்டு வளர்ப்பு முட்டைகள் தயாரிக்க நமது மாநிலத்திலேயே தேன்கனிக் கோட்டைப் பகுதியில் நாட்டின விதைப் பகுதியை 1978ஆம் ஆண்டிலேயே அரசின் சீரிய திட்டங்களால் நிறுவப்பட்டது.

நாம் கடந்த காலங்களில் அண்டை மாநிலமான கர்நாடகத்தையே நாட்டின் விதைக்கூடுகளுக்கு அணுக வேண்டியிருந்தது. இந்நிலை 1978ஆம் ஆண்டிலேயே மாறி சுயதேவை பூர்த்தி செய்யப்பட்டது. மாநிலத்தில் தர்மபுரி மாவட்டம் ஒசூர் மற்றும் ஈரோடு மாவட்டம் தாளவாடிப் பகுதிகளில் மட்டுமே முட்டை தயாரிப்பு வித்தகம் செயல்பட்டு வந்தது. தற்போது பட்டு வளர்ப்புத தொழில் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொளளப்பட்டு வருவதால் விவசாயிகளின்தேவை பூர்த்தி செய்யப்பட்டு, பட்டு முட்டை வித்தகங்கள் கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, சேலம், வாணியம்பாடி, திண்டுக்கல், கும்பகோணம், தென்காசி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மத்திய பட்டு வாரியத்தின் கட்டுப்பாட்டில் 3 வித்தகங்கள் ஒசூர், கோயம்புத்தூர் மற்றும் ஆலங்காயம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இவைதவிர தனியார் நிறுவனங்களுக்கும் உரிமம் வழங்கப்பட்டு அரசின் கண்காணிப்பில் முட்டை வித்தகங்கள் ஒசூர் மற்றும் தாளவாடிப் பகுதிகளில் செயல்படுகின்றன. 1977ஆம் ஆண்டில் 16.05 இலட்சம் முட்டைகள் மாநிலத்தில் வளர்க்கப்பட்டன. தற்போது 130 இலட்சம் முட்டைகள் ஆண்டிற்கு வளர்க்கப்படுகின்றன. இந்த முட்டை வளர்ப்பு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.



விவசாயிகள், உற்பத்தி செய்த பட்டுக்கூடுகளை விலை நிர்ணயம் செய்யவும், கொள்முதல் செய்யவும் மாநிலத்தில் பட்டுக்கூடு அங்காடிகள் 1977ல் 3 அங்காடிகள் மட்டுமே இருந்தன. தற்போது 29 அங்காடிகள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.



கூடுகளிலிருந்து பட்டினை எடுப்பதற்குப் பட்டு நூற்பு நிறுவனங்கள் மாநிலத்தில் 1977ஆம் ஆண்டில் 93 ஏனங்கள் செயல்பட்டு வந்தன. பல திட்டங்களால் மாநிலத்தின் தற்போது 188 ஏனங்கள் கொண்ட 21 பட்டு நூற்பு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. தனியார் துறையில் பட்டு நூற்புத் தொழில் ஆரம்பக்காலத்திலேயே அதாவது 1978ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுவதற்கு அரசின்ரால் சலுகைகள் வழங்கப்பட்டு தற்போது 2699 ஏனங்கள் தனியார் நிறுவனங்களில் செயல்பட்டு வருகின்றன. மல்பரி சாகுபடி செய்வோர்களை உறுப்பினராகக் கொண்ட பட்டு நூற்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 68 மாநிலத்தில் அமைக்கப்பட்டு, 303 ஏனங்கள் நன்கு செயல்பட்டு வருகின்றன.

பட்டுத் தொழில நூற்பு கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவுவதற்கு அரசினரால் உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் 1977-ஆம் ஆண்டில் 16.05 இலட்சம் கிலோ கிராம் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தற்போது மாநிலத்தில் 1985-86-ஆம் ஆண்டில் 100 இலட்சம் கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்தின் அருகே ஒரு சிறிய பட்டு நூற்பாலை ரூ.25 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு 1981ஆம் ஆண்டு முதல் செயல் பட்டு வருகிறது. இதுபோன்ற சிறிய நூற்பாலை வடஆர்க்காடு, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பட்டு வளர்ப்பு விரிவடைவதற்கும் விவசாயிகளின் தேவையினைப் பூர்த்தி செய்யவும் இத்தொழிலுக்கு வேண்டிய உள்ளமைப்புகள் அதாவது மல்பரி விதைக் குச்சுகள் வழங்குவதற்கு மாநிலத்தின் ஆங்காங்கே பண்ணைகளும் விவசாயிகளுக்கு மல்பரி சாகுபடி முறை, புழுவளர்ப்பு முறை ஆகியவற்றில் பயிற்சி வழங்குவதற்கும் மாவட்டங்களில் செயல் விளக்கப்பண்ணைகளும், மாவட்டப் பட்டு வளர்ப்பு மையங்களும் நிறுவப்பட்டுள்ளன. இவை தவிர, நலிவடைந்த மலைவாழ் மக்கள் மேன்மையடைய கல்ராயன் மலை, கொல்லி மலை, சித்தேரி மலை, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஆகிய பகுதிகளின் முன்னோடிப் பயிற்சி பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. சீரிய வளர்ச்சிக்கும் அதிக மகசூலுக்கும் விவசாயிகளுக்கு முட்டைகள் வழங்குவதற்குப் பதிலாக இளம்புழுக்கள் வழங்கத் திட்டங்கள் செயல்படுத்தி, தற்போது தமிழ்நாட்டில் 115 கிராமிய இளம்புழு வளர்ப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மாவட்டங்களான தர்மபுரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பட்டு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தியதால் கிராமப் பொருளாதாரம் மறுமலர்ச்சி அடைந்துள்ளது.

தமிழக அரசு ஆக்கமிக்க பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டங்கள் செயல்படுத்தப் போதிய தொழில் நுணுக்கம் தெரிந்த நபர்களின் தேவை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. அரசின் தேவையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு முன்கூட்டியே திட்டமிட்டு 1981-ஆம் ஆண்டில் ஓசூரில் பட்டு வளர்ப்புப் பயிற்சிப் பள்ளி ஒன்றை நிறுவி, ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்த நபர்களுக்குப் பயிற்சி வழங்கி பின்னர் இத்துறையில் சேர்த்துப் பணியாற்றித் திட்டங்களைச் செயல்படுத்த வழிமுறை செய்துள்ளது. மேல்மட்டத் தொழில் நுட்ப வல்லுநர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய விவசாயப் பல்கலைக் கழகம் கோயம்புத்தூரில் இதற்கென ஒரு பட்ட மேற்படிப்பைத் துவக்கிச் செயல்படுத்தி வருகிறது.

உற்பத்தி செய்த பட்டினை விற்பனை செய்வதற்குக் காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர்கள் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம் 1979-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்திற்குத் தமி

ழக அரசின் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் மத்திய பட்டுவாரியம் ஆகியவை வேண்டிய நிதி உதவி வழங்கி, கச்சாப் பட்டு கொள்முதல் செய்வதற்கு வழி வகை செய்துள்ளது. இந்த நிறுவனத்தின் கிளைகள் சேலம், கோவை, தர்மபுரி, மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு தனியார் கூட்டுறவுத்துறை மற்றும் அரசுத்துறைப் பட்டினைக் கொள்முதல் செய்து வருகின்றன. 1985-86ஆம் ஆண்டில் பட்டு இணையம், காஞ்சிபுரம் ரூ. 5.92 கோடி மதிப்புள்ள 1.08 இலட்சம் கிலோ பட்டுக் கொள்முதல் செய்து விற்பனை செய்துள்ளது.

பட்டுத்தொழில் மேற்கொள்ள நமது அரசு உயர் ரகஎம்.5 இன விதைக் குச்சிகள் நடவு செய்வதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.100 மானியமாக வழங்குகிறது. பட்டுப் புழு வளர்ப்பு மேற்கொள்ளத் தேவையான புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்கவும் புழு வளர்ப்பு மனை கட்டவும் கடனாக ரூ. 5000 வங்கிகள் மூலம் பெற்று விவசாயிகளுக்கு வழங்குகிறது. இவர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலம் 25% மானியம் வழங்கப்படுகிறது.

1977-ஆம் ஆண்டு முதல், தமிழக அரசின் ஆக்கமிகு திட்டங்களால் பட்டு வளர்ச்சித்துறை அடைந்த சாதனைகள் எண்ணிலடங்கா. அவை வருமாறு:

மல்பரி பரப்பு 1977-ஆம் ஆண்டில் 15,382 ஏக்கர் இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் 72,622 ஏக்கராக அதிகரித்துள்ளது. பட்டு முட்டை உற்பத்தி 1977-ஆம் ஆண்டில் 16.05 இலட்சம் இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் 130 இலட்சம் முட்டைகளாக அதிகரித்துள்ளது.

பட்டுக்கூடு உற்பத்தி 1977-ஆம் ஆண்டில் 16.05 இலட்சம் கிலோவாக இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் 100 இலட்சம் கிலோவாக அதிகரித்துள்ளது.

கச்சாப் பட்டு உற்பத்தி 1977-ஆம் ஆண்டில் 0.28 இலட்சம் கிலோவாக இருந்தது. 1985-86ஆம் ஆண்டில் 3 இலட்சம் கிலோவாக அதிகரித்துள்ளது. புழுவளர்ப்புத் தளவாடங்கள் வாங்குவதற்கான மானியம் 1977-ஆம் ஆண்டில் 531 ஆக இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் 1,4824 ஆக அதிகரித்துள்ளது. புழுவளர்ப்பு மனைகட்ட மானியம் 1977-ஆம் ஆண்டில் 431 ஆக இருந்தது. 1985-86ல் 12969 ஆக அதிகரித்துள்ளது.

வேலை வாய்ப்புப் பெருக்கம் 1977-ஆம் ஆண்டில் 76910 ஆக இருந்தது. 1985-86ல் 3,76,368 ஆக அதிகரித்துள்ளன.

பட்டு வித்தகங்கள் 1977-ஆம் ஆண்டில் 1 ஆக இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் 8 ஆக அதிகரித்துள்ளன.



பட்டு நூற்பு நிலையங்கள் 1977-ஆம் ஆண்டில் 4 ஆக இருந்தன. 1985-86-ஆம் ஆண்டில் 21 ஆக அதிகரித்துள்ளன.

அரசு பட்டுக்கூடு அங்காடிகள் 1977-ஆம் ஆண்டில் 3 ஆக இருந்தன. 1985-86-ஆம் ஆண்டில் 29 ஆக அதிகரித்துள்ளன.

மாவட்ட பட்டு வளர்ச்சி மையம் 1977-ஆம்ஆண்டில் ஒன்றும் இல்லை. 1985-86-ஆம் ஆண்டில் 4 ஆக அதிகரித்துள்ளன.

கிராமிய நூற்பு மற்றும் பயிற்சி மையம் 1977-ஆம் ஆண்டில் ஒன்றும் இல்லை. 1985-86-ஆம் ஆண்டில் 7 ஆக உயர்ந்துள்ளது.

கிராமிய இளம்புழு வளர்ப்பு மையங்கள் 1977-ல் ஆண்டில் ஒன்றும்இல்லை. 1985-86-ஆம் ஆண்டில் 115ஆக அதிகரித்துள்ளன.

தொழிற்நுட்ப சேவை மையங்கள் 1977-ஆம் ஆண்டில் ஒன்றும் இல்லை. 1985-86-ஆம் ஆண்டில் 34 ஆக உயர்ந்துள்ளன.

முன்னோடி சேவை மையங்கள் 1977ஆம் ஆண்டில்ஒன்றுமில்லை. 1985-86-ஆம் ஆண்டில் 10ஆக உயர்ந்துள்ளது.

பட்டு வளர்ச்சி முன்னேற்ற மையங்கள் 1977-ஆம் ஆண்டில் ஒன்றுமில்லை. 1985-86-ஆம் ஆண்டில் 15 ஆக அதிகரித்துள்ளது.

விளக்கம் மற்றும் பயிற்சி மையங்கள் 1977-ஆம் ஆண்டில் ஒன்றுமில்லை. 1985-86-ஆம் ஆண்டில் 11 ஆக அதிகரித்துள்ளது.

மல்பரி நாற்றங்கால்கள் 1977-ஆம் ஆண்டில் ஒன்றுமில்லை. 1985-86ஆம் ஆண்டில் 5 ஆக அதிகரித்துள்ளது.

மாதிரி மல்பரி பண்ணை 1977-ஆம் ஆண்டில் ஒன்றுமில்லை. 1986-86-ஆம் ஆண்டில் 13ஆக உயர்ந்துள்ளது.

பட்டு விற்பனை இணையம் 1977ஆம் ஆண்டில் ஒன்றுமில்லை.

1985-86-ஆம் ஆண்டில் 1 ஆக உயர்ந்துள்ளது.

"பட்டுதனைப் பெருக்கிடுவோம் பாரெல்லாம் அனுப்பிடுவோம்" என்ற கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

# பிற்படுத்தப்பட்டோர்க்குப் பேருதவி



பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனைக் கவனிப்பதற்காகத் தனியாக ஒரு துறை ''பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை'' 1969-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்துறையின் திட்டங்களை மாவட்ட அளவில் செயல்படுத்த 1975-ஆம் ஆண்டிலிருந்து துணை ஆட்சியர் நிலையில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிப் பார்வையில் செயல்பட்டு வருகின்றனர்.

இத்துறையின் மூலம், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தப் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## உதவித் தொகை

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் எவ்வித இடையூறுமின்றித் தொடர்ந்து கல்வி பயிலும் வகையில் அவர்களை ஊக்குவிக்க உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. பள்ளிப் படிப்பு உபகாரச் சம்பளத்திற்கு சீர் மரபினருக்கு நான்காம் வகுப்பிலிருந்தும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 'ஒன்பதாம் வகுப்புலிருந்தும் புத்தகமாகவும் சிறப்புக்கட்டணம் ஈடுசெய்தும், தேர்வுக் கட்டணம் ஈடு செய்தும் தரப்படுகின்றது. +2, பட்டப்படிப்பு, மற்றும் பட்ட மேற்படிப்புக்கான உதவித் தொகை பணமாக வழங்கப்படுகிறது.

## விடுதிகள்

1977-78ஆம் ஆண்டில் 284 விடுதிகளில் சுமார் 19,000 மாணவர்கள் தங்கிப் படித்து வந்தனர். 1985-86-ஆம் ஆண்டில் 543 விடுதிகளில் சுமார் 32,500 மாணவர்கள் பயன் பெற்றனர். நடப்பாண்டில், மேலும் 15 புதிய விடுதிகள் திறக்கப்படும். விடுதிகளைப் பராமரிக்க ரூ. 411.89 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 49 விடுதிகள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் உள்ளன. மற்ற விடுதிகளுக்கு, சொந்தக்கட்டடங்கள், கட்டப்பட்டு வருகின்றன. 1986-87ஆம் ஆண்டில் சுமார் 10 விடுதிகள் கட்ட ரூ. 54 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1981-82-ஆம் ஆண்டிற்கு முன்பு வரை உதவித்தொகை பெற, வருமான வரம்பு ரூ. 2,500 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1981-82-ஆம் ஆண்டிலிருந்து வருமான வரம்பை ரூ. 5000 ஆக உயர்த்தி, மேலும் அதிக மாணவர்கள் உதவித் தொகை பெற்றுப் பயன் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. 1977-78-ஆம் ஆண்டு வழங்கிய உதவித்தொகை ரூ. 312.33 இலட்சமாகும். 1986-87-ஆம் ஆண்டில் சுமார் 2,90,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.377.98 இலட்சம் செலவிடப்படும். இவ்வரசு, கல்விக்குமிக முக்கியத்துவம் தருவதை இவ்வுயர்வு எடுத்துக்காட்டு வருகிறது.

## பள்ளிகள்

இத்துறையின் மூலம் சீர் மரபினர் மாணவர்களுக்காக 2 மேல் நிலைப் பள்ளிகளும், 8 உயர் நிலைப்பள்ளிகளும் 36 நடுநிலைப் பள்ளிகளும் 123 ஆரம்பப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் மொத்தம் சுமார் 53,000மாணவ-மாணவிகள் பயின்று வருகின்றனர். பள்ளிகளின் பராமரிப்பிற்காக 1986-87ஆம் ஆண்டு ரூ.210.72 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**புத்தகங்கள் மற்றும் சீருடை வழங்கல்**

சீர் மரபினர் பள்ளிகளில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவர்களுக்கும், புத்தகங்களும், இரண்டு செட் சீருடைகளும் வழங்கப்படுகின்றன. இதே போன்று விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கும் இரண்டு செட் சீருடைகள் வழங்கப்படுகின்றன. 1977-78ஆம் ஆண்டில் ரூ.15.10 லட்சம் செலவிடப்பட்டது. இத்தொகை தற்போது மும்மடங்காகப் பெருகி, இவ்வாண்டு ரூ. 48.27 இலட்சம் செலவில் இவை வழங்கப்படும்.

**இலவசத் தொழிற் கருவிகள் வழங்கல்**

சலவை மற்றும் சவரத்தொழிலாளர்கள், கல்லுடைப்போருக்கு இலவசமாகக் கருவிகள், முறையே ரூ. 443.10, ரூ. 137-15, ரூ.200 மதிப்பில் தங்கள் தொழிலைச் செய்ய ஏதுவாக வழங்கப்படுகின்றன. 1977-78-ஆம் ஆண்டில் 4095 நபர்களுக்கு ரூ. 7 இலட்சம் செலவில் கருவிகள் வழங்கப்பட்டன. 1986-87ஆம் ஆண்டு. ரூ. 15.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சலவைத்துறை கட்டுதல்**

சலவைத் தொழிலாளர்களுக்கு செய்து தரப்படும் முக்கிய வசதி சலவைத்துறை கட்டித் தருவதாகும். இதற்காக அரசு 75% மானியம் வழங்குகிறது. மீதியில் 20% உள்ளாட்சிகளின் பங்காகவும் 5% பயனாளிகளின் பங்காகவும் செலுத்தப்படுகிறது. 1977-78-ஆம் ஆண்டு ஒரு சலவைத் துறை ரூ. 8,000 செலவில் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டு (1986-87) ரூ. 2 லட்சம் செலவில் சுமார் 6 சலவைத் துறைகள் கட்டப்படும்.

**நில எடுப்பு**

நரிக்குறவர், நாவிதர், ஒட்டர், வண்ணார் இனத்தைச் சார்ந்த மிக பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களில் வீட்டுமனை இல்லாத நிலமற்ற ஏழைகளுக்கு வீட்டு மனை வழங்கும் சிறப்புத் திட்டமொன்றை அரசு 1981-82லிருந்து செயல்படுத்தி வருகிறது. 1981-82 முதல் இதுவரை ரூ. 81.65 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. 1986-87-ஆம் ஆண்டு ரூ. 10 இலட்சம் இதற்காக ஒதுக்கப் பட்டுள்ளது.

**சட்டக் கல்வி பயின்ற இளம் பட்டதாரிகளுக்குப் பயிற்சி**

அரசியல், சட்டம் போன்ற சட்டத்தின் பல்வேறு தனித்துறைகளில் திறமை பெற்ற பிரபல வழக்கறிஞர்களிடம், இளம் சட்டப்பட்டதாரிகள் 20 பேர்களைத் தேர்ந்தெடுத்து மூன்றாண்டுப் பயிற்சிக்கு அனுப்ப ரூ. 1.88இலட்சம் ,1986-87-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்புக்கான குறுகிய காலப் பயிற்சி**

இத்திட்டத்தின்படி, பிற்படுத்தப்பட்ட வகுப்பு சீர் மரபினருக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கோடு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற பல்வேறு நிறுவனங்களில் பணி நியமனங்களுக்கான போட்டித் தேர்வுகள் எழுதப் பயிற்சியும், கம்ப்யூட்டர் புரோகிராமிங், விற்பனையாளர் போன்ற துறைகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதற்கு விடுதி வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. 1986-87-ஆம் ஆண்டு 600 மாணவர்கள் பயனடையும் இத்திட்டத்திற்கு ரூ. 697 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சிறப்புப் பயிற்சி நிலையம்**

பிற்படுத்தப்பட்ட வகுப்பு-சீர் மரபினர், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கான தேர்வு எழுதப்பயிற்சியளிக்கும் சிறப்புப் பயிற்சி நிலையம் சென்னையில் 1971-ஆம் ஆண்டு





முதல் செயல்பட்டு வருகிறது. இதைத்தவிர 1983-ஆம் ஆண்டிலிருந்து டெல்லியில் உள்ள டாக்டர் ராவ் ஐ.ஏ.எஸ்., பயிற்சி மையத்தில் ஆண்டுதோறும் இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி போன்ற தேர்வுகள் எழுதப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்காக ஏற்படுத்தப்பட்ட இரண்டாம் உயர் ஆணைக்குழு**

1982ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு 28.2.1985 ஆம் நாளன்று அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்து அதனடிப்படையில், பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டிருந்த 50% இட ஒதுக்கீடு தொடர்ந்து நீடிக்க அரசு வகை செய்து ஆணை பிறப்பித்தது அரசு தனது 31.7.'85தேதியிட்ட ஆணையில் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பட்டியலை அறிவித்துள்ளது.

**மதம் மாறிய கிருத்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்:**

பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து கிருத்துவ மதத்திற்கு மாறியவர்களையும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு எனக் கருதிச் சலுகைகளை வழங்கலாம் என அரசாணை 558 (சமூக நலத்துறை) நாள்: 24.2.'86-ல் உத்தரவிட்டுள்ளது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார ரீதியில் மேம்பாடு அடைந்து வாழ்க்கையில் முன்னேற்றம் பெற உதவும் பொருட்டு இக்கழகம் 1981-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இக்கழகம் பிற்படுத்தப்பட்டோர் தொழில் தொடங்குவதற்காக ஆரம்ப மூலதனத் தொகையை, குறைந்த வட்டி வீதத்தில் வழங்கி, வங்கிக் கடன் பெற்றுத் தரவும் உதவுகிறது.

**இதர திட்டங்கள்**

பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மேம்பாட்டுக்காகத் தொழிற்பயிற்சி நிலையங்கள், பொதுநோக்குத் தொழில் பட்டறைகள், கிணறு மான்யம், வீடு கட்டித் தருதல், பரிசுப் புத்தகம் வழங்கல் போன்ற பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.


மேற்கூறிய பல்வேறு முன்னேற்றத் திட்டங்களுக்காக 1986-87-ஆம் ஆண்டு ரூ.12.9 கோடி-ஒதுக்கப்பட்டுள்ளது. இது 1967-68ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 1.61 கோடியை விட 8 மடங்குக்கும் அதிகமாகும். இவ்வுயர்வு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு நிலையை உயர்த்துவதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை தீவிரமாகச் செயல்பட்டு வருவதை எடுத்துக்காட்டுகிறது.

**முதியோர் உதவித் தொகைத் திட்டம்**

முதியோர் உதவித் தொகை 31.3.79 வரை, மாதம் ரூ.20 கொடுக்கப்பட்டது. 1.4.79 முதல், இத்தொகை மாதம் ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டது. பின்னர், மீண்டும் 1.4.82 முதல், இத்தொகை மாதம் ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டது.

முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1976-ஆம் ஆண்டு முடியப் பயன்பெற்ற முதியோர் 50,663 பேர். 1977 முதல் 1986 வரை முதியோர் உதவித் தொகைத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை 3,31,058 ஆகும்.

# Like the port after which it's named, Poompuhar Shipping Corporation itself has made some history.




Centuries ago, the port city of Poompuhar in Tamilnadu was bustling with ships, sailors and hectic commercial activity.

It made history, exporting the famous silks and spices of India to far-off countries around the world.

At Poompuhar Shipping Corporation, we've made a bit of history ourselves.

We're the largest movers of coal along the Indian coast: 24.50 lakh tonnes of coal in 1985-86.

All the way from Haldia and Paradeep to thermal stations in Tamilnadu.

Moreover, we've acquired our own 39,990 DWT bulk carrier, mv TAMIL ANNA, from Japan to speed up the transport of coal and to economise our operations. Two more bulk carriers will be delivered before the end of 1986.

To streamline unloading, we have our own specially trained personnel and other facilities.


This enables us to maintain a very high rate of coal discharge comparable to international norms.

In fact, we offer integrated shipping and handling services that no other shipping company offers!

Now, isn't that making history?

**Poompuhar Shipping Corporation Limited**
304/305 Anna Salai Teynampet Madras 600 018

PSC.422.85 A R



# சிறப்பிடம் வகிக்கும் கதர் கிராமத் தொழில்கள்

இந்தியத் திருநாட்டின் உயிர் நாடி கிராமங்களில் இருக்கிறது என்பதைக் கண்ட அண்ணல் காந்தியடிகள் அவற்றின் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களை வகுத்துத் தந்தார். அவற்றில் ஒன்று தான் கதர் கிராமத் தொழில் திட்டம்

தமிழ்நாட்டில் இத்திட்டங்களைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் போற்றி வளர்த்தார்கள். அண்ணா வழியில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1977-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொண்டது முதல், கதர் கிராமத்தொழில் திட்டங்கள் சீரும் சிறப்புமாக வளர்வதற்கு வழிவகைகளை வகுத்துத் தர்துள்ளார்கள்.

புரட்சித் தலைவர் அவர்களின் 10 ஆண்டுப் பொற்கால ஆட்சியில் அகில இந்திய அளவில் மத்திய அரசும், கதர் கிராமத்தொழில் ஆணைக்குழுவும் பாராட்டும் வகையில் இவ்வாரியம் வளர்ச்சியடைந்துள்ளது. அகில இந்தியாவிலேயே கதர் கிராமத் தொழில் திட்டங்களை நேரடி நிர்வாகத்தில் செயல்படுத்திக் கொண்டு வருவது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தான் என்பது குறிப்பிடத்தக்கது. மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அகில இந்திய அளவில் கீழ்க் கண்ட கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது.

எண்ணெய்த் தொழில், பனைத் தொழில், குளியல் சோப்பு தயாரிப்பு, சலவை சோப்புத் தொழில், தேனீ வளர்ப்பு, பாலியஸ்டர் துணி தயாரிப்பு.

1977-78ல் வாரியத்தின் கதர் கிராமத்தொழில் பொருட்கள் மொத்த உற்பத்தி ரூ.44 கோடியாக இருந்தது. 1985-86-ல் ரூ. 121 கோடியாக உயர்ந்துள்ளது. 10 ஆண்டுகளில் வாரியத்தின் வளர்ச்சி 275 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

அகில இந்திய அளவில் கதர் உற்பத்தியில் உத்தரப் பிரதேசத்திற்கு அடுத்த இடத்தையும், கிராமத்தொழில் உற்பத்தியில் இந்தியாவிலேயே முதலிடத்தையும் தமிழ்நாடு வகிக்கிறது.

புரட்சித் தலைவர் 1977ஆம் ஆண்டு பதவி ஏற்றுக் கொண்ட போது இவ்வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றோர் எண்ணிக்கை 3,33,157. 1985-86-ல் வேலைவாய்ப்புப் பெறுவோர் எண்ணிக்கை 7,17,750 ஆகும்.

மேற்படி வேலைவாய்ப்புப் பெறுவோர் விவரம்:

| | |
|---|---|
| ஆதிதிராவிடர் | 93,710 |
| மலைவாழ் மக்கள் | 9,355 |
| பெண்கள் | 2,04,873 |
| மற்றவர்கள் | 4,09,812 |
| மொத்தம் | 7,17,750 |

கதர்த் திட்டத்தின் மூலம் பெண்களுக்குத் தான் அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 588 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒரு கிராமிய நூற்பு நிலையத்துக்கு 30 நபர்கள் வீதம் சுமார் 17,000 பேருக்கு நிரந்தர வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவற்றின் மூலம் உற்பத்தியாகும் நூலைக் கொண்டு சுமார் 6000 பரம்பரை நெசவாளர்கள் கதர்த்துணிகளை உற்பத்தி செய்து நிரந்தர வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள். வாரியத்தில் 281 கதர் உற்பத்தி அலகுகள் செயல்படுகின்றன.

ஆதிதிராவிட மக்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புற மக்கள் ஆகியோரை கதர் நெசவுத்தொழிலில் ஈடுபடுத்தி அவர்களுக்கு மாற்றுத் தொழிலாக அமையும் வகையில் நேபாளித் தறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு அரசுத் திட்டங்கள் கதர் ஆணைக்குழுத் திட்டங்கள் மூலம் 68 நேபாளித் தறி அலகுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த 68 அலகுகள் மூலம் 5280 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

கிராமிய நூற்பு நிலையங்கள், கதர் உற்பத்தி நிலையங்கள், காதிகிராப்ட்டுகள், தையல் அலகுகள், சாயமிடும் - அச்சிடும் நிலையங்கள், பட்டு உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் சேர்ந்து மொத்தம் 882 அலகுகள் செயல்படுகின்றன.

கதர்த்துறையில் பாலியஸ்டர் உற்பத்தி ஒரு புதிய முற்போக்குத் திட்டமாகும். மக்களின் நாகரிகத் தேவைகளுக்கு ஏற்பத் தரமான பாலியஸ்டர் துணி வகைகள் வாரியத்தால் தயாரிக்கப்படுகின்றன. வாரியத்தில் மொத்தம் 38 பாலியஸ்டர் நூல் உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

1985-86ல் மொத்தம் ரூ. 75.50 இலட்சத்திற்கு கதர் பாலியஸ்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. சேலம் மாவட்டம் எஸ்.பாலம் கிராமத்தில் பாலியஸ்டர் மற்றும் பஞ்சுக் கலவை அலகு ரூ. 55 இலட்சம் மதிப்பில் அனுமதிக்கப்பட்டு, பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பாலியஸ்டர் துணி ரகங்களைச் சாயமிட்டு அச்சிடுவதற்குப் பிரத்தியேகமாக பவானிசாகரில் தனித் தொழில்கூடம் துவக்கப்பட்டுள்ளது. கதர் உறபத்தியில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு கதர்

கிராமத்தொழில் வாரியம் தான் கதர் பாலியஸ்டர் துணிகளைத் தயாரித்து அறிமுகப்படுத்தியது.

தரமுள்ள நவீன ரகப்பட்டுப் புடவைகள் கதர் வாரியத்தில் தயாரிக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில்17பட்டு அலகுகள் செயல் படுகின்றன. 1977ஆம் ஆண்டு கதர் பட்டு உற்பத்தி மதிப்பு ரூ. 61 இலட்சமாக இருந்தது. 1985-86ல் ரூ. 322.92 இலட்சத்திற்கு உற்பத்தி உயர்ந்துள்ளது. இவற்றின் மூலம் 1200 பட்டு நெசவாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. பட்டு நெசவாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.600 முதல் ரூ.700 வரை வருவாய் கிடைக்கிறது.

வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படும் கிராமத்தொழில்களில் சோப்புத்தொழில் மிக முக்கியமான ஒன்று. வாரியத்தில் தயாரிக்கப்படும் வேம்பு, குறிஞ்சி சோப்பு, சந்தனசோப்பு, ஆயுர்வேத மூலிகை சோப்பு ஆகிய குளியல் சோப்புகள் சுகாதாரத்திற்கு ஏற்றவை. நல்ல தரமுள்ளவை. இன்று மக்கள் மத்தியில் அவை மிகவும் பிரபலமடைந்துள்ளன. திருக்கழுக்குன்றத்தில் உள்ள குளியல் சோப்பு அலகில் இவை தயாரிக்கப்படுகின்றன.

வாரியத்தில் 37 சலவைசோப்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் சுமார் 200 நபர்கள் நிரந்தர வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள். வாரியத்தின் மூலம் உற்பத்தியாகும் சலவை சோப்பிற்கு ''கோபுரம் மார்க்'' சலவை சோப்புகள் என்று பெயர். அரசின் துறைகளான மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் போன்றவற்றிற்கும், இந்த சோப்புகள் அனுப்பப்படுகின்றன. முதன் முதலாக குளியல் சோப்புகள் இந்தியப் பாதுகாப்புத்துறைக்கு அனுப்பப்படுகின்றன. சுற்றுலாத் துறையின் தேவைக்கான குளியல் சோப்பு முழுவதையும் வாரியம் தயாரித்துக் கொடுக்கிறது. வாரியத்தின் சலவை சோப்பிற்குக் கேரள மாநிலத்தில் அமோக வரவேற்புள்ளது.

தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள அருந்ததிய சமுதாயத்தினர் வாழ்வு வளம்பெற வாரியம் பற்பல முன்னோடித் திட்டங்களைத் தீட்டியுள்ளது. அவர்களுக்கு நிதியுதவியும், தொழில் நுட்பஉதவியும்,பொதுப்பணிக்கூட உதவியும் வேலைவாய்ப்பும் வாரியம் அளித்து வருகிறது.

வாரியத்தில் 25 காலணிஅலகுகள், 26 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. இவற்றில் தயாராகும் தரமிகு காலணிகள், பெட்டிகள், பணப்பைகள் யாவும் காவல்துறை, போக்குவரத்துத்துறை, நகராட்சிகள், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை ஆகிய அரசு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. தரமிக்க வாரிய காலணிகளுக்குப் பொது மக்களிடம் நல்ல வரவேற்பு இருக்கிறது. 1977ல் ரூ.124 இலட்சமாக இருந்த உற்பத்தி 1985-86ல் ரூ. 723 இலட்சமாக உயர்ந்துள்ளது.

கொளுத்தும் வெயிலிலும், கொட்டும் மழையிலும், நாள் முழுவதும் சாலை ஓரங்களில் துன்பப்படும் காலணித் தொழிலாளர்களின் துயர் துடைக்கப் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, நிழல் தரும் காலணித்



தொழில் கூடங்களை இந்தியாவிலேயே முன்னோடி திட்டமாக தயாரித்து வழங்கி வருகிறது.

ஒவ்வொன்றும் ரூ 8500 மதிப்புள்ள காலணித் தொழில்கூடம், கருவிகள், தையல் இயந்திரம் உட்பட காலணித் தொழிலாளருக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. இவ்விதம் தமிழகம் முழுவதும் 1000 பணிக்கூடங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வாண்டு 750 பணிக்கூடங்களை வழங்கத் தமிழக அரசு ஆணை வழங்கியுள்ளது.

தோல் பதனிடுவோர் மற்றும் காலணித் தொழிலாளர்களுக்கு கடன், மானியமாக வாரியம் நேரடியாக நிதியுதவி செய்து வருகிறது. இதுவரை தோல் பதனிடுவோர் சுமார் 5500 நபர்களுக்கும் காலணித் தொழில் செய்வோருக்கும் கடனும்மான்யமும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 1608 பனை தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களும், 6 மாவட்ட பனைவெல்ல சம்மேளனங்களும் சென்னையில் மாநிலப் பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு சம்மேளனமும் செயல்பட்டு வருகின்றன.

1977-78ல் பனைப்பொருள் உற்பத்தி ரூ. 1018 இலட்சமாக இருந்தது. 1985-86ல் பனைப் பொருட்களின் மொத்த உற்பத்தி ரூ. 3475 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. பனஞ்சினி, பனஞ்சர்க்கரையைக் கொண்டு தயாரிக்கப்படும் ''பாம்டா, பாம்கூலா'' போன்ற பானங்கள் உடல் நலத்திற்கு மிகவும் இன்றியமையாதவை. மக்களிடத்தில் இவை நல்ல வரவேற்புப் பெற்றுள்ளன. இத்தொழிலில் 1977-78ஆம் ஆண்டில் வேலைவாய்ப்புப் பெற்றோர் சுமார் 2,60,000 நபர்களாவர். 1985-86ல் வேலை வாய்ப்புப் பெறுவோர் 5 இலட்சத்திற்கு மேல் ஆகும். இதில் சுமார் 2,14,000 பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

பனைத்தும்பு மற்றும் பனை ஓலைப் பொருட்கள் ஆண்டு தோறும் ரூ. 75 இலட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பனைத்தொழிலாளர்கள் தங்கள் தொழிலில் ஈடுபடும்போது ஏற்படும் விபத்துக்களுக்கு அரசு நிவாரணம் வழங்கி வருகிறது. சிறு விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 100ம் பெரும் விபத்தினால் பாதிக்கப்பட்டவர்

களுக்கு ரூ.500ம், மரணமுற்றவரின் குடும்பத்திற்கு ரூ.1000ம் நிவாரணமாக வழங்கி வந்தது. புரட்சித் தலைவர் ஆட்சிக்காலத்தில் மரணமடைந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ. 5000 நிவாரணமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரையில் 1065 நபர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

உடல் நலத்திற்கு ஒரு அருமருந்து தேன். தமிழகத்தில் 4,286 கிராமங்களில் இத்தொழில் செயல்பட்டு வருகிறது. இத்தொழிலில் 44,581 நபர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆண்டுக்கு 12 இலட்சம் கிலோ தேன் உற்பத்தியாகிறது. அக்மார்க் செய்யப்பட்ட சுத்தமான தேன், தரக் கட்டுப்பாட்டுடன் சீசாக்களில் அடைக்கப்பட்டு, சென்னை குறளகம் கதர் அங்காடியிலும், தமிழகத்திலுள்ள அனைத்து கதர் அங்காடிகளிலும் விற்பனை செய்யப்படுகின்றது. தேனீத் தொழிலில் பல தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களையும், தேனீ வளர்ப்பு உபகிளை, தேனீ பண்ணை முதலியவற்றையும் வாரியம் துவக்கிச் செயல்படுத்தி வருகின்றது.

ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஜவ்வாது மலை, கல்ராயன் மலை, கொல்லிமலை ஆகிய மலைப்பிரதேசங்களில் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், தேனீ வளர்ப்பு உபகிளைகள் துவங்கப்பட்டுள்ளன. இதுவரை 19,400 தேனீ பெட்டிகள் மலைவாழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ, நீலகிரி மாவட்டத்தில் 13500 தேனீப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அதிக அளவில் தேனை உற்பத்தி செய்து வருகின்றது.

பரம்பரையாக இயங்கி வந்த மாட்டுச் செக்குத் தொழிலில் புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்தி மின்விசைச் செக்கினை வாரியம் தமிழகத்தில் அறிமுகம் செய்தது. மாட்டுச் செக்கினை இயக்குவதில் ஆகும் செலவினத்தைவிட மின்விசைச் செக்கினை இயக்கிட செலவினம் மிகவும் குறைவாகும். இதுகாறும் தமிழகத்தில் 3728 மின் விசைச் செக்குகள் வழங்கப்பட்டுள்ளன. எளிதில் இடம் விட்டு இடம் மாற்றிக் கொள்ள ஏதுவான நவீன மின் விசைச் செக்குகள் வாரியத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் 36 எண்ணெய் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. எண்ணெய் உற்பத்தியில் அகில இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கின்றது. 1977-78ல் எண்ணெய் உற்பத்தி ரூ. 351 இலட்சமாகும். 1985-86ல் ரூ. 3468 இலட்சம் மதிப்பு உற்பத்தியை அடைந்துள்ளன. இது சுமார் 10 மடங்கு அதிக வளர்ச்சியாகும்.


தமிழ்நாட்டில் மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு புரட்சித் தலைவரின் ஆட்சியில் பல்வேறு நன்மைகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. பல கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு வேண்டிய நிதியுதவி தடையில்லாமல் அளிக்கப்பட்டு வருகிறது. இன்று தமிழ்நாட்டில் 66 மட்பாண்டக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. வாரியம் 3 அலகுகளை நடத்தி வருகிறது. இவை தவிர 6420 மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு வாரியம் நேரடியாக நிதியுதவி அளித்து அவர்கள் சுயமாகத் தொழில் செய்து வாழ்க்கையில் முன்னேற வழிகாட்டியுள்ளது.

**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய சாதனைகள்**
**ஆண்டு வாரியாக முன்னேற்ற விவரம்**

| ஆண்டு | வேலைவாய்ப்புப் பெறுவோர் | உற்பத்தி ரூ. இலட்சத்தில் | விற்பனை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1977-78 | 333132 | 4433.12 | 4627.17 |
| 1978-79 | 357691 | 4654.78 | 4919.43 |
| 1979-80 | 382590 | 5027.16 | 5260.49 |
| 1980-81 | 410561 | 5580.15 | 5663.38 |
| 1981-82 | 442065 | 6305.57 | 6636.36 |
| 1982-83 | 482860 | 7251.30 | 8054.60 |
| 1983-84 | 527195 | 8454.72 | 10079.21 |
| 1984-85 | 582265 | 10096.82 | 10580.00 |
| 1985-86 | 717750 | 12116.19 | 13160.45 |

தச்சுக் கருமாரத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 8964 நபர்களுக்கு வாரியம் கடன், மான்யமாக நிதியுதவியும் அவர்களுக்குத் தொழில் கருவிகளும் வாங்கி வழங்கியுள்ளது. வாரிய நிர்வாகத்தில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் 38 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும், 4 அலகுகளும் இயங்கி வருகின்றன.

இத்தொழிலில் 15920 கைவினைஞர்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றார்கள். 1977-78-ஆம் ஆண்டில் இத்தொழிலின் உற்பத்தி ரூ. 54 இலட்சமாக இருந்தது. 1985-86ல் ரூ. 793 இலட்சமாக உயர்ந்துள்ளது.



பல தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு உகந்த தொழில் கைமுறைக் காகிதத் தொழிலாகும். வாரியத்தில் 11 அலகுகளும், 5 கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. 1977-78ஆம் ஆண்டில் ரூ. 13 இலட்சமாக இருந்த உற்பத்தி, 1985-86ல் ரூ. 37½ இலட்சமாக உயர்ந்துள்ளது. சுமார் 1,500 நபர்கள் இதன் மூலம் நிரந்தரமான வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள்.



DIPR/12149/603/86/ELEGANT



# பாசனத் திட்டங்களும் மேம்பாட்டுப் பணிகளும்

**1977**-ஆம் ஆண்டிலிருந்து *1986* வரையான ஒன்பது ஆண்டுகளில் பொதுப்பணித் துறையின் நீர்ப்பாசனப் பிரிவின் கீழ் பல பாசனத் திட்டங்களும், மேம்பாட்டுப் பணிகளும் செயலாக்கப்பட்டுள்ளன.

இவற்றில் திருநெல்வேலி மாவட்டத்தில் குண்டாறு, கருப்பாநதி நீர்த்தேக்கத் திட்டங்களும், மதுரை மாவட்டத்தில் பி. டி. ராஜன் கால்வாய்த் திட்டமும், மருதாநதி, வரதமாநதி, பெரியாறு வைகை நீர்த்தேக்கத் திட்டங்களும், அண்ணா மாவட்டத்தில் பாலாறு-பொருந்தலாறு நீர்த்தேக்கத் திட்டமும், காமராஜ் மாவட்டத்தில் குள்ளூர் சந்தை, வேம்பக்கோட்டை நீர்த்தேக்கத் திட்டங்களும், திருச்சி மாவட்டத்தில் காவிரி மேலணைத் திட்டமும், உப்பாறு நீர்த்தேக்கத் திட்டமும், தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோவிலூர் அணையினைத் திருத்தியமைக்கும் திட்டமும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் வரட்டுப் பள்ளம், குண்டேரிப் பள்ளம் நீர்த்தேக்கத் திட்டங்களும், வட்ட மலைக்கரை நீர் ஓடை நீர்த்தேக்கக்கால்வாயை நீட்டிக்கும் திட்டமும், கோவை மாவட்டத்தில், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் கீழ்நீரார் அணையும், பரம்பிக்குளம்-ஆழியாறு ஆயக்கட்டு விரிவாக்கத் திட்டம் கட்டம் (1) மற்றும் (2)ம், தர்மபுரி மாவட்டத்தில் சின்னாறு, பாம்பாறு, கேளவாரப்பள்ளி, தும்பலகள்ளி, வாணியாறு, ஈச்சம்பாடி மற்றும் சூளகிரிச் சின்னாறு நீர்த்தேக்கத் திட்டங்களும் அடங்கும்.

இவை நீங்கலாக, வைகை வடி நிலத்தில் இருந்து வரும் வெள்ளப் பெருக்கை, கிருதமால், குண்டாறு நீர்த்தேக்கங்களுக்குத் திருப்பும் திட்டமும், சென்னை மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் ஒட்டேநல்லா வடிகால் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரி இவற்றிற்கான மேம்பாட்டுப் பணிகளும் மேற்குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட பட்டியலில் 1977 ஆம் ஆண்டிற்கு முன்னரே தொடங்கப்பட்டு முடிக்கப்பட்ட பணிகளும், அடங்கியுள்ளன. எனினும், பெரும்பாலான திட்டங்கள் இந்த ஒன்பது ஆண்டுக் காலத்தில் தொடங்கப் பட்டவையாகும்.

மேற்கண்டவை தவிர திருச்சி மாவட்டத்தில் சித்த மலலி நீர்த்தேக்கத திட்டமும் அண்ணா மாவட்டத்தில் குடகனாறு நீர்த்தேக்கத்தை மீள அமைக்கும் பணியும், குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டமும், சேலம் மாவட்டத்தில் ஆனைமடுவு, கரியக்கோவில் நீர்த்தேக்கத் திட்டங்களும், காமராஜர் மாவட்டத்தில், கோல்வாரப்பட்டி, ஆணைக்குட்டம், நீர்த்தேக்கத் திட்டங்களும் பெரியார் மாவட்டத்தில்நொய்யல், பெரும்பள்ளம், நொய்யல் ஒரத்துப் பாளையம் நீர்த்தேக்கத் திட்டங்களும், பரம்பிக்குளம்-ஆழியாறு ஆயக்கட்டு விரிவாக்கத் திட்டத்தின் மூன்றாவது கட்டமும், தர்மபுரி மாவட்டத்தில் கேசரிகுலி கள்ளா, தொப்பையாறு, நாகாவதி நீர்த்தேக்கத்திட்டங்களும், மதுரை மாவட்டத்தில் பெரியார் அணையை வலுவூட்



டும் பணியும், சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் அனந்தனார் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளும், திருப்பரப்பு அணையின் வலதுகரைக் கால்வாயை நீட்டிக்கும் திட்டமும், தற்போது செயலாக்கத்தில் உள்ளன.

இவற்றில் நாகாவதி, கேசரி குலிகள்ளா, தொப்பையாறு நீர்த்தேக்கங்களும், அனந்தனாறு மேம்பாட்டுப் பணிகள், திருப்பரப்பு அணைக்கட்டு வலதுகரைக்கால்வாய் நீட்டிப்பு வேலைகள், நொய்யல் நீர்த்தேக்கம் ஆகிய திட்டங்களும் 1986-87-ல் முழுமையாக நிறைவு பெறும்.

சென்னை நகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டை முழுமையாக நீக்கும் பொருட்டு, ஆந்திர மாநிலத்தின் ஒத்துழைப்புடன் கிருஷ்ணா நதியில் இருந்து சென்னைக்கு நீர் கொண்டு வரும் திட்டம் தற்போது செயலாக்கத்தில் உள்ள திட்டங்களில் குறிப்பிடத்தக்க திட்டமாகும்.

இவற்றுடன் கீழ்க்கண்ட திட்டங்கள் நடப்பாண்டில் ஒப்பளிக்கப்பட்டு தொடங்கப்படும் நிலையில் உள்ளன.

மதுராந்தகம் ஏரி வலது புறக்கால்வாய் நீட்டிப்புத் திட்டம்.

கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம்.

சின்னவேடம்பட்டி ஏரியமைப்புத் திட்டம்.

சண்முகாநதி நீர்த்தேக்கத் திட்டம்.

இவற்றுடன் தற்போது பயன் அளித்து வருகின்ற நீர்த்தேக்கங்களின் பயன் திறமைமிகுவிக்கும் பொருட்டு, கால்வாய் மேம்பாட்டுத்திட்டங்கள் தொடர்ந்து ஆய்வில் உள்ளன.



## மலைவாழ் மக்கள் நல் வாழ்வு பெற்றிட...

தமிழ்நாட்டில் மலைவாழ் மக்கள், பழங்குடியினருக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் சேலம், வட ஆர்க்காடு, தென்ஆர்க்காடு, தர்மபுரி, திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில் 9 இடங்களில் செயல்படுத்தப்படுகின்றன.


அந்த மலைவாழ் மக்களுக்குச் சாலை, பாசனம், கல்வி, பட்டுப் பூச்சி வளர்த்தல், விவசாயம், காடு வளர்ப்பு, கூட்டுறவு போன்ற வசதிகள் பலவகைகளில் செய்து கொடுக்கப்படுகின்றன. இதற்காக 1980-81ல் 3.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. கடந்த 1985-86-ல் 6¾ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் 9.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட 6¾ கோடி ரூபாய் முழுவதும் செலவாகிவிட்டது. அதன் மூலம் அந்த மலைவாழ் மக்களின் வாங்கும் சக்தி உயர்ந்து இருக்கிறது. குடும்பங்கள் நன்மை அடைந்திருக்கின்றன.

அந்த மலைவாழ் மக்கள் தாங்கள் சேகரிக்கும் தேன், அரக்கு, ஜாதிக்காய் போன்றவற்றைக் கூட்டுறவுச் சங்கத்தில் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக அத்தியாவசியப் பொருள்களான மண்ணெண்ணெய், உப்பு, அரிசி போன்றவற்றை வாங்கிக் கொண்டு போகிறார்கள். அப்படி சராசரி குடும்பத்துக்கு 800 ரூபாய்க்கு ஓர் ஆண்டுக்கு வாங்குகிறார்கள். அப்படி வாங்கி வளம் பெறும் அளவை, 1,500 ரூபாய்க்கு உயர்த்தும்படி மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அவர்கள் கொடுக்கும் பட்டுப் பூச்சிக் கூடுகளுக்கும் உடனே பணம் கொடுக்கும்படியும் அவர் கூறியுள்ளார்.

இந்த மலைவாழ் மக்களுக்காக 400 ஏக்கர் நிலத்தில் பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. இதை நல்ல முறையில் பயன்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது

## நலிந்த பிரிவினருக்கு 50 ஆயிரம் வீடுகள்!



நலிந்த பிரிவினருக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டும் அரசின் திட்டத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் இந்த ஆண்டு 50 ஆயிரம் வீடுகளைக் கட்டும். இதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழக (ஹட்கோ) உதவியும் பயன்படுத்திக்கொள்ளப்படும். தமிழக அரசின் வீட்டுவசதித் திட்டங்களுக்காக இந்த ஆண்டு ரூ. 45 கோடி நிதி உதவி அளிக்க 'ஹட்கோ' முன் வந்துள்ளது.

சென்னை நகரிலுள்ள சுமார் 1200 குடிசைப் பகுதிகளில் 575 ஏற்கெனவே மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.



# ஊரக வளர்ச்சியில் பெருகிடும் வசதிகள்

கிராமங்களின்பொருளாதாரம் மற்றும் சமூக நிலையை உயர்த்தி, கிராம மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும்ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி, வாழ்க்கையில் அவர்களுக்கு ஒரு பிடிப்பை ஏற்படுத்தும் பெரும் பணியை அரசின் ஊரக வளர்ச்சித்துறை நிறைவேற்றி வருகிறது.

கடந்த ஒன்பதாண்டுகளில் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள கிராம வளர்ச்சிப் பணிகள் தனிச் சிறப்புடையவை, ஈடு இணையற்றவை.

1975-76-ஆம் ஆண்டு ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட்ட சராசரித் தொகை ரூ. 29.74 இலட்சம். ஆனால் இதுவே 1980-81ஆம் ஆண்டு ஏறத்தாழ மும்மடங்காகவும், பின்பு பல மடங்காகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசு பதவி ஏற்ற பின்பு, முதற்கண் நிறைவேற்றிய 'தன்னிறைவுத் திட்டம்' முதலில் குறிப்பிட வேண்டிய ஒன்று. வேறு எந்த மாநிலமும் நிறைவேற்றி இராத இந்தத் திட்டத்தை தமிழ்நாடு அரசுதான் முதன் முறையாக மிக விரிவாகவும் விரைவாகவும் நிறைவேற்றியது.

குடிநீர் வசதி, சாலைகள் வசதி, கல்வி வசதி மருத்துவ வசதி போன்ற அடிப்படை வசதிகள் கிராமங்களில் ஏற்படுத்திக் கொடுக்காமல் வளர்ச்சித் திட்டங்களின் முழுப்பயனை எய்த முடியாது என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தன்னிறைவுத் திட்டம் உருவாக்கப்பட்டது. மூன்றாண்டுக் கால அளவிற்குள் அதாவது 1980-81ஆம் ஆண்டு தொடங்கி 1982-83ஆம்ஆண்டு இறுதிக்குள் தமிழகத்தின் எல்லாக் கிராமப்பகுதிகளுக்கும் ஏறத்தாழ 215 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

கிராமங்கள் பெற்ற இந்த அடிப்படை வசதிகள் தன்னிறைவை பேரூராட்சிகள் பெற வேண்டும் என்ற நோக்கத்தில், 1982-83-ஆம் ஆண்டு முதல் பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தியது இந்த அரசு. மொத்தத்தில் ஊராட்சிப் பகுதிகளில் மட்டுமன்றி பேரூராட்சிப் பகுதிகளிலும் அனைத்து அடிப்படை வசதிகளும் மிகக்குறுகிய கால அளவிற்குள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுவிட்டன.

கிராமத்தின் மொத்த தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த பின்பு, கிராமங்களின் அங்கமாக அமைந்துள்ள கிராம மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் திட்டங்களை முனைப்புடன் செயல் படுத்தியது இன்றைய அரசு.

கிராமப்புற மக்களுக்குத் தக்க வேலைவாய்ப்பையும் நல்ல ஊதியத்தையும் அளிக்கும் பல்வேறு திட்டங்களுள் முதலில் குறிப்பிடத்தக்கது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

வறுமையில் வாடும் தனிக் குடும்பங்களைக் குறிப்பாக ஆண்டு வருவாய் ரூ. 3,500க்கு மேற்படாத குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து அக்குடும்பங்களுக்கு கடன் மற்றும் மானியம் வழங்கி, தக்க தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து தங்களைத்தாங்களே உயர்த்திக் கொள்ள வழிவகை செய்கிறது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

1980-ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்பட்டு வரும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஒப்பில்லா முறையில் சாதனைகளை ஏற்படுத்தி உள்ளது.

மேலும் இந்தத் திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்பட்ட குடும்பங்களுள் ஆண்டுதோறும் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டு, எண்ணற்ற ஆதிதிராவிடர் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளன.

ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மட்டும் மொத்தம் 4,62,828 ஆதிதிராவிடர் குடும்பங்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள்ளனர். மொத்தமாக ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்கு மட்டும் நிதி இலக்கு ரூ.13,188 இலட்சங்கள். சாதனை இலக்கு 11,30,100 குடும்பங்கள்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழான மற்றொரு அங்கம், ''கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்'' இத்திட்டம் கிராமப்புற இளைஞர்களும், இளம் பெண்களும் பல்வேறு பணிகளில் பயிற்சி பெற்று தங்களுக்குத் தாங்களே வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் இது வரை 1,66,102 இளைஞர்களும் இளம் பெண்களும் தக்க தொழிற் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களில் எண்ணற்றவர்கள் சுயமாகத் தொழில் செய்து ஒருவருடைய உதவியும் இன்றி, வளமான வாழ்வை அமைத்துக் கொண்டுள்ளனர்.

அடுத்து, குறிப்பிடத்தக்கது தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம். இந்தத் திட்டம் 1980 அக்டோபர் மாதம் முதல் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1981 மார்ச் திங்கள் இறுதி வரை இத்திட்டத்திற்கான செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக் கொண்டது. ஆனால் தற்போது இத்திட்டத்திற்கான செலவு முழுவதையும் மத்திய அரசும் மாநில அரசும் ஆளுக்குப் பாதியாக ஏற்றுக் கொள்கின்றன.


இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு ஏற்படுத்திட்ட சாதனைகள் பாராட்டத்தக்கவை. இத்திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மட்டும் 2,000 பள்ளிக் கட்டடங்களும், 5,500 சமுதாய நலக் கூடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்காக மொத்தம் 9,358 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 37,460 எக்டேர் நிலப்பரப்பில் சமூகக் காடுகள் வளர்க்கப்பட்டன. 63,639 கிலோ மீட்டர் நீளத்திற்கு கிராமப்புறச் சாலைகள் அமைக்கப்பட்டன அல்லது மேம்படுத்தப்பட்டன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தை மொத்தமாக எடுத்துக் கொண்டால், ரூ.156.17 கோடி செலவில் மொத்தம் 1,87,248 வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 17.98 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டு, 1,63,193 மெட்ரிக் டன் அரிசி தொழிலாளர்களுக்குக் கூலியாக வழங்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் மட்டும் இத்திட்டத்திற்கென ரூ. 41.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 297 லட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகளுள் குறிப்பிடத்தக்கது சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம். ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் மட்டும் 37,460 எக்டேர் நிலப்பரப்பில் சமூகக் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. மேலும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 31.3.1985 முடிய மொத்தம் 9,358 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1985-86-ஆம் ஆண்டு மொத்தம் 9,899 வீடுகள் கட்டிக் கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை மிஞ்சி 1986 மார்ச் திங்கள் இறுதிக்குள் மொத்தம் 10,229



வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்ற செய்தி ஆதிதிராவிட மற்றும் மலைவாழ் மக்களின் நல்வாழ்வில் இந்த அரசு கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்தும்.



அடுத்துக் குறிப்பிடத்தக்க திட்டம் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம். கிராமப்புற மக்களுக்குத் தக்க வேலைவாய்ப்பை அளிக்கும் அதே வேளையில் சமுதாயச் சொத்துகளையும் உருவாக்கி அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு இத்திட்டம் 1980-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர் குடும்பங்களில் குறைந்த பட்சம் ஒருவர்க்கு ஓராண்டில் 100 நாட்களாவது வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டது இத்திட்டம். மத்திய அரசின் முழு உதவியோடு நிறைவேற்றப்பட்டு வரும் இத்திட்டத்திற்கென 1984-85 ஆம் ஆண்டிற்காக ரூ.51.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 23,453 வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இணைப்புச் சாலைகள் அமைத்து சிறு பாசன ஆதாரங்களை வளப்படுத்துதல், சமூகக் காடுகள் வளர்த்தல், சமுதாயத்தில் நலிவுற்ற ஆதி திராவிடர் பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல் போன்ற பல வகையான வேலைகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு திறம்பட நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென 1985-86-ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 34.57 கோடி.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கும் திட்டம் முன்னுரிமை வழங்கப்பட்டது. தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு முடிந்த பின்பும்கூட குடிநீர் வழங்கு திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மட்டும் ரூ.89.84 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் ரூ. 24.79 கோடி ரூபாய் செலவில் வறட்சி நிவாரணப் பணியின் கீழ் 21,992 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டன. ஆறாவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் ரூ.108.19 கோடி செலவில் குடிநீர்ப் பிரச்சனை கொண்ட 7,226 கிராமங்களுக்கு (பகுதி அளவில்) நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

அதாவது குடிநீர் பிரச்சனை கொண்ட 7,226 கிராமங்களுக்குக் குறைந்த அளவு ஒரு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 1985-86-ஆம் ஆண்டில் 250 முதல் 300 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடி இருப்புக்கும் ஒரு கையிறைப்பான் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர 1985-86-ஆம் ஆண்டில் அடிப்படைத் தேவைத் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்குவதற்கென ரூ. 24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மக்களுக்குக் குடிநீர் கிடைப்பதில் எந்தத் தடையும் இருக்கக் கூடாது எனவும், இறைப்பான்கள் மற்றும் குடிநீர் வழங்கும் அமைப்புகள் எப்போதும் நல்ல நிலையில் இயங்கி வர வேண்டும் எனவும் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்மையில் நடத்திய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டின் போது ஆணை இட்டுள்ளார்கள்.

கை இறைப்பான்கள் மற்றும் நீர் இறைக்கும் எந்திரங்கள் பழுதுபட்டால் அவை ஒரு வார காலத்திற்குள் பழுது பார்க்கப்பட்டு குடிநீர் தங்கு தடையின்றிக் கிடைக்கச் செய்யப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை இட்டதோடு, 1986-87-ஆம் ஆண்டில், குடிநீர் வழங்கும் அமைப்புகளைப் பராமரிப்பதற்கென ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யவும் ஆணை இட்டார்கள். இந்த அமைப்புகளைப் பராமரிப்பதற்கென முதலில் ஒதுக்கப்பட்டிருந்த தொகை ரூ.20 இலட்சம் மட்டுமே. இதை பத்து மடங்காக உயர்த்தி ரூ. 2 கோடியைக் குடிநீர் அமைப்புப் பராமரிப்புக்கென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி உள்ளார்.

எல்லாத் திட்ட நிறைவேற்றத்திலும் சாதனை ஏற்படுத்தியது போலவே, சாண எரி வாயு அமைக்கும் திட்டத்திலும் தமிழ்நாடு அரசு மாபெரும் சாதனை ஏற்படுத்தி உள்ளது. 1982-83 1983-84, 1984-85 ஆகிய மூன்றாண்டுகளில் 18,000 சாண எரி வாயுக் கலன்கள் நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 29,000 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.



# கைத்தறியில் கலை நயம்

கைத்தறித் தொழிலானது மிகவும் தொன்மை வாய்ந்தது. வேலை வாய்ப்பு அளிப்பதில் வேளாண்மைக்கு அடுத்தபடியான இடத்தை வகிப்பது. இத்தொழிலானது பஞ்சாலைகள், விசைத்தறிகள் ஆகியவற்றுடன் போட்டி போட்டுக் கொண்டு இயங்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளது. இம்மூன்று பிரிவுகள்(அதாவது கைத்தறி, பஞ்சாலை மற்றும் விசைத்தறி) ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒன்றின் தேவையைப் பிறிதொன்று பூர்த்தி செய்யும் வகையில் செயல்படுவதற்கும், தேவையற்ற போட்டியைத் தவிர்ப்பதற்கும் இம்மூன்று துறைகளின் நடவடிக்கைகளையும் வகைப்படுத்த அரசு முயற்சி எடுத்து வருகிறது.

நம்நாட்டில் மட்டும் அல்லாது வெளிநாட்டிலும்கூட கையினால் தயாரிக்கப்பட்ட பருத்தி, நூலிழை, பட்டு ஆகியவற்றாலான கைத்தறித் தயாரிப்புப் பொருட்களின் தேவை உயர்ந்துள்ளது.

நம் மாநிலத்தில் குறிப்பாக ஊரகப் பகுதிகளில் இத்தொழில் நன்கு வளர்ச்சியடைந்து உள்ளது. கைத்தறித் தொழில் இயங்குவதற்குத் தேவையான அளவு இயல்பான ஆதரவையும், விற்பனை வசதியினையும் கொண்டுள்ளது.

அடிப்படை வசதி மூலப் பொருட்கள் வழங்கல் உற்பத்தி, விற்பனை ஆகிய வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த அணுகுமுறை ஒன்றைப் புதிய இருபது அம்சத் திட்டம் கைத்தறித் துறையின் வளர்ச்சிக்கு வகை செய்கிறது.

இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குதல் உறுதியான வருமானம் கிடைக்கச் செய்தல் ஆகிய இரண்டு முக்கிய நோக்கங்களுக்குக் கீழ்க்காணும் கைத்தறி வளர்ச்சித் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகின்றது.

1. நெசவாளர்கள், தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பங்கேற்பதற்காக அவர்களுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் கூட்டுறவு அமைப்பின் கீழ் கைத்தறிகளை அதிக அளவுக்குக் கொண்டு வருதல்.

2. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை வளர்க்க அவற்றின் விற்பனை வசதியுடன் நிதியுதவி வழங்குதல்.

3. இம்மாநிலத்திலுள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தலைமை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிற்குப் போதிய விற்பனை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அவற்றின் பங்கு மூலதனத்தை வலுப்படுத்துதல்.

4. கூட்டுறவுத் துறையின் கீழ் வருகின்ற கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயவிலைகளில் நூலிழை (கையினால் தயாரிக்கப்பட்ட நூலிழை உட்பட) பட்டு, நார்ப்பட்டு, பாலியஸ்டர் ஜரிகை, சாயம், இரசாயனப் பொருட்கள் போன்ற இன்றியமையா இடு பொருட்களை வழங்குதல்.

5. உற்பத்தி மேம்பாடு தொழில் நுட்ப உத்திகளைத் தரம் உயர்த்துவதன் மூலம் அவற்றைப் பலமுனைப் படுத்துதல், வடிவமைப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல், நவீன முறையில் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய திட்டங்களைச் செயற்படுத்தல்.


6. பருத்தி நூலிழைகளாலான துணிகளையும், செயற்கை நூலிழைகளாலான துணிகளையும் பதப்படுத்த வசதிகள் செய்து கொடுத்தல்.

7. நம்நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுப்பதற்காகக் கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப் பெருக்குதல்.

8. ''கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு காப்புறுதித் திட்டம்'' 'நெசவாளர்கள் வீட்டுவசதித் திட்டம்' போன்ற நலத் திட்டங்களைச் செயற்படுத்துல்.

இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நன்மைக்கான திட்டங்கள் வருமாறு:

நம் மாநிலத்திலுள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில் 31.3.86 வரையில் 3.82



இலட்சம் கைத்தறிகள் 1606 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாக அமைக்கப்பட்டுள்ளன. 1977-78ஆம் ஆண்டில் 2.07 இலட்சம் தறிகள் 946 சங்கங்களில் இயங்கி வந்தன. அதாவது 660 சங்கங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. 1.75 இலட்சம் தறிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

வங்கி வட்டி விதத்தைக் காட்டிலும் 2½ சதவீதம் குறைவாகக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை அடிப்படையில் நிதியுதவி வழங்கும் தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கித் திட்டம் ''நபார்டு'' தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு, கைத்தறிகளின் கோட்டையாக விளங்குகிறது. ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ.170 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் நம்மாநிலத்தில் உற்பத்தியாகின்றன.

தமிழ்நாட்டில் ''மிசேரியர்'' கூட்டுறவு நூற்பாலையும் சேர்த்து மொத்தம் 18 கூட்டுறவு நூற்பாலைகள் 4.50 இலட்சம் கதிர்களைக் கொண்டு தோராயமாக 16.5 இலட்சம் கிலோ பருத்தி நூல்களை உற்பத்தி செய்கின்றன. இதில் மாத உற்பத்தி 10,000 முதல் 12,000 (பேல்கள்) வரை ''சிட்டா நூல்'' மீதமுள்ள ''கோன்'' வகை நூல்களும் ஆகும். மேற்கண்ட உற்பத்தியில் 4,500 முதல் 6,000 (பேல்கள்) வரை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பிரதி மாதமும் தேவைப்படுகிறது. கூட்டுறவின் கீழ் உள்ள நெசவாளர்களுக்குத் தேவையான நூல்களைவிட அதிக அளவிற்கு கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்து வருக்கின்றன.

கோ-ஆப்டெக்ஸ் என்ற புகழ்பெற்ற நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைச் சங்கம், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வசதியை அளித்து வருகிறது. தற்போது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் துணிகளில் 50% கொள்முதல் செய்து வருகிறது. 1977-78ல் 18.31 கோடி அளவிற்குக் கொள்முதல் செய்து ரூ. 23.01 கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் 1985-86ஆம் ஆண்டில் மட்டும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ரூ. 75 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்துள்ளது. 1986-87ஆம் ஆண்டில் ரூ. 85 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்யத் திட்டமிட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டிற்கான கைத்தறித் துணி விற்பனை ரூ.102 கோடியாகும். 1986-87ஆம் ஆண்டு கோ-ஆப்டெக்ஸ் கைத்தறித் துணி விற்பனை ரூ.110 கோடியாக இருக்கும். கோ-ஆப்டெக்ஸ்570 கிளை விற்பனை நிலையங்களை நிர்வகித்து வருகிறது.

கைத்தறித் துணி விற்பனையைப் பெருக்க அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்களுள் ஒன்று கைத்தறித் துணி விற்பனைகள் மீது அளிக்கப்படும் தள்ளுபடிச் சலுகையாகும். 1977-78ல் ரூ. 2.50 கோடியாக இருந்த தள்ளுபடி மானிய செலவினம் தற்சமயம் ரூ. 16.00 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

கூட்டுறவுத் துறையின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில், ''சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்'' என்றொரு நலத் திட்டம் தற்போது அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்கள் அனைவரும் ஆயுட்காப்பீட்டுக் கழகத்தின் கீழ் இணைக்கப்படுகிறார்கள்.

இதுவரை 1,12,000 கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்படி ஒவ்வொரு நெசவாளரும் தான் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் 6 பைசாவைச் சந்தாத் தொகையாகக் கொடுக்கின்றார். அந்த ஒரு ரூபாய்க்கு அரசு 3 பைசா கொடுக்கிறது.

இத்திட்டத்தின் கீழ், சேர்ந்துள்ள நெசவாளர் இறந்துவிட்டால், அவரது நியமனதாரர் அவருடைய சேமிப்புக் கணக்கில் உள்ள தொகையுடன் அரசு பங்குத் தொகை, வட்டி மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்து ரூ. 3,000 பெறுவர். இதைத் தவிர தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) தனது பொன்விழா ஆண்டினை ஒட்டி இத்திட்டத்தின் கீழ் இறந்து போகும் நெசவாளர் உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.2,000 தனது பங்காக அளிக்க முன் வந்துள்ளது. எனவே இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் தொகை 1.7.1984 முதல் அதிகபட்சம் ரூ. 5,000 ஆக உயர்ந்திருக்கிறது.

தனியார் துறை நெசவாளர்களுக்கும் கூட்டுறவுத் துறை நெசவாளர்களுக்கும் காப்பீட்டு ஓய்வு நலத் திட்டத்தினை நீட்டித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் நெசவாளர் மாதம் ஒன்றுக்கு ரூ.10 வீதம் அவரது 58வது வயது முடியும்வரை செலுத்த வேண்டும். அதன் பிறகு அவருக்கு அவரால் செலுத்தப்பட்ட சந்தாத் தொகையும் அதன் மீது குவிந்த வட்டியும் திருப்பித்தரப்படும்.

பதினெட்டு வயதில் இத்திட்டத்தில் சேரும் ஒரு நெசவாளிக்கு 40 ஆண்டு

கழித்து அவரது 58வது வயதில் ரூ.33500 கிடைக்கிறது. நெசவாளி 58வது வயது அடையும் முன்பே இறக்க நேரிட்டால் ஆயுள் காப்பீட்டுக் கழகம் காப்பீட்டுத் தொகையான ரூ. 5000 த்துடன் இறக்கும் வரை அவர் செலுத்தியுள்ள சந்தாத் தொகை மற்றும் அதன் மீதான வட்டியும் சேர்த்து அளிக்கப்படுகிறது.

தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு விபத்து நிவாரணத்திட்டம் ஒன்றினை அரசு செயல்படுத்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வேலையில் ஈடுபட்டுள்ளபோது நெசவாளர் ஒருவர் விபத்து காரணமாக இறக்க நேரிட்டாலோ, அல்லது உடல் உறுப்பினை இழக்க நேரிட்டாலோ அவருக்கு அதிகபட்சமாக ரூ. 10,000 நட்ட ஈடாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு உறுப்பினர் சந்தாத்தொகை எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

இத்திட்டத்தைக் கூட்டுறவுத் துறை நெசவாளர்களுக்கும் விரிவாக்குவது தொடர்பாகப் பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி இரு திட்டங்களும் தலைமைச் சங்கத்தின் பொன் விழாவையொட்டி நெசவாளர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்களாகும். இத்திட்டங்கள் தமிழ்நாட்டில் மட்டும்தான் முதல் முதலாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.


யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு ஒரு காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நெசவாளர் உறுப்பினரும் மேற்படி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனிக்கு ஆண்டுச் சந்தாவாக ரூ.14.40 செலுத்த வேண்டும். இத்தொகையில் உறுப்பினர் சார்ந்துள்ள சங்கம் ரூ.9.60ம் உறுப்பினர் ரூ.4.80ம் செலுத்த வேண்டும்.

எதிர்பாராத வகையில் பெருவெள்ளம், நெருப்பு, கொள்ளை, களவு போன்ற இயற்கையின் இடர்ப்பாடுகளால் நெசவாளர்களுக்குத் தொழில் தொடர்பாக ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டும் வகையில் மேற்படி இன்சூரன்ஸ் கம்பெனியானது ரூ. 2,000 வரையில் பலவிதமான இழப்புகளுக்கும் நட்ட ஈடு அளிக்க முன்வந்துள்ளது.


1962ஆம் ஆண்டுடன் நிறுத்தி வைக்கப்பட்ட நெசவாளர் வீட்டுவசதித் திட்டம் மீண்டும் 1979-80ஆம் ஆண்டில் இருந்து அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி தற்போது ஒரு வீடு கட்ட ஆகும் செலவு ரூ.12,000 ஆகும். இதில் மாநில அரசு ரூ. 1,000ஐ மானியமாகவும், ஹட்கோ நிறுவனம் (வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம்) ரூ. 9,700ம் மீதமுள்ள ரூ. 1,300-ஐ பயனடையும் நெசவாளரும் செலுத்த வேண்டும். கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர் பயனடையும் வகையில் 3,219 வீடுகள் கட்ட எடுத்துக்கொள்ளப்பட்டதில், டிசம்பர் 1985 வரையில் 3,027 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 192 வீடுகள் பல கட்டுமான நிலையில் உள்ளன.


## சிட்கோ அளிக்கும் அரண்–
## சிறுதொழில் தயாரிப்புகளுக்கு விற்பனை உதவி


**சிறுதொழில் தயாரிப்புகளை விற்பனை செய்ய சிட்கோ பெரிதும் உதவுகிறது. சிறுதொழில்களின் சார்பில் மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள்/நிறுவனங்களின் கொள்முதல் துறைகளுடன் தொடர்பு கொண்டு சிறுதொழில் தயாரிப்புகளின் விற்பனைக்கு உதவுகிறது, சிட்கோ. DGS & D-க்கு பல்வேறு பொருட்களையும் ஆர்டரின் பேரில் வழங்கும் வாய்ப்பு ஏராளமாக உள்ளது.**


அறை ஏர்கண்டிஷனர்


காதொலி கருவி


கால்குலேட்டர்


அம்மோனியா பிரிண்டிங் & டெவலப்பிங் மெஷின்


டிராக்டர் டிரெயிலர்

தயவு செய்து தொடர்பு கொள்ளவும் :
விற்பனை பிரிவு

**தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்**
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
5, கிரீம்ஸ் சாலை, சென்னை-600 006.
தொலைபேசி : 472171, 475004
தந்தி : TANSIDCO டெலக்ஸ் : 041-7581

DIPR/86 (R)



# வேளாண்மை:

## ஒளிமயமான ஒன்பதாண்டுகள்

'சூழன்றும்ஏர்ப்பின்னது உலகம்' என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். மற்றத் தொழில்களுக்கெல்லாம் முன்னதாக விளங்கும் வேளாண்மைத் தொழில், முதன்மையானதாக நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்கிறது. தமிழகத்தில் முக்கால் பங்கு மக்கட்தொகையினர், உழவினையும், அதனைச் சார்ந்த பிற தொழில்களையுமே நம்பி வாழ்கின்றனர். உழவு செழித்தால் நாட்டில் இல்லாமை, பேதைமை, அறியாமை, கல்லாமை ஆகியவை ஒழிந்து அனைவரும் நல்வாழ்வு வாழ முடியும்.

நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி, மற்றும் கரும்புப் பயிர்களின் உற்பத்தியை உயர்த்தப் பல திட்டங்கள் வேளாண்மைத் துறையின் மூலம் செயலாக்கப்படுகின்றன.

அரிசி உற்பத்தி 1976-77-ல் 42.15 லட்சம் டன்களாக இருந்தது. 1985-86-ஆம் ஆண்டில் 56.00 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல் அரிசி உற்பத்தித் திறன் எக்டேருக்கு 1846 கிலோவாக இருந்தது, எக்டருக்கு 2507 கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது.

உயர் விளைச்சல் தரவல்லபூச்சி நோய் தாக்குதலைத் தாங்கும் தன்மையுள்ள 10 புதிய இரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, உழவர்களிடையே பிரபலமாயின.

நெல் விளையும் அனைத்துப் பருவங்களிலும் நிலங்களிலும் குறைந்தது எக்டேருக்கு 5 டன் நெல் உற்பத்தி செய்யும் திட்டம் துவக்கப்பட்டு சுமார் 50 சதம் பரப்பில் வெற்றியடைந்துள்ளது. தொடர்ந்து இத்திட்டம் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

நீர் பராமரிப்பு முறைகளையும் மற்ற தொழில் நுட்ப உத்திகளையும் கடைப்பிடிக்க மும்மணித்திட்டம் என்ற நிரூபண தளை சுமார் 200 இடங்களில் அமைத்து உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நில வளத்தைப் பெருக்கவும் குறைந்த செலவில் அதிக விளைச்சலைப் பெறவும் உயிரியல் உரங்கலான நீலப் பச்சைப்பாசி மற்றும் அசோலா உரங்கள் சுமார் 9 இலட்சம் எக்டரில் இடப்பட்டன.

காவிரி ஆற்றுப் படுகை உழவர்களின் உற்பத்தி முயற்சியை ஊக்குவிக்க சுமார் 30 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டது.

உயர் விளைச்சல் தரவல்ல சான்றிதழ் பெற்ற நெல்விதை




களை ஆண்டுதோறும் 8,000 டன்கள் என்ற அளவிலிருந்து 16200 டன்கள் என்ற அளவிற்கு விநியோகம் உயர்த்தப்பட்டுள்ளது.

நெல் குருத்துப் புழுவைக் கட்டுப்படுத்த, ஆண்டுதோறும் சுமார் 45 லட்சம் ரூபாய் வீதம் கடந்த ஒன்பது ஆண்டுகளில் சுமார் 405 லட்சம் செலவழித்து 3.60 லட்சம் எக்டரில் பரந்த அளவில் மருந்து தெளிக்கப்பட்டது.

நெல்லில் புகையானை ஒழிக்க ஆண்டுக்கு 25 லட்சம் ரூபாய் வீதம் 225 லட்சம் ரூபாய் செலவில் பரந்த அளவில் மருந்து தெளிக்கப்பட்டது.

நெல்லில் தோன்றும் துங்ரோ நோயைப் பரப்பும் பச்சைத் தத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்த 60 லட்சம் ரூபாய் மான்யமாக வழங்கப்பட்டது.



வயல் எலிகளைக் கட்டுப்படுத்த 8 லட்சம் ரூபாய் செலவில் எலி கொல்லி மருந்துகள் மான்யமாக வழங்கப்பட்டன.

இச்சீரிய திட்டங்களைச் சிறப்புடன் செயல்படுத்தியதன் விளைவாக உணவுப் பற்றாக்குறையுடன் இருந்த தமிழகம் இன்று தன்னிறைவு அடைவதோடல்லாமல் பிற மாநிலங்களுக்கும் வழங்கும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் நெல்லிற்கு அடுத்தபடியாக சிறுதானியங்கள் 18 லட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு, சுமார் 16 லட்சம் டன் விளைச்சல் கிடைக்கிறது. இவற்றில் சுமார் 85 சதம் மானாவாரியாகப் பயிராகிறது.

வறட்சி தாங்கும் குறைந்த வயதும் உயர்விளைச்சல் தரவல்லதுமான 10 புதிய இரகங்கள் பிரபலப்படுத்தப்பட்டுள்ளன.

முன்னேறிய தொழில் நுட்ப உத்திகளையும், உயர்விளைச்சல் இரகங்களையும் கையாண்டு எக்டர் சிறுதானிய உற்பத்தித் திறன் 986 கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது.

மானாவாரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழகமெங்கும் 316 ஆயிரம் ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகள் அமைத்து முன்னேறிய தொழில்நுட்ப முறைகளைக் கடைப்பிடித்து சிறுதானிய உற்பத்திக்கு வழிவகை செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 4 இலட்சம் எக்டரில் மானாவாரிச் சாகுபடி முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன.



மானாவாரிச் சாகுபடியில் உர உபயோகத்தினை அதிகப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வகை செய்யப்பட்டது.

இயற்கையில் உள்ள தழைச் சத்தினைக் கிரகித்துப் பயிருக்கு அளிக்கவல்லவிதையுடன் கலக்கும் அசோஸ்பிரில்லம் நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் ஆண்டுதோறும் 2 இலட்சம் வழங்கப்படுகின்றன.

**பயறு வகைகள்**

பயறுவகைகளில் உற்பத்தியைப் பெருக்க தனிப்பயிராக, கலப்புப் பயிராக, ஊடு பயிராக மற்றும் நெல் தரிசுகளில் விளைவிக்கப் படுகிறது.

1976-77-ம் ஆண்டில் 4.71 லட்சம் எக்டராக இருந்த பயறு வகைகள் பரப்பளவு 9.67 லட்சம் எக்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

1976-77ஆம் ஆண்டில் 1.27 லட்சம் டன்களாக இருந்த பயறு உற்பத்தி 3.67 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல் பயறுவகைகள் உற்பத்தித்திறன் எக்டருக்கு 270 கிலோவாக இருந்தது எக்டருக்கு 386 கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது.

விதை விநியோகம் 800 டன்களிலிருந்து 2700 டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

உயிரியல் உரமான விதையுடன்

உலக்கும் நுண்ணுயிர்க் கலவைப் பொட்டலங்கள் ஆண்டுதோறும் 6 லட்சம் விநியோகம் செய்யப் படுகின்றன.

1976-77ல் 2.98 லட்சம் டன்களாக இருந்த உர உபயோகம், 1985-86ல் 668 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல்12,000ஆக இருந்த உர விற்பனை நிலையங்கள், 16,500 நிலையங்களாக உயர்த்தப்பட்டு, கிராம விவசாயிகளுக்கு உரம் எளிதில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் சுமார் 8கோடி ரூபாய் மதிப்புள்ள பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் வாங்கி 772 வேளாண் கிடங்குகள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன.

வாரந்தோறும் மாநிலம் முழுவதும் 7,116 இடங்களில் பூச்சி நோய் புலனாய்வுசெய்துவிவசாயிகளுக்கு முன்னறிவிப்புச் செய்து பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ள ஆவன செய்யப்படுகிறது.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் தொழில் நுட்ப முறைகளை விவசாயிகளுக்குச் செயல் விளக்கம் செய்து காட்ட 40 எக்டர் கொண்ட 158 தளைகள் அமைக்கப்பட்டுள்ளன.

களைக்கொல்லி மருந்து உபயோகம் விவசாயிகளிடையே பரவிட மான்ய விலையில் களைக்கொல்லிகள் வழங்க ஆண்டுதோறும் சுமார் ரூ.10 லட்சம் செலவிடப்படுகிறது.

இலை மூலம் உரச்சத்தினை அளித்து உற்பத்தியைப் பெருக்க ஆண்டுதோறும் ஒரு லட்சம் எக்டரில் டிஏபி தெளிக்கப்படுகிறது.

1976-77ஆம் ஆண்டில் கரும்புப் பயிரான 1.54 லட்சம் எக்டர் பரப்பு 1985-86ல் 2.05 லட்சம் எக்டருக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல் 16.36 லட்சம் டன்னாக இருந்த வெல்ல உற்பத்தி 22.75 லட்சம் டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது.

எக்டருக்கு 107 டன் கரும்பு மகசூல் விளைவித்து இந்தியாவில் முதலிடத்தைத் தமிழகம் வகிக்கிறது.

3.47 லட்சம் பொதிகளாக இருந்த பஞ்சு உற்பத்தி, சென்ற ஆண்டு சுமார் 6 லட்சம் பொதிகளாக உயர்ந்துள்ளது.

அதேபோல் உற்பத்தித் திறனில் எக்டருக்கு 246 கிலோவாக இருந்தது 358 கிலோவாக உயர்ந்துள்ளது.

## சிறப்புத் திட்டங்கள்

சாகுபடிக்குத் தகுதியற்ற நிலங்களை பயன்படுத்தும் நோக்குடன் சிறு-குறு விவசாயிகளுக்கு இலவசமாக ரூ.242 லட்சம் மதிப்புள்ள 10 கோடி பழ, எரிபொருள், மற்றும் தீவனக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

சிறு-குறு விவசாயிகளிடையே பயறு வகைகளின் புதிய இரகங்களைப் பரவிடச் செய்ய ரூ.208 லட்சம் மதிப்புள்ள 4.61 லட்சம் மினிகிட்டுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல் நெல் மற்றும் சிறு தானியங்களின் புதிய இரகங்களை எல்லா உழவர்களிடையே பரவிடச் செய்ய ரூ. 88 லட்சம் மதிப்புள்ள 7.60 லட்சம் மினிகிட்டுக்களை இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.



5 அணுகுமுறை என்ற புதிய திட்டம் இவ்வாண்டு முதல் செயல் பட்டு வருகிறது. இதன் மூலம் நெல் விளைச்சலில் எக்டருக்குச் சுமார் 570 கிலோ அதிக மகசூல் பெற வாய்ப்புண்டு.

விவசாயிகளுக்கு முன்னேறிய தொழில் நுட்பங்கள் காலத்தே கிடைத்திட உலகவங்கி நிதிஉதவியுடன் பயிற்சி வழித்தொடர்பு திட்டம் ரூ. 36 கோடி செலவில் 1981-82 ஆண்டு முதல் செயல் படுத்தப்பட்டுள்ளது.

1000 பண்ணைக் குடும்பங்களுக்கு ஒரு விரிவாக்கப் பணியாளர் நியமித்து எல்லா தொழில் நுட்பங்களும் செயல்விளக்கம் மூலம் செய்து காட்டப்படும்.

நாளும் பெருகிவரும் சமையல் எண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்யவும், எண்ணெய் வித்து பயிரிடும் உழவர்கள் நல்விளைச்சல் கண்டிடவும் எண்ணெய் வித்துக்கெனப் புதிய துறை ஒன்று 1979-80 ஆண்டு முதல் செயல் பட்டு வருகிறது.

இத்துறையில் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல் படுத்தியதால் 1976-77ஆம் ஆண்டில் 9.50 லட்சம் டன்கள் உற்பத்தியிலிருந்து 1985-86ஆம் ஆண்டில் 15.51 லட்சம் டன்கள் உற்பத்தி காணப்பட்டது.

விதை விநியோகம் 2,500 டன்னிலிருந்து 11,620டன் அளவிற்கு உயர்த்தப்பட்டது.

12 லட்சம் தென்னங்கன்றுகள் விநியோகத்திலிருந்து ,25 லட்சம் நெட்டை, குட்டை மற்றும் குட்டை நெட்டை தென்னங்கன்றுகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தமிழக அரசு 1979-80-ஆம் ஆண்டு முதல் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்களுக்கெனத் தனியே தோட்டக்கலைத்துறை என்ற புதிய துறையைத்தோற்றுவித்தது. இதன்மூலம் உழவர் வாழ்வு மலரப்பல்வேறு நலத்திட்டங்களைச் சிறப்புடன் செயலாக்கி வருகிறது.

1977-76-ஆம் ஆண்டு 9 மாதிரி பழம் மற்றும் நாற்றுப்பண்ணைகளே நடைபெற்று வந்தன. இன்று இது விரிவடைந்து 54 பண்ணைகளாகப் பெருகியுள்ளன.

உழவர்களிடையே 8 லட்சம் பழக்கன்றுகளே விநியோகம் செய்திருந்த நிலைமாறி இன்று 30 லட்சம் கன்றுகள் விநியோகிக்கப் பட்டு வருகின்றன.


அதேபோன்று 16 டன்களாக இருந்த காய்கறி விதை விநியோகம் இன்று 80 டன் அளவை எட்டியுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புக்காகக் கட்டப்பட்ட கசிவு நீர்க்குட்டைகள் 1,719. செலவு ரூ.1,435 இலட்சம்.

உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு 89 லட்சம் மனித நாட்கள்.

இது தவிர 1986-87ஆம் ஆண்டு தஞ்சையில் உள்ள காட்டுத் தோட்டத்தில் ஓர் புதிய வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இப்பல்கலைக் கழகத்தின் கீழ் இரண்டு கால்நடை கல்லூரிகள் சென்னையிலும் நாமக்கல்லிலும் நடைபெற்று வருகின்றன. இது தவிர தூத்துக்குடியில் மீன்வளக் கல்லூரி ஒன்றும் செயல்படுகிறது.



# நாளும் தழைக்கும் கூட்டுறவு



தமிழகத்தில் தழைத்து வளர்ந்து வரும் கூட்டுறவு இயக்கம், கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் அரிய பங்கை ஆற்றி வருகின்றது. மாநிலததுல் உள்ள பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் பல்வகைப் பட்ட பொருளாதார நடவடிக்கைகளில், அவர்களுக்குப் பணி செய்து வருகின்றன.

தமிழகத்தில் உள்ள விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சுமார் மூன்று கிராமங்களுக்கு ஒரு சங்கம் என்ற வீதத்துல் 4,655 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும், வட்டம் மற்றும் வட்டார அளவிலுமான 183 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளும் இயங்கி வருகின்றன.

ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் கூடுதலாகப் பங்கு தொகை செலுத்துவதற்கு ஏதுவாக, 1985-86ஆம் ஆண்டில் நபர் ஒருவருக்கு 250 ரூபாய் வீதம் 1000 பேருக்கு 2.50 இலட்சம் ரூபாய்க்கு வட்டியில்லாக் கடன்களை அரசு வழங்கியுள்ளது. 1986-87ஆம் ஆண்டில், இவ்வகை உறுப்பினர்கள் 1250 பேர், இத்திட்டத்தின்கீழ் உதவி பெறுவர்.

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், பயிர் செலவிற்காகவும், ஆடு, பால்மாடு வளர்த்தல் மற்றும் கோழி வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களை ஏற்று நடத்துவதற்காகவும், விவசாயிகளுக்குக் கடன்களை வழங்கிவருகின்றன.

நடப்பு ஆண்டில் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை 18 கோடி ரூபாய் அளவிற்கும், நீண்டகாலக் கடன்களை 20 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தேவையான குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்குவதற்கு ஏதுவாகும் பொருட்டு கடன் கூட்டுறவுச் சங்கங்கள், தமது உள்நிதிகளைப் பெருக்குவதில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகின்றன. 1976-77 ஆம் ஆண்டு இறுதியில் 156.89 கோடி ரூபாய்க்கு நிலுவையாக இருந்த, அவற்றின் மொத்த வைப்புத்தொகை ஆண்டுக்கு ஆண்டு கணிசமாகப் பெருகி 1985-86-ஆம் ஆண்டின் இறுதியில் 668.80 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்து கடந்த ஒன்பது ஆண்டுகளில் 326 சதவீதப் பெருக்கத்தை அடைந்துள்ளன.

விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் 1979-80ஆம் ஆண்டிலிருந்து வட்டி தள்ளுபடி செய்த அல்லது திருப்பித்தந்த வகையில் 42 கோடி ரூபாயும், சிறுவிவசாயிகளிடம் நிலுவை நின்ற மத்திய காலக் கடனாக மாற்றியமைக்கப்பட்ட அல்லது தவணை நீட்டித்துத் தரப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்த வகையில் 57 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 99 கோடி ரூபாய் அளவிற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளது.

1984-ஆம் ஆண்டு ஜூன் 30-ஆம் தேதியில் தவணை தவறி நின்ற கடன் பாக்கிகள் முழுவதையும் 1985ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள் திருப்பிச் செலுத்திய பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன்தாரர்களுக்குத் தவணை தவறிய தொகை மீதான வட்டியையும் அபராத வட்டியையும் அரசு தள்ளுபடி செய்தது. இச்சலுகையை 93,364 கடன்தாரர்கள் 3.71 கோடி ரூபாய் அளவிற்குப் பெற்றுள்ளனர்.

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் குறித்த காலத்திற்குள் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு தமது குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன் தவணைகளையும் உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துகிற சிறு விவசாயிகளுக்கு 2 சதவீத வட்டி தள்ளுபடியை அரசு 1981-82ஆம் ஆண்டிலிருந்து அளித்து வருகிறது.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் 88.32 கோடி ரூபாய் அளவிற்கு குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்டன. இந்தக் காலத்தில், 33.14 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய காலக் கடன்கள் மொத்தம் ஐந்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும்வகையில் மாற்றியமைக்கப்பட்டன. நீண்ட காலக் கடன்களைப் பொறுத்த வரையில் இயற்கைப் பேரிடர்

களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவள வங்கிக் கடன்தாரர்களின் கடன் தவணைகள் 45.90 கோடி ரூபாய் அளவிற்கு மாற்றியமைக்கப்பட்டன அல்லது தள்ளிப் போடப்பட்டன.

1981-82ஆம் ஆண்டில், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2.95 இலட்சம் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு நெல், பருப்பு வகைகள், தானிய வகைகள், குளிர் பருத்தி, நிலக்கடலை மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆகியவைகள் பயிரிடுவதற்குச் சலுகை விலையில் உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் செலவாக, 303.94 இலட்சம் ரூபாய் அரசு மானியம், ஒரு வறட்சி நிவாரண நடவடிக்கையாக வழங்கப்பட்டது.

அதுபோலவே 1983-84ஆம் ஆண்டில் 3.33 இலட்சம் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு சலுகைச் விலையில் உர விநியோகம் செய்ததற்காக 360 இலட்சம் ரூபாய் அளவிற்கு அரசு மானியம் வழங்கியுள்ளது.

அரசு நிர்ணயித்த அதிக பட்ச அளவிற்குட்பட்டும்; பரிந்துரை செய்யப்பட்ட உர அளவிற்குட்பட்டும், சிறுவிவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளின் விலையில் 25 சதவீதம் வரையிலும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 331/3 சதவீதம் வரையிலும். அரசு மானியம் வழங்கப்பட்டது.

1983 டிசம்பர் மற்றும் 1984 பிப்ரவரி, மார்ச் ஆகிய காலத்தில் மாநிலத்தில் பெரும்பான்மையான பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்குச் சலுகை விலையில் உரங்களை விநியோகம் செய்ததில் 36.39 இலட்சம் ரூபாய்க்கு அரசு மானியம் வழங்கியுள்ளது.

முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் 14 பருவங்களுக்கு 89,785 ஏக்கர் அளவிற்கு 47,459 விவசாயிகளுக்கு 747.57 இலட்சம் ரூபாய் அளவிற்குப் பயிர் ஈட்டுறுதி செய்யப்பட்டது.

விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் தமிழ்நாட்டில் நெற் பயிர் மற்றும் நிலக்கடலைப் பயிர்களுக்கு 1-4-85 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பொது ஆயுள் காப்பீட்டுக் கழகமும், தமிழ்நாடு பயிர் ஈட்டுறுதித் திட்ட நிதியும், பிரிமியம் மற்றும் ஈட்டுறுதித் தொகையினை 2:1 என்ற விகிதத்தில் பங்கேற்கின்றன. மத்திய அரசும் மாநில அரசும் மேற்கண்ட நிதிக்குத் தலா ஒரு கோடி ரூபாயை ஆரம்பக் கட்ட நிதி உதவியாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் இரசாயன உரங்களை உறுப்பினர்களுக்குப் பயிர்க்கடன்களின் ஒரு பகுதிக்கும், உறுப்பினர்களுக்கும் உறுப்பினர் அல்லாதவர்களுக்கும் ரொக்கத்திற்கும் தொடர்ந்து விநியோகித்து வருகின்றன. 1985-86ஆம் ஆண்டில் 73.38 கோடி ரூபாய் மதிப்புள்ள உரங்கள் விநியோகம் செய்யப்பட்டன. 1986-87ஆம் ஆண்டில் 82 கோடி ரூபாய் மதிப்புள்ள உரங்களை விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த 1985 சம்பா பருவத்தில் 4.57 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும் 1985 குறுவைப் பருவத்தில் 11.46 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும், 1986 சம்பா பருவத்தில் (7-6-86 வரை) 8.54 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும் விநியோகம் செய்துள்ளன.

மாநிலத்தில் 114 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. அவை தம் உறுப்பினர்களின் விளை பொருட்களை விற்பனை செய்வதன் மூலமாக, அவர்கள் நியாயமான வருமானம் பெறத்தொடர்ந்து உதவி செய்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாய விளை பொருட்களை விற்பனை செய்ததில் 1980-81ஆம் ஆண்டிலிருந்து அடைந்துள்ள முன்னேற்ற விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | விற்பனை செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களின் மதிப்பு (கோடி ரூபாயில்) |
|---|---|
| 1980-81 | 86.87 |
| 1981-82 | 89.98 |



| | |
|---|---|
| 1982-83 | 121.30 |
| 1983-84 | 99.76 |
| 1984-85 | 117.16 |
| 1985-86 | 149.29 |

காய்கறி பயிரிடுவோர்க்கு நியாயமான ஊதியம் கிடைப்பதுடன் நுகர்வோர்க்குத் தரமான காய்கறிகள் நியாயமான விலைகளில் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடனும் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையிலும் காய்கறி பயிரிடுவோர்க்கெனத் தனியே, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் குறைந்தபட்சம் ஒரு சங்கமென மாநிலத்தில் 544 காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1985-86ஆம் ஆண்டில் 5.78 கோடி ரூபாய் அளவிற்கு இச்சங்கங்கள் மூலம் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலமெங்கும், கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் நகையீட்டின் பேரில், குடும்பச் செலவிற்காகக் கடன்களை வழங்கி வருகின்றன. சவரன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வீதம், நபர் ஒருவருக்கு 6,000 ரூபாய்க்கு மேற்படாமல் இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்களின் பேரில் வசூலிக்கப்படும் வட்டி ஆண்டொன்றுக்கு 16 சதவீதமாகும். 1980-81 ஆம் ஆண்டிலிருந்து, இக்கடன்களை வழங்கியதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

1985-86 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நகையீட்டுக் கடன்கள் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு அதிகமாக வழங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 1981-82ஆம் ஆண்டிலிருந்து நலிந்த பிரிவினருக்குச் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களை மேற்கொள்ள சலுகை வட்டியில், அதாவது ஆண்டொன்றுக்கு 4 சதவீத வட்டிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன்களை வழங்கி வருகின்றன. சாதாரண வட்டிக்கும், இச்சலுகை வட்டிக்கும் உள்ள வித்தியாசத்தை அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமாக வழங்கி வருகிறது. ஆண்டு வருவாய் கிராமப்புறங்களில் 2500 ரூபாய்க்கும், ஓரளவு நகர்ப்புறங்களிலும், நகரங்களிலும் 3,000 ரூபாய்க்கும் அதிகமாகாமல் உள்ளவர்களுக்கு



நபர் ஜாமீன் பேரில் 7,000 ரூபாய் வரையில் இவ்வகைக் கடன்கள் வழங்கப்படுகின்றன. 1981-82 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட இவ்வகைக் கடன்களின் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன:

| ஆண்டு | வழங்கப்பட்ட கடன் (இலட்சம் ரூபாயில்) |
|---|---|
| 1981-82 | 85.74 |
| 1982-83 | 108.00 |
| 1983-84 | 130.57 |
| 1984-85 | 135.37 |
| 1985-86 | 191.98 |

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்த சில்லறை விற்பனையின் மதிப்பு 1984-85ஆம் ஆண்டில் 285 கோடி ரூபாயில் இருந்து கணிசமாகப் பெருகி 1985-86ஆம் ஆண்டில் 605 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளது.

இன்றியமையாப் பொருட்களை விற்பனை செய்ய ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாய விலைக்கடை துவக்கி நடத்த 1978ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கென ஒதுக்கப்பட்ட வருவாய் கிராமங்களில் 11,159 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டன.

தற்போது 12596 நியாய விலைக்கடைகள் ஊரகப் பகுதிகளில் நடத்தப்படுகின்றன. அவை ஊரகப் பகுதி மக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் தாராளமாகக் கிடைப்பதை உறுதி செய்கின்றன.

மாநிலத்தில் 13 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் 43694 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. முதலாவது பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் அமைக்கப்பட்டது. 1984-85ஆம் ஆண்டு வரை இச்சங்கங்கள் பயிரிடுவதற்கும் இதர உற்பத்திக் காரியங்களுக்கும் ஆண்டொன்றுக்கு 4 சதவீத சலுகை வட்டியில் கடன்களையும் இதர சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்கி வந்தன.

சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ள உதவும் திட்டம் 1982-83ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் ஒவ்வொருவருக்கும் செலவில் 25 சதவீத அளவிற்கு 1125 ரூபாய்க்கு மேற்படாமல் அரசு மானியம் அளிக்கிறது. மீதி செலவை மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதன் மூலம்கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்கப்படுகிறது. இவ்வுதவி உரிமம் பெற்ற சொந்தக்காரரே ஓட்டும் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. 1982-83-லிருந்து 1984-85வரை தென்சென்னை, வடசென்னை மற்றும் திண்டுக்கல் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களில் 217 பேர்களுக்கு அவர்களின் சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ள 2.15 இலட்சம் ரூபாய்க்கு அரசு மானியம் வழங்கப்பட்டது.

உலக உடல் ஊனமுற்றோர் ஆண்டாகிய 1981ஐக் கொண்டாடும் தருணத்தில், 1981-82 ஆம் ஆண்டில், மாநிலத்தில் ஐந்து உடல் ஊனமுற்றோர் நலக்கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது மாநிலத்தில் இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆறு உள்ளன. சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள இரண்டு சங்கங்களுக்கு, 1985-86ஆம் ஆண்டில் அரசு நிதி உதவி அளித்துள்ளது. 1986-87-ஆம் ஆண்டில் மேலும் இரண்டு சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும்.

தமிழக அரசு, மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும், நகர்ப்புற, நகராட்சி, மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர்ப் பகுதியிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காகத் திட்டமிட்டுத் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

கடந்த 1977-78 முதல் 1986-87 ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் அரசு மேற்கொண்ட பலமுனை நடவடிக்கைகளின் பயனாக 100 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியினைப் பெற்று வருகிறார்கள்.

செயலாக்கப்படும் குறைந்த பட்சத் தேவைத்திட்டம், டேனிடா, யுனிசெப், ஐரோப்பிய பொருளாதாரக் குழுமம், போன்ற பன்னாட்டு அமைப்புகள் மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிதியுதவியுடன் நிறைவேற்றப்பெறும் குடிநீர்த்திட்டங்கள், உலக வங்கி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வரும் குடிநீர்த்திட்டங்கள், இவை அனைத்தையும் ஒருமுனைப்படுத்திப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மாநிலத்தில் அனைத்து மக்களுக்கும் முழுப் பயன் அளிக்கும் வகையில் ''மக்கள் நல்வாழ்வே மாநிலத்தில் பெருவாழ்வு'' என்ற இலட்சிய நோக்குடன் குடிநீர்த்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

தமிழகத்தில் முதன்முறையாக 1976-77ல் அனைத்துக் குடியிருப்புகளிலும் உள்ள நீர் ஆதாரம், நீரின் தன்மை, நீர்ப் பற்றாக்குறை பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாநிலத்தில் உள்ள 18,167 குடியிருப்புகள் குடிநீர் வசதி பெறாத பிரச்சினைக் குடியிருப்புகளாக அறுதியிடப்பட்டு, அவைகளுக்குத் திட்டச் செயலாக்கத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட்டது. 1977-78அம் ஆண்டு 1140 குடியிருப்புகளில் ரூ. 7.15 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.


ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1980-85) 3,465 பிரச்சினைக் குடியிருப்புகளுக்கு ரூ. 25.97 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 31.3.1985-வுடன் முடிவு பெற்ற ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 11,614 பிரச்சினைக் குடியிருப்புகளுக்கும் மற்றும் புதிதாகத் தோன்றிய குடியிருப்புகளுக்கும் சேர்த்து மொத்தம் 16,505 குடியிருப்புகளுக்கு ரூ. 198.03 கோடி செலவில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டது.

புதிதாகத் தோன்றிய 2,486 குடியிருப்புகளையும், ஏற்கனவே குடிநீர் வசதி பெற்றிருந்தும், நீர் ஆதாரங்கள் வறண்டுபோய் விட்டதால் பிரச்சினைக் குடி




**ஊரகக் குடிநீர்த் திட்டம்**

மத்திய அரசு நிதியுதவியுடன் விரைவு படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டம், மாநில அரசின் நிதியிலிருந்து







யிருப்புகளாக மாறியுள்ள 12,340 குடியிருப்புகளையும் சேர்த்து நடப்பிலுள்ள 7வது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் 13,023 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி யளிக்கப்பட வேண்டியிருந்தது. அவற்றில் 10,900 குடியிருப்புகளில் குடிநீர்த்திட்டங்களை நிறைவேற்ற அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கான தமிழக அரசின் நிதி ரூ. 175 கோடி ஒதுக்கீட்டுடன், மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படும் மானியம் ரூ. 100- கோடியும் சேர்த்து மொத்தம் ரூ. 275 கோடியாகவும் 4 அதிக சக்தியுள்ள ஆழ் துளைப்பான்களையும், 75,000 மீட்டர் அளவு நீளம் பெரும் குழாய்களையும் அளித்துள்ளது. இதுவரை 2,300 பழைய கையிறைப்பான்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் 726 குடியிருப்புகளில் உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கக் கூடிய அளவுக்குக் குடிநீரில் ஃபுளோரைட் கலந்து இதனால் 40 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வெகுதூரத்தில் இருந்து நல்ல நீர் கொண்டு வந்து வழங்க ஐரோப்பிய பொருளாதார குழுமத்தின் நிதியுதவியுடன் 15.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பெரும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது.

கோவை, மதுரை, சேலம் இம் மூன்று நகரங்களிலும், 75 நடுத்தர நகரங்களிலும், 740 வழியோர ஊரகக் கிராமங்களிலும் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் 14 நகரங்களில் குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டங்கள் அளவிற்குத் திட்டக் காலத்தில் நிதி ஒதுக்கீட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

ஆக, 1977-78ஆம் ஆண்டில் 1,140 குடியிருப்புகளில் ரூ. 7.15 கோடி செலவில் சுமார் 3 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் குடிநீர்த்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 1985-86-ல் முடிவுற்ற ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 92.8 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் 16,505 குடியிருப்புகளுக்கு ரூ. 198.03 கோடி செலவில் குடிநீர் வழங்கப்பட்டது.

யுனிசெப் மற்றும் டேனிடா நிறுவனங்களின் உதவியோடு ஊரகப்பகுதிகளில் கையிறைப்பான்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை யுனிசெப் நிறுவனம் 20 ஆழ்துளையிடும் கருவிகளையும் 46 ஊர்திகளையும், 6615 கையிறைப்பான்களையும் தந்துள்ளது. அத்துடன் நம் மாநிலத்தில் உள்ள பழைய கையிறைப்பான்களுக்குப் பதிலாகப் புதிய இந்திய மார்க்-2 கையிறைப்பான்கள் அமைக்க டேனிடா நிறுவனம் ரூ. 72 இலட்சம் நிதி




## சுற்றுலா



இந்தியாவின் பேரெழில் பகுதி தமிழகமே என்று வருணிக்கிறது 'போடாரின்' இந்திய வழி காட்டி என்னும் நூல். தமிழகத்தின் குன்றாத சுற்றுலா வளம் ஆண்டுதோறும் தமிழக அரசால் அதிகரிக்கப்பட்டு வருகிறது. 1984-ஆம் ஆண்டைக் காட்டிலும் 1985-ல் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணிகள் எண்ணிக்கை 30.4 சதவீதம் அதிகரித்திருக்கிறது.

## ஆப்பிரிக்கக் குழந்தைகள் நல நிதி: தமிழகம் முதலிடம்!

ஆப்பிரிக்க நாட்டின் நலிவுற்ற குழந்தைகளின் மேம்பாட்டுக்காக 1986 மே மாதம் 25-ஆம் தேதி சென்னையில் நடத்தப்பட்ட 'ஸ்போர்ட்ஸ் எய்ட்' ஓட்டம் மற்றும் நிதி திரட்டல் மூலம் வசூலான பதினெட்டு இலட்ச ரூபாய்க்கான காசோலையை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி ஆர் அவர்கள் இந்திய விளையாட்டுக் குழுமத்தின் டைரக்டர் ஜெனரல் மேஜர் ஜெனரல் நரேந்தர் சிங் அவர்களிடம் 18-6-86 அன்று தலைமைச் செயலகத்தில் ஒப்படைத்தார்.



உலக வங்கியின் ரூ. 149.42 கோடி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் வரும் கைவிறைப்பான்களும், விசைவிறைப்பான்களும் சிறந்த முறையில் பராமரிக்கப்படவேண்டிய முக்கியத்துவம் கருதி இதுவரை ரூ.20.70 லட்சம் அளவிலேயே இருந்த அரசு மானியம் ரூ. 375 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. பொதுமக்களுக்குத் தங்கு தடையின்றிக் குடிநீர் வழங்கப்பெற எந்த ஒரு கைவிறைப்பானும் 7 நாள்களுக்கு மேல் பழுதடைந்த நிலையில் இருக்கக் கூடாது, என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். துருப்பிடித்து பழுதடைந்த நிலையில் உள்ளமேல்நிலைஇரும்பு (எஃகு) தொட்டிகளை மாற்றி அவற்றிற்குப் பதிலாக சிமெண்ட் தொட்டிகளை அமைக்க 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாகப் பருவ மழை பொய்த்ததன் காரணமாகத் தமிழ்நாடு முழுவதும் வறட்சி நிலை கடுமையாகியது. அப்போது ஏற்பட்ட குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க ரூ.43.95 கோடி செலவில் ஊரகப் பகுதிகளில் 22,230 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன.

1985-86ல் கோயம்புத்தூர், அண்ணா, சேலம், திருச்சி, மதுரை மற்றும் பெரியார் மாவட்டங்களில் மிகவும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவிய பகுகளில் 571 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. தற்போது 11 மாவட்டங்களில் நிலவி வரும் கடும் வறட்சியினால் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க 3,000 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும் மற்றும் லாரிகள் மூலமாகத் தண்ணீர் விநியோகம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



## சென்ற இதழில்....


உலகச் சுற்றுப்புறத் தூய்மைப் பாது காப்பு நாளையொட்டி 5.6.1986 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், தலைமைச் செயலக வளாகத்தில் மகிழ மரக் கன்றினை நட்டு வைத்த காட்சியைச் சென்ற இதழ் (16.6.86) அட்டை அலங்கரித்தது.



தமிழகத்தில் தற்போதுள்ள 652 பேரூராட்சிகள் 413 ஊரகப் பேரூராட்சிகள் என்றும், 219 நகரப் பேரூராட்சிகள் என்றும் வகைப் படுத்தப்பட்டு, ஊரகப் பேரூராட்சிகளில் முழு மானிய அளவில் குடிநீர்த் திட்டங்கள் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் இவற்றில் குடிநீர்த் திட்டங்கள் எதுவும் இல்லாத 277 ஊரகப் பேரூராட்சிகள் குடிநீர்த்திட்டங்கள் பெறும் வாய்ப்பினைப் பெற்றுள்ளன. அத்துடன் குடிநீர்த் திட்டங்களுக்கு என முன்பணமாகப் பேரூராட்சிகளிடமிருந்து பெறாமல் வடிவமைப்புப் பணிகளைக் குடிநீர் வாரியம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சென்னைப்பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் அமைக்கப்பட்ட பின் சென்னை நகரின் குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று அமைப்பின் அபிவிருத்திக்காகப் பல பணிகள் விரைவு படுத்தப்பட்டன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இவ்வாரியம் குடிநீர் வழங்குவதற்காக ரூ. 1,543 இலட்சம் செலவிலும், கழிவு நீரகற்றுவதற்காக ரூ. 2,018 இலட்சம் செலவிலும் பணிகளைச் செயல்படுத்தியுள்ளது.

சென்னை நகரில் 1978-ல் குடிநீர் மற்றும் தொழிற்சாலைகளின் தேவைக்காக நாள் ஒன்றுக்கு மொத்தம் 268 மில்லியன் லிட்டர் அளவுக்கே நீர் வழங்கப்பட்டது. தற்போது நாள் ஒன்றுக்கு 298 மில்லியன் லிட்டர் அளவு குடிநீர் வழங்கப் படுகிறது.



## காடுகள்

தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சமுதாயக் காடு வளர்ப்புத்திட்டம் இந்தியாவிலேயே இவ்வகையில் முதல் திட்டமாகும். சுவீடன் நாட்டு அரசின் உதவியோடு 45 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வனத்துறைப் பொருட்கள் ஏற்றுமதியால் நாட்டிற்குப் பெரிய அந்நியச் செலாவணி கிடைக்கிறது. உலகச் சந்தையில் விற்கப்பட்ட நமது சந்தன எண்ணெயின் அளவ 1,000 கிலோ ஆகும். அதனால் கிடைத்த வருமானம் 18.25 லட்ச ரூபாய் ஆகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


Exotic Designs for the New Year
A new range added in Chiffon, Polyester, Silk and Cotton sarees for you.
Visit Co-optex showroom.
Co-optex
Handlooms
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

